
# தாயகம்

ஜனவரி - மார்ச் 2010



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

50/=

கலை இலக்கிய சமூக விஞ்ஞான காலாண்டிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விக்கிரகம

சாவித்திரி ராஜீவன்

நான் மெல்ல மெல்லத் தேய்ந்தொழியும் ஒரு சமையற் பாண்டம்
நான் நடைபயிலும் ஒரு எளிமையான பொறி
ஏனெனில் அது சுவாசிக்கிறது, நடக்கிறது
சோற்றுடன் சேர்த்துச் சொற்களையும் பரிமாறுகிறது.

என்னுடைய குழந்தைகட்கு நான்
ஒவ்வொரு வகையான இனிப்பையும் தயாரிக்கும் ஒரு உபகரணம்
சில நேரங்களில் கடிப்பதை மறந்துவிட்ட ஒரு குரைக்கும் நாய்
அவர்கட்கு எறும்பையும் தேனீயையும் பற்றிய கதையைக் கற்பித்திருக்கிறேன்
அவர்கள் தமது நீதியைக் கற்றுள்ளனர்;
சிறியதால் பெரியதற்கு ஆணையிட இயலும்.

எனவே அவர்கள் தங்கள் தாயை மீறுகின்றனர்; மாறாக
அவளை, அவர்களது செல்லப் பாவைப்பிள்ளையை, அதிகாரம் செய்வார்கள்
கோவிலிலுள்ள தாழ்ந்த ஒற்றைக் கல்மேடையை நோக்கிப்
பாட மட்டுமே தகுதி வாய்ந்த
இந்தக் களிமண் கும்பத்தின்மேற் குதிப்பார்கள்.

நான் ஒரு பொதுமேடை ஏறுவதற்காகத்
தன் சமையலறையை விட்டுப் புறப்பட்ட ஒரு சமையற் பாண்டம்.
இன்னமும் ஒரு மத போதகன் பதிவுசெய்யாத
பத்துக்கும் மேற்பட்ட கட்டளைகளை
நாள் தோறும் என் தலைக்கு மேலாகக் காணுகிறேன்.

என் கண்காணிப்பாளர்களும் பார்வையாளர்களும்
கம்பிச் சட்டங்களின் பின்னால் நின்றவாறு
விலங்குகாண்கூடத்தின் காட்டு விலங்கொன்றுக்கு
ஆணையிடுவது போல எனக்கு ஆணையிடுவார்கள்
ஊஞ்சலில் அமர்ந்த பறவைகளும் விலங்குகளும் போல
நான் செய்கிற அனைத்தும் அவர்கட்குச் சிரிப்பூட்டும்.

சில நேரங்களில் நான் ஒரு பெண்தெய்வம்
நெற்றியில் சந்தனப் பூச்சு
கூந்தலில் துளசி இலைகள்;
சில நேரங்களில் கண்ணனின் நாணமிகு காதற் கிளத்தி
அல்லது தேவனின் அன்னை
கவிதையில் நான்
தென்றலில் நடமிடும் புனித வெண்டாமரை
தோத்திரங்களில் நான்
குருதி சொட்டும் அசுரனின் தலையைக் கைகளிற் பற்றிய
பயங்கரி காளி

ஆனாலும் நான் உண்மையை அறிவேன்!
நான் கோவிற் சிலையாகவும் கோவிலாகவும் மாற்றப்பட்ட
தேய்ந்து போன சமையற் பாண்டத்திற்கும் மேலாக ஒன்றுமில்லை

மலையாளத்திலிருந்து ஆங்கிலத்துக்கு:-
கே. சச்சிதானந்தன்
ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு:-
சி. சிவசேகரம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

புதியஜனநாயகம் புதியவாழ்வு புதியபண்பாடு

# தாயகம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்

**ஜனவரி - மார்ச் 2010**

**இதழ் இல. 77**

**பிரதம ஆசிரியர்**
க. தணிகாசலம்
தொ.பே. 021-2223629

**ஆசிரியர் குழு**
சி. சிவசேகரம்
குழந்தை ம. சண்முகலிங்கம்
கல்வயல் வே. குமாரசாமி
சோ. தேவராஜா
அழ. பகீரதன்
ஜெ. சற்குருநாதன்

**கணினி அச்சு, பக்க வடிவமைப்பு**
கு. மதுராளினி

**ஓவியங்கள்**
எஸ். டி. சாமி

**முன், பின் அட்டை ஓவியம்**
மார்ஜன் கொர்ஸ்ரவி, அமான் ஜோர்டன்

**தொடர்பு :** ஆசிரியர், ஆடியபாதம் வீதி, கொக்குவில். **021-2223629**
**மின்னஞ்சல்:** thayakam_1@ yahoo.com
**அச்சுப்பதிப்பு:** கௌரி அச்சகம் 011 2432477
**விநியோகம்:** 152 -1/6, ஹல்ற்ஸ்டோப் வீதி, கொழும்பு - 12
Tel 011 2381603

வெளியீடு
**தேசிய கலை இலக்கியப் பேரவை**

# மௌன எதிர்ப்பும் மாற்று அரசியலும்

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து விட்டது. இதுபற்றி பல வகையான விமர்சனங்கள் எழுந்தபோதும் யுத்தத்தின் வெற்றியை அங்கீகரிக் கவும் தொடந்தும் அதனை நிலை நிறுத்துவதற்கு மக்களிடம் பெற்ற ஒப்புதலாகவே இத் தேர்தலின் வெற்றியை நாம் கொள்ள முடியும். இக் கூற்றை உறுதிப்படுத்த வழமை போலவே இத் தேர்தற் பரப்புரைகளின் போது எழுந்த இரு பக்க இன வாத முனைப்பும். ஒப்பந்தக் கிழிப்பு பற்றிய வரலாற்று நினைவூட்டலும் போதுமானது. ஆனால் அன்னிய சக்திகளுக்கு அடிபணியாத ஒரு தேசபக்த அரசாக தன்னைக் காட்டிக்கொள்ளும் அரசால் யுத்தத்தால் ஒன்றுபடுத்திய நாட்டை தேர்தல் வெற்றியால் ஒன்றுபடுத்த முடியவில்லை. சிறுபான்மை இனங்கள் யுத்தப் பதிப்புகளுக்கான தமது மௌன எதிர்ப்பை தேர்தல் புறக்கணிப்பு மூலமும், எதிரான வாக்களிப்பு மூலமும் உறுதியாக வெளிப்படுத்தி யுள்ளமை கவனத்திற் கொள்ளபட வேண்டிய ஒன்றாகும்.

இலங்கையின் அறுபது ஆண்டுகளுக்கு மேலான இனவாத, அரசியலின் மொத்த அறுவடையாக நடந்து முடிந்த ஒரு யுத்தத்தின் காயங்கள் ஆறுமுன் இத் தேர்தல் நடைபெற்றது. அதில் மக்களின் பங்குபற்றல் என்பது அனைத்து அரசியல் தரப்பினரதும் மக்களுக்கு எதிரான தவறுகள் ஆழமான படிப்பினைகளுக்குப் பின்னரானது என்பதை இத் தேர்தலைப் புறக் கணித்த பெரும் எண்ணிக்கையான மக்கள் வெளிக்காட்டி நின்றனர். வாக்களிப்பின் அவசியம் பற்றிய ஊடகங்களின் பெருமெடுப்பான பிரசாரங்கள், அறிக்கைகள், விளம்பரங்கள் யாவையும் மீறி இப் புறக்கணிப்பு நடைபெற்றது. ஆனால் இம் மக்களது எதிர்ப்புணர்வுகளின் காரணங்களைக் கண்டறிவது தத்தமது அரசியல் நலன் சார்ந்த அரசியலுக்கு உகந்ததல்ல. தமிழர் விடுதலைக் கூட்டணி மக்களின் எதிர்ப்புணர்வு களைத் தனது வழமையான ஆட்சி மாற்ற ஆதரவு அரசியலாக மாற்றி மீண்டும் ஒப்பந்தக் கிழிப்பு கோஷம் எழுவதற்கு துணையாக நின்றது. அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...


**கவிதை**

ஜெயசீலன் 05
நல்லை அமிழ்தன் 11
சோ. பத்மநாதன் 15
பரதேசிப் பாவாணர் 18
வனஜா நடராஜா 22
பாமரன் 24
அழ. பகீரதன் 25
புதுமைப் பித்தன் 31, 33, 34
புலேந்தி திலீப்காந் 33
சி. கிருஷ்ணா 35
யாழினி 41
எல். வஸீம் அக்ரம் 43
கன்னிமுத்து வெல்லபதியான் 43
க. சுதர்சன் 46
புலோலியூர் வேல் நந்தன் 47

**சிறுகதை**

இதயராசன் 07
புவன ஈசுவரன் 12
இரா. சடகோபன் 16
தி. சி. ஜெகேந்திரன் 48

**மொழிபெயர்ப்புச் சிறுகதை**

தமிழில் சோ.பத்மநாதன் 29

**நாடக விமர்சனம்**

சி. சிவசேகரம் 26

**மொழிபெயர்ப்புக் கவிதை**

சி. சிவசேகரம் (முன் உள் அட்டை)
டிலாரா ஹ.்.பிஸ் 21
லாங்ஸ்ற்றன் ஹ்யூஸ் 51
அடோனிஸ் 52
மணி (பின் உள் அட்டை)

**பின்வரலாற்றியல் தொடர்கதை**

ஜெகதலப்பிரதாபன் 36

**விந்தை மனிதர்**

ஆராய்ச்சிமணி ஆதவா அ. சிந்தாமணி 44

**பாடல்கள்**

நா. வானமாமலை 08
ஆர்கொலோ சதுரர் நாடகப் பாடல் 39
நீலவாணன் பாடற் பகுதிகள் 47
நாட்டார் பாடல் 50


மூலம் பேரினவாத உணர்வைத் தென்னிலங்கை மக்களிடம் மேலும் பலப்படுத்த உதவியுள்ளது.

தாம் முன்னெடுத்து வந்த தவறான அரசியல் நிலைப்படுகளும் மக்கள் எதிர்கொண்ட பேரழிவுக்கு காரணமாக இருந்துள்ளன என்பதை சுயவிமர்சன மனப்பாங்குடன் மீளாய்வுக்கு உட்படுத்தி ஒரு புதிய திசையில் பயணிக்க முனையாமல் இனவாத அரசியல் மாயைக்குள் மீண்டும் மக்களை இட்டுச்செல்வது வரலாற்றுத் தவறுகளை மீளவும் செய்வதாகும். சாதாரண மரண வீட்டில் ஏற்படும் ஒற்றுமை கூட இப் பேரழிவுக்குப் பின்னர் பாதிக்கப்பட்ட தமிழ் அரசியல்வாதிகள் மத்தியில் ஏற்படவில்லை. புதிலாகப் பழிவாங்கும் உணர்வகளும், தேர்தலுக்கான பதவி அதிகாரப் போட்டிகளும் இழுபறிகளுமே இவர்களிடம் எஞ்சியுள்ளன.

ஜனநாயக அரசியலில் இன, மத, சாதி உணர்வுகளை வைத்து அரசியல் நடத்துவது அதிகார வர்க்கத்தினருக்கும், பதவி நலன்களுக்கான சுயநல அரசியலை நடத்துவோருக்கும் மக்களின் வாக்குகளைப் பெற இலகுவானது. ஆனால் பல்லினங்களைச் சேர்ந்த மக்கள் வாழும் நாட்டில் அத்தகைய குறுகிய அரசியல் வழிமுறை வாக்குவீத அடிப்படையில் பேரினவாத அரசியலுக்கு முண்டு கொடுப்பதற்கும், ஏனைய இனங்களை சலுகைக்காக கையேந்தும் இனங்களாக தொடர்ந்தும் வைப்பதற்குமே உதவி வந்தமை அறுபது ஆண்டுகளுக்கு மேலான நடைமுறை உண்மையாகும். அதுமட்டுமல்ல. இந்த நாட்டின் அனைத்து இனங்களையும் சேர்ந்த சாதாரண உழைக்கும் மக்கள் அனைவரையும் அடிமை நிலையிலும் வறுமையிலும் துன்பத்திலும் வாட்ட உதவுவதாகவே இவ் அரசியல் வழிமுறை அமைந்துள்ளது.

தேசிய அரசியலில் பங்குபற்றல் என்பது தென்னிலங்கை அதிகார வர்க்கத்துடன் ஏனைய இனங்களைச் சேர்ந்த அதிகார வர்க்கத்தினர் ஒன்றுபட்டு உறவாடுவதும் பிரிவதுமல்ல. இலங்கை நாட்டின் அனைத்தின மக்களும் எதுவித பேதங்களுமின்றி தமது வாழ்வாதார உரிமைகளை பெறகூடிய அரசியல் வழியில் உள விருப்புடன் ஒன்றிணைவதே தேசிய அரசியலாகும். பேரினவாத, குறுந்தேசியவாத




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் வழியில் தேசியத்தைக் கட்டமைக்க முடியாது. பாராளுமன்ற முறைக் கீழ் ஆட்சிகளையும், கட்சிகளையும், தலைவர்களையும் மாற்றுவதால் பேரினவாதத்தின் அடித்தளத்தைப் பெயர்க்க முடியாது. கடந்த காலத்திலே மாறிமாறி இதனையே இவர்கள் செய்து வந்தார்கள்.

பேரினவாதமும் குறுந் தேசியவாதமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல ஒன்றை ஒன்று எதிராகக் காட்டிக் கொண்டாலும் ஒன்றில் ஒன்று தங்கி நின்று ஊட்டம் பெற்று வளர்பவை. ஜனாதிபதித் தேர்தலின் நடைமுறையில் இதை நாம் கண்டுள்ளோம். அறுபது ஆண்டுகளுக்கு மேல் பெறுமதி மிக்கதாக மக்களுக்குக் காட்டப்படும் இந்த ஏமாற்றுப் போலி நாணயத்தை– இனவாத அரசியலை –செல்லுபடியற்றதாக்க வேண்டுமானால், மௌன எதிர்ப்புடன் நின்றுவிடாமல் குறுந் தேசியவாத அரசியலில் இருந்து மக்கள் முதலில் தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். இந்த நாட்டின் அனைத்தின மக்களும் தமது வாழ்வாதார உரிமைப் போராட்டங்களில் பேதங்களற்று ஒன்று கூடி அணிதிரள உதவும் மாற்று அரசியல் வழிமுறை தேர்வு செய்யப்பட வேண்டும். இதன் மூலமே பேரினவாதத்தை தோற்கடித்து இந்த நாடும் மக்களும் சுபீட்சமான சுதந்திர வாழ்வுக்கான புதிய வழியில் பயணிக்க முடியும்.

- ஆசிரியர் குழு -

# மீண்டும் வருவார்கள்

ஒரே பொய்களுடன், வெவ்வேறு முகங்களுடன் அவர்கள் எப்போதும் போல இப்போதும் வந்திருக்கிறார்கள். இப்போது மட்டுமல்ல. அப்போதும் எப்போதும் எத்தனை தடவை ஓட ஓட விரட்டியடித்தாலும் தொடர்ந்தும் வந்து கொண்டே இருப்பார்கள்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை எல்லாம் தீர்ப்பதற்கான மருந்து மந்திரங்கள் தம்மிடமே உள்ளன என்றுதான் எப்போதுமே சொல்லி வந்திருக்கிறார்கள். பாராளுமன்றத்தில் ஆங்கிலத்தில் பேசி எல்லாரையும் ஒரு உலுப்பு உலுப்புவார்கள் என்று சொன்னார்கள். சத்தியாகிரகம் செய்து சமஷ்டி, தனித் தமிழீழம் இனி நாடு கடந்த தமிழீழம் கூட வாங்கித் தருவதாகவும் சொல்லுவார்கள். ஆயுதப் போராட்டம் வெல்லுவது போலத் தெரிந்த போது அது தான் சரி என்றார்கள். அது தோற்கும் தறுவாயில் இருந்தது மட்டும் அவர்களுக்கு விளங்கவில்லை. தோற்ற பிறகு ஆயுதம் எடுத்ததே பிழை என்றார்கள். எப்போதும் எல்லாரும் எங்களுக்குச் சொல்லுவது என்ன? ''எங்களை மட்டுமே அங்கே அனுப்பி வையுங்கள் எல்லாம் சரிவரும்.'' அதைத் தான் வடக்கிலும் கிழக்கிலும் கேட்கிறோம் மலைய கத்திலும் கேட்கிறோம். தமிழரும் மலையகத் தமிழரும் முஸ்லிம்களும் ஒற்றுமைப்பட வேண்டும் என்றும் சொல்வார்கள். தமிழர் மட்டுமே ஒன்று பட்டால் போதும் என்கிற விதமாகவும் மலையகத் தமிழர் மட்டுமே ஒன்றுபட்டால் போதும் என்கிற விதமாகவும் முஸ்லிம்கள் மட்டுமே ஒன்றுபட்டால் போதும் என்கிற விதமாகவும் கூடச் சொல்லிக் கொள்வார்கள். இவர்கள் எல்லாரும் சொல்லுகிற ஒற்றுமை என்ன? மக்கள் ஒன்றுபட்டுச் செயற்படுவதா? ஒரு பொது நோக்கைக் கண்டறிந்து ஒன்றுபட்டுப் போராடுவதா? அப்படிப் பட்ட சின்ன விடயங்களில் எல்லாம் அவர்களுடைய கவனம் போகுமா? போகாது. மக்கள் ஒன்றுபட்டுத் தங்களுக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டும் என்று தான் அவர்கள் விரும்புகிறார்கள். அவர்கள் என்ன செய்வார்கள், எப்படிச் செய்வார்கள் என்றெல்லாம் எவரேன் கேட்டால் மக்களின் ஒற்றுமை குலைந்து விடும். எனவே ஒற்றுமையாக அவர்கள் சொன்ன அடையாளத்துக்கு எதிரே புள்ளடி போடுங்கள். அந்த ஒற்றுமையே வலிமை அதன் பிறகு அமெரிக்கா என்ன, ஐரோப்பிய ஒன்றியம் என்ன, ஐ.நா. சபை என்ன, இந்தியா என்ன, அராபிய ஷேக்குகள் என்ன எல்லாருமே வரிசையில் வந்து நின்று நம் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்களின் தனிப் பெரும் தலைவர்களை வணங்கி ஆசிபெற்று அவர்கள் சொல்லுகிற வரங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கிப் போவார்கள். இந்தப் பொய்யைப் பரப்ப ஊடகங்கள் துணை நிற்கின்றன. பெருந் தொகையான பணம் புகுந்து விளையாடுகிறது.

வடக்கின் தமிழர்கள் 1947, 1952 இல் ஒரு கட்சியைத் தான் ஆதரித்தார்கள் 1956 முதல் 77 வரை இன்னொரு கட்சியையே தெரிந்தார்கள். பிறகு கொஞ்சம் குழம்பிப்போய் இருந்தார்கள். பிறகு இரண்டு தடைவை ஒரே அணியைத் தான் ஆதரித்தார்கள். அத்தனை கூட்டங்களாலும் பாராளுமன்றத்திலோ வெளியிலோ ஒரு துரும்பைத் தன்னும் அசைக்க முடிந்ததா? மலையக மக்களின் ஒற்றுமை என்ற பேரில் ஒரு கட்சி நீண்ட காலமாக ஆதிக்கம் செலுத்தியது. முஸ்லிம் காங்கிரஸ் இன்னமும் கிழக்கில் அதி முக்கியமான முஸ்லிம் கட்சியாக உள்ளது. அமைச்சர் பதவிகளைப் பெறுவதை விட எதைச் சாதித்தார்கள்?

இன்று மூன்று தமிழ் பேசும் தேசிய சிறுபான்மைச் சமூகங்களதும் தேசியவாத கட்சிகள் பிளவுண்டு கிடக்கின்றன. பிளவில்லாத கட்சி கிடையாது. பிரித்தாள்வதன் மூலமே தலைமையைத் தக்கவைக்கிற தலைவர்கள் தான் கட்சிகளை நெறிப்படுத்துகிறார்கள். இன்று நாட்டில் பாராளுமன்ற அரசியலில் கட்சிகளே இல்லை என்று சொல்லுமளவுக்கு அரசியல் வாதிகள் யாரையும் விலைக்கு வாங்கலாம். முழுக் கட்சிகளையே விலைக்கு வாங்கலாம். சிலர் உள்ளூர்ச் சந்தையில் விலை போகிறார்கள். சிலர் வெளிநாட்டு வணிகர்களால் வாங்கி விற்கப் படுகிறார்கள். இவற்றில் ஒரு இரகசியமும் இல்லை. பாராளுமன்ற அரசியல் இங்கே அதன் முழுமையான வங்கலோட்டுத் தனத்தை எட்டி விட்டது. எனவே ஒரு மாற்று அரசியல் தேவைப் படுகிறது.

பாராளுமன்றத்தில் தங்களுக்குக் கிடைக்கிற நாற்கலிகளின் தொகையைக் காட்டி மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்காவிட்டாலும் மந்திரிப் பதவிகளைப் பெறலாம் என்ற காரணத்தாலேயே போட்டி நடக்கிறது. இந்தப் பாராளுமன்ற ஆட்சி என்பதே பூரணமான ஒரு கேலிக் கூத்தாக்கப்பட்டு நாட்டில் ஒரு அடக்குமுறை பொலிஸ் - இராணுவ ஆட்சி வரும் அபாயம் பற்றியும் நாம் விழிப்புடனிருக்க வேண்டும். அதற்கான சாடைகள் எப்போ திருந்தோ அரசியல் வானில் தெரிகின்றன. எனவே தான் மக்கள் குறிப்பாகச் சிறு பான்மையினர் இதுவரை காலமும் நடத்தப்பட்டு வந்த பாராளுமன்ற அரசியலிலிருந்தும் ஏமாற்று வேலைகளிலிருந்தும் விடுவது முக்கியமாகிறது.

நாம் காணக் கூடியதாக சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடும் புதிய ஜனநாயகக் கட்சியின் தேர்தல் அறிக்கை மட்டுமே நாட்டையும் அதன் தேசிய இனங்களையும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள், சாதிகள், பாலினர் என்போரையுங் குறித்த தெளிவான பார்வையையும் அவர்களது தேவைகளையும் நாட வேண்டிய தீர்வுகளையும் பற்றிப் பேசுகிறது. அதில் மட்டுமே பொய் வாக்குறுதிகளோ பாராளுமன்றத்தின் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்ற மயக்கமோ இல்லை. அக் கட்சி மட்டுமே தமிழ், முஸ்லிம், மலையக மக்களை உள்ளூர் அடக்குமுறையாளர் எவருக்குமோ அந்நிய ஆதிக்கக்காரர் எவருக்குமோ ஏலம் விடுகிற நோக்கின்றிச் சிந்திக்கிறது. எனவே இக் கட்சியின் வெற்றிகள், எவ்வளவு சிறியனவாயினும், நாட்டின் சனநாயகத்திற்கும் நல்ல எதிர் காலத்திற்குமான முன்னறிவிப்புக்களாக அமையும் என உறுதியுடன் கூறுகிறோம்.

**- ஆசிரியர் குழு -**

## தாயகம்

### வாசகர் வட்டங்கள்

தாயகம் வாசகர்களை ஒன்றிணைப் பதற்காகவும் ஆக்கபூர்வமான விமர்சனங்களை வெளிப்படுத்தி பரந்தளவில் தாயகம் சஞ்சிகையைப் பிரபல்யப்படுத்தவும் எழுத்தாளர்களையும் வாசகர்களையும் இலக்கிய ஆர்வலர்களையும் அவர்கள் வாழும் பகுதியில் பத்துப் பேருக்கு உட்பட்டதாக வாசகர் வட்டங்களை அமைக்கவும் அவற்றிடையே இணைப்பினை ஏற்படுத்தவும் தாயகம் ஆசிரியர் குழுவுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

- ஆசிரியர் குழு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த. ஜெயசீலன் கவிதைகள்

## வாரணங்கள் புகுந்த வயல்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

பெரிய, மிகப் பெரிய யானைகள் பசியாறும்
வயலாச்சு எங்கள் வயல்;
இந்த வயலிடையே
வசிக்கும் எலிகள் நாம்.
இந்த வயலை நம்பி
உயிர் வளர்த்துப் பாம்போடு போராடி
நொந்துபோன எலிகள் நாம்:
எம் பக்கம் நியாயம் இருந்தாலும்,
வயலெங்கள் பரம்பரையின் வழிவழியே வந்ததெனத்
திகழ்ந்தாலும்
யானைகளின் காலடி இடறலிலே
அகப்பட்டெம் வளைகள்
அடிக்கடி சிதைபட்டு
ஏதுஞ்செய்ய ஏலா வாளிகளாய் இருக்கின்றோம்!
யானைக்குப் பாம்புகள் பகையான போதினிலும்
''யானைகளின் துதிக்கைபோல்த் தான் நாமும்''
ஏன் இன்று பாம்புகள் பகர்ந்து
யானைகளின் கால்சுற்றி விளையாட
நாமோ வில்லங்கப் படுகின்றோம்.
எங்கள் இருப்புப் பற்றிப்
பாம்புக்கே கவலையில்லை,
எங்கள் இருப்புப்பற்றி
யானைக்கா வருங் கவலை?
யானைகள் தமது பசிக்குணவு கிடைக்குமட்டும்
நாம் திரிந்த வயல்களிற்தான் தங்கும்.
அது வரைக்கும்
நாமிருக்கவா முடியும்?
காலடிக்குள் நசிபட்டே நாம்அழியக் கூடும்!
நாங்கள் இந்த யானைகள் முன்
''நாமும் நும் வால் போல'' எனவுரைக்கவா ஏலும்?
நியாயம் அநியாயம் தர்மம்
இவைதாண்டிச்
சூழுமிவ் ஒழுங்குக்குள்
யாரும் கணக்கெடுக்கா...
அப்பாவிகள் எமது விருப்பங்கள் என்னாகும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமைச் சிறைத் துணை

அவர்கள் கதைப்பதற்கு அருகினிலே யாருமில்லை!
சுவர்களுடன் கதைக்கிறார்கள்,
சிலநேரம் காற்றோடும், சிலநேரம் வானோடும்,
சிலநேரம் தம்மைப்போல்
அனாதையாய் அலைகின்ற பேரறியாப் பறவையோடும்
வெளியே திரியத் தடைபோட்டு வைத்துள்ள
முட்கம்பி வேலியோடும்
மூர்க்கம் தணித்து
தங்களது ஆற்றாமை தனைநொந்து
மண்டியிட்டுத்
தரையில் அமர்ந்து
மண்ணோடும் கதைக்கிறார்கள்!
அவர்கள் கதைக்க அருகில் எவருமில்லை!
சிலநேரம் உற்றார் சிதறுண்டு
வேறு ஒரு
'வலயத்திலும்' இருந்திடலாம்.
விண்ணிலும் உறைந்திடலாம்.

கிளைகிளையாய் செழித்துக் கிடந்தவர்கள்
இன்றிங்கே
தனித்துத் தம் நிழலோடும்
தமக்குக் கிடைத்திருக்கும்
தறப்பாள், பிளாஸ்டிக் பாய்
தண்ணீர்க் குடம், வாளி
வகைவகையாய் அடையாள அட்டை
குடும்பக் காட்
இவற்றோடு
பொழுதுபோக்காய்க்
கதைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

---

## தூய கலை இலக்கிய வாதிகளும் பிரசாரமும்


மனித சமூக வாழ்க்கை என்பது தனிமனித வீர சாகசங்களாலானதல்ல. தனி மனிதர்கள் இடையிடையே, உண்மையில் அரிதாகவே, சமூகத்தின் சார்பாக இத்தகைய வெற்றிகளை ஈட்டுகின்றனர். பல சமயங்களில் தனி மனிதச் சாதனையின் பின்னாலுள்ள கூட்டு முயற்சி யாருக்கும் தெரியாதபடி மறைக்கப்பட்டு விடுகிறது. எந்தக் கருத்தையும் வற்புறுத்தாமல் படைப்பாளி எழுத வேண்டும் என்ற தூய அழகியல் நிலைப்பாடு இன்னொரு விதமாகப் படைப்பாளி மீது நிர்ப்பந்தங்களைத் திணிக்கிறது. ஒரு கருத்தை வற்புறுத்துவதற்கு ஒரு படைப்பாளி வலிந்து எதையும் புகுத்த வேண்டியதில்லை என்பதை இந்தத் தூய்மை வாதிகள் ஏற்கத் தயாராக இல்லை மறுபுறம், சில வகையான பிரசாரங்கள் இவர்களுக்கு உறுத்துவதில்லை. வேறு சில வகையானவை மிகவும் உறுத்தும்.

( நன்றி : புதிய பூமி, டிசம்பர் 2005)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயா



இதயராசன்

'டேய் வெளியால விடுங்கோடா. பாதுகாப்புக் குடுத்து வைச்சிருக்கிறியளோ?. கொழும்பிலை தழிழரைக் கொல்லுறாங்கள்: இங்கை சிங்களவனுக்கு அடைக்கலமோ! தமிழ்த் துரோகியள்...'

பொழுது மைம்மலுக்கை போகேக்கை சுமார் ஆறு முப்பதைத் தாண்டியிருக்க வேண்டும். முப்பது நாப்பது பேர் எமது வீட்டைச் சுற்றி வளைத்து விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

யாருடைய முகமும் இருட்டுக்கை தெளிவாகத் தெரியவில்லை. ஒன்று இரண்டு பேர் அடிக்கடி பார்த்த முகங்கள் மங்கலாகத் தெரிந்தன. அவர்கள் ஆளோடு ஆளாக மறைந்து நின்றனர்.

கூச்சலைக் கேட்டு தங்கச்சியவை இருவரும் அம்மாவின் சேலையைப் பிடித்தபடி மலங்க மலங்க முழித்துக் கொண்டிருந்தனர். அக்காளவை திகைத்து நின்றனர்.

கூட்டத்தை விலக்கிக்கொண்டு ஒரு வாட்டசாட்டமான பேர்வழி முன்னுக்கு வந்தான். அவனை ஐயாவுக்கு நன்கு தெரிந்திருக்க வேணும். ''அண்ண உங்கட வீடா, எனக்குத் தெரியாது. எல்லாரும் கூடி இந்த வீட்டிலை சிங்களவனை வைச்சிருக்கிறாங்கள் எண்டு குமுறிக்கொண்டு நிண்டாங்கள். ஆக்களை அடக்கிறது முடியாத வேலை. அதுதான் என்ன ஏது எண்டு பாப்பம் எண்டு வந்தனான்.'' முன்னுக்கு வந்த ஆசாமி ஐயாவிடம் ஓரளவு மரியாதையுடனும் மிரட்டுகின்ற தொனியிலும் கதைத்தான்.

''தம்பி எங்கட வீட்டிலை மட்டுமல்ல வேற ஆக்களின்ர வீட்டிலும் வேலைக்கு நிண்டவைதான். பிரச்சனை எண்டு தெரிஞ்ச உடன நாங்கள் அனுப்பிப் போட்டம். வேணுமெண்டால் வீட்டுக்கை போய்ப் பாரும்.'' ஐயா மிகவும் உறுதியோடு கூறினார்.

வந்த ஆசாமிக்கு ஐயாவின் வார்த்தையில் நம்பிக்கை வந்திருக்க வேணும். ஒப்புக்காக வாசற்படி மட்டும் வந்து எட்டிப்பார்த்து விட்டு. ''வீட்டிலை அவன் இல்லையடா வாங்கோ போவம்'' என்று வந்தவர்களைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்திருந்து ஒரு கீச்சுக்குரல் ஓங்கி ஒலித்தது. ''பொய் சொல்லி சிங்களவனை வைச்சிருந்தால் வீட்டோடை கொழுத்துவம்.'' வன்முறை ஒன்றுக்கு ஆர்வத்தோடு வந்த கூட்டம், அது ஈடேறாமற் போன ஏமாற்றத்தின் பிரதி பலிப்பாய் கீச்சுக்குரல்; வெளிப்பட்டது. பொறுத்த நேரத்தில் குறிதவறவிட்ட ஒற்றைப்பன்றிக்காக காலை ஓங்கி உதைக்கும் வேட்டைக்காரன் செயலை ஒத்ததாகவே எனக்குப் பட்டது.

எங்களின் வீடு, வயல்வெளியின் நடுவே திடலாகக் காணப்பட்ட பிட்டித்தரையில், கழிவாற்றங் கரையை ஒட்டிக் கட்டப்பட்டிருந்தது. இரண்டறையும், டானாப்பட விறாந்தையும், ஒரு போட்டிக்கோவுமாக இருந்தது. வீட்டு முற்றத்திற்குக் கிழக்கால தரைக்குச் சீமெந்து போட்டு, கிடுகு ஓலையால் வேய்ந்த குசினியும் இருந்தது. வீட்டுக்குத் தென்கிழக்குத் திசையில் உள்ள சிறிய மேட்டுநிலத் துண்டில் மிளகாய்க்கன்றுப் பாத்திக்குத் தண்ணிமாறிக் கொண்டிருந்த போது, நடந்த களேபரத்திலை எனக்குக் கையும் ஓடேல்ல காலும் ஓடேல்ல. சிலையாக நின்று விட்டேன்.

* * *

இப்ப வீடு கட்டியிருக்கிற புற்றுப்பிட்டியை இருட்டினபிறகும் நிலவு வெளிசத்திலை, ஐயா வெட்டினதும். அதில இருந்து பாம்பு ஒன்று படமெடுத்துக் கொண்டு வெளியிலை வந்ததும், நான் பயந்துகொண்டு ஓடியதும், ஐயா மண்வெட்டிப் புடங்கால அடித்து நெருப்பில போட்டுக் கொழுத்தியதும் இன்னும் மறக்க முடியாது. அப்பதான் பெரியண்ணாவுடன், நெருப்பு வெளிச்சத்தில் பளிச்சென்று பற்கள் தெரியும் சிரிப்புடன், கட்டையான சுருட்டை முடியுடைய கறுத்த உருவமாக அறிமுகமானார்.

ஐயாவுக்கு முன்பே தெரிந்திருக்க வேண்டும். ''ஆர் ஜெயாவோ வாடாப்பா 'வா. இஞ்ச வேலை முடியேல்ல செய்த வேலையை அரையும் குறையுமாய் விட்டிட்டு ஊரில திருவிழா எண்டு போயிட்டாங்கள்'' என்று குறைபட்டுக் கொண்டார். அன்று தொடக்கம் ஜெயா எங்களது வீட்டில் ஓர் உறுப்பினராகி விட்டார்.

அடுத்த இரண்டு மாதத்தில் தரை எல்லாம் சமன் செய்யப்பட்டு வீட்டுக்கான

## தாயகம்

### சந்தா விபரம்

**இலங்கை**

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | - ரூபா 300.00 |
| இரண்டு ஆண்டு | - ரூபா 600.00 |
| மூன்று ஆண்டு | - ரூபா 900.00 |

**கனடா**

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | - டொலர் 20.00 |
| இரண்டு ஆண்டு | - டொலர் 40.00 |
| மூன்று ஆண்டு | - டொலர் 60.00 |

**பிரித்தானியா**

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | - ஸ்ரேலிங்பவுண் 8.00 |
| இரண்டு ஆண்டு | - ஸ்ரேலிங்பவுண் 15.00 |
| மூன்று ஆண்டு | - ஸ்ரேலிங்பவுண் 20.00 |

**ஐரோப்பிய நாடுகள்**

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | - ஈரோ 10.00 |
| இரண்டு ஆண்டு | - ஈரோ 20.00 |
| மூன்று ஆண்டு | - ஈரோ 30.00 |

**அவுஸ்திரேலியா**

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | - டொலர் 20.00 |
| இரண்டு ஆண்டு | - டொலர் 40.00 |
| மூன்று ஆண்டு | - டொலர் 60.00 |

## தாலாட்டுப் பாடல்

சீரான அயோத்தி
சீமை விட்டு காடு வந்தோம்
காடு மலைகளிலே
கரடி புலி ஆளி சிங்கம்
கூடி வாழுமிந்த
கொடுவனத்தே நித்திரை போ
அச்சமில்லை என்று சொல்லி
அரசாண்டு வீற்றிருந்தோம்
நச்சரவு போல வந்த
நச்சிரையா கண்ணுறங்கு

**(சேலம் மாவட்டம்)**

**நன்றி : தமிழர் நாட்டுப் பாடல்கள்**
**தொகுப்பு : நா. வானமாமலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



அத்திவாரமும் வெட்டப்பட்டிருந்தது. குசினியிலை அம்மாவுக்கு உதவுறதிலை இருந்து வயல் வேலை, தோட்ட வேலை, இடையிலை மாடுகளை அவிழ்த்துக் கட்டுதல், கடைக்குப் போதல் என்று எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுச் செய்வதில் ஜெயாவுக்கு நிகர் ஜெயா தான்.

ஜெயா பேசும் போது மிகவும் நிதானமாகவும் ஆறுதலாகவும் அழுத்தந் திருத்தமாகத் தூய தமிழில் பேசுவார். மிகவும் மென்மையாகவும் தேவைக்கு ஏற்ற அளவு தொனியும் கொண்டிருக்கும்.

ஒரு முறை ஜெயாவுடன் எனக்கு ஏதோ ஒரு விடயமாக சண்டை வந்துவிட்டது. மரியாதை குறைவாகத் திட்டிவிட்டதாக ஞாபகம். அம்மா என்னை அழைத்து அதற்காகக் கடிந்துகொண்டார்.

''நீ சிறியவன், அவர் பெரியவர், அப்படி நடந்தது தவறு'' என்றும் ''பாவம் அவர் தூரத்தில் இருந்து அப்பா அம்மாவை விட்டு இங்கை வந்து கஷ்டப்படுகிறார்'' என்று பலவாறு எடுத்துக் கூறியதோடு அவர் சிங்கள மொழி பேசுபவர் என்ற விடயத்தையும் அப்போது தான் சொன்னார்.

எனக்கு ஒரே வியப்பு. ஜெயா சிங்களவரா! சொல்ல முடியாதே! பேக்கறியில் உள்ள குணசேனவும், காடுவெட்ட வந்த நந்த சேனாவும் தமிழ் சரியாகக் கதைத்தாலும் அவர்களின் உச்சரிப்பு புறம்பாகத் தெரியுமே! ஜெயா அசல் யாழ்ப்பாணத் தமிழ் உச்சரிப் பல்லவா? அம்மா சொல்லிற வரைக்கும் எனக்குக் கண்டுபிடிக்க முடியவில்லையே! ஒரே ஆச்சரியமாக இருந்தது. வெட்கத்தால் கூனிக் குறுகி ஜெயாவிடம் சென்றேன். அவர் அதே புன்னகை, எவ்வித கோபமோ குரோதமோ இல்லாமல் என்னை அணைத்துக் கொண்டார். எனக்குச் சொல்வதற்கு வார்த்தைகள் வரவில்லை. ஜெயா அம்மாவிடம் கோபித்துக் கொண்டார். சின்னவன் தானே, அவனுக்கு என்ன தெரியும் என்று முதுகில் தட்டிக் கொடுத்தார். அன்றிலிருந்து அவரின் சீடராகி விட்டேன் என்று தான் சொல்ல வேண்டும்.

நாங்கள் எல்லோரும் ஜெயா என்று அழைப்பது அவரது பெயரின் முற்பகுதி மட்டுமே. ஜெயரட்ணா தான் உண்மையான பெயர். நாவலப்பிட்டியில் உள்ள சோளங்கந்த தோட்டம் சொந்த ஊர். சின்ன வயசிலேயே கிளிநொச்சிப்பக்கம் யாருடனோ வந்து பல இடங்களில் வேலை செய்து, கடைசியாக ஒரு முதலாளியிடம் இரண்டு வருடமாக வேலை பார்த்த பின், ஊருக்குப் போகப் பணம் கேட்ட பொழுது, சாப்பாட்டிற்கும் உடுதுணிக்கும் சரியாய்ப் போச்சுதென்று கணக்குக் காட்டி விட்டாராம்.

அப்பொழுதுதான் என்ன செய்வதென்று தெரியாமல் கிளிநொச்சி நகரத்தில் அலைந்து கொண்டிருந்த போது, டிராக்டர் திருத்த வேலை செய்யப் போன அண்ணரிடம் எப்படியோ பழக்கமாகி, உடையார்கட்டுத் தோட்டத்தில் ஒருமாதம் வேலை செய்தபின், அண்ணாவின் உபயத்தில் ஊருக்குப் போய் விசுவாசத்துடன் மீண்டும் வந்து எங்களுடன் ஒருவராகிவிட்டார் ஜெயா என்னும் ஜெயரட்ணா.

ஜெயாவுக்கு அம்மாவும் ஒரு தங்கையும் இருப்பதாகக் கூறுவார். தங்கையிடமிருந்து, ஆங்கிலத்தில் முகவரி எழுதப்பட்ட கடிதம் மாதம் ஒரு முறையாவது வரும். ஆசையுடன் அம்மாவிடம் காட்டிக் கதைத்துக் கொள்வார். மற்றவர்களது கடிதத்தைப் பார்க்கக் கூடாது என்று ஐயா சொன்னது ஞாபகம் இருந்த போதிலும் சிங்கள எழுத்து எப்படியிருக்கும் என்று அறியும் ஆவலில் எட்டிப் பார்ப்பதுண்டு. முத்து முத்தாக உருட்டி உருட்டி அழகாக எழுதப் பட்டிருக்கும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சென் பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெற்ற களியாட்ட விழாவின் போது பொலிசாருடன் ஏற்பட்ட கைகலப்பினைத் தொடர்ந்து, அது தென்னிலங்கையில் இனக் கலவரமாக வெடித்ததை றேடியோ வாயிலாகக் கேட்ட பொழுது ஜெயாவின் முகத்தினைப் பார்க்க ஏலாது. புன்முறுவல் தவழும் முகமா அது, பேயறைந்தவர் போல் இருந்தார். அம்மா ஆறுதல் சொன்னார். ''உனக்கு ஒண்டும் நடக்காது, அப்பிடி நடக்க நாங்கள் விட்டிடுவமோ? நீ ஒண்டுக்கும் பயப்பிடாதை'' என்று தைரியம் ஊட்டினார்.

நேற்று இரவு பதட்டத்துடன் ஓடிவந்த சித்தப்பாதான் பிரசச்சினையின் விஸ்வ ரூபத்தினை எடுத்துச் சொன்னார். கொழும்பிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களின் வீடுகளும் கடைகளும் எரிக்கப் பட்டாச்செண்டும், அதில பல தமிழர் கொல்லப் பட்டதாகவும், அனேகமாக எல்லாத் தமிழரும் பொலிஸ் பாதுகாப்புடன் அகதி முகாமில் இருக்கினம், கப்பல்ல காங்கேசன்துறைக்கு மிக விரைவில அனுப்பிறதா அரசாங்கம் சொல்லியி இருக்கெண்டும் சொன்னார்.

வெளிக்கண்டல் சந்தியில இருந்த சிங்கள முதலாளிக்குச் சொந்தமான ஓட்டுத் தொழிற்சாலையைப் பின்னேரம் எரிச்சாச்சு; காவலுக்கு இருந்த சிங்களக் காவலாளியையும் அடிச்சுக் குறையுயிராப் போட்டிருக்கெண்டும், நடக்க இருக்கும் ஆபத்தினையும் எடுத்துச் சொன்னார்.

நிலைமையினைப் புரிந்துகொண்ட ஐயா, இனியும் ஜெயாவை எங்களுடன் வைத்திருப்பது புத்திசாலித்தனம் அல்ல, அது எல்லோருக்கும் ஆபத்தாக முடியும், இனவெறிகொண்ட கூட்டம் அங்க மட்டுமல்ல இங்கேயும் தனது கோரப்பற்களைக் காட்டத்தொடங்கி விட்டது என்பதைக் கூறி, இரவோடு இரவாக குறுக்குப் பாதையால் - அதுவும் காட்டு வழியால் ஜெயாவை உடையார்கட்டிற்கு கூட்டிக்கொண்டு போகும்படி பெரியண்ணாவிடம் கூறினார்.

இரவு பத்துமணியளவில் டிராக்டரில் பெரியண்ணாவுடன் ஜெயாவை வழியனுப்பி வைத்த காட்சி இன்னமும் மனக்கண்ணில் நிழலாடுகின்றது. எமக்கிடையேயான பாசப் பிணைப்பிற்கு வார்த்தைகள் போதுமானதல்ல. முகபாவமும் கண்ணீருமே துணை புரிந்தன.

தேராவிற் குளத்திற்கும் உடையார் கட்டுக் குளத்திற்கும் இடைப்பட்ட மேட்டு நிலத்தில் எங்களது தோட்டம் அமைந்துள்ளது. அது உண்மையில் காடுசூழ்ந்த பகுதி. பத்துப் பதினைந்து தோட்டத்துடன் சேர்ந்த வாடிகளைத்தவிர வேறு ஒன்றும் அயல் அட்டையில் இல்லை என்றே சொல்லலாம். எம்மைப் பொறுத்தவரையில் அவ்விடம் மிகவும் பாதுகாப்பான இடம். அதுதான் ஐயா அவ்விடத்தினைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும் என நினைக்கின்றேன்.

சிங்களம் மட்டும் சட்டம், ஸ்ரீக் குழப்பம் வந்தபோதெல்லாம் தென்னிலங்கையில் தமிழர் கொல்லப்பட்டதையும், தாக்கப்பட்டதையும் கதைகள் மூலம் வாசித்திருக்கிறேன். அப்பொழுது என்னிடம் ஒரு கேள்வி எழுவதுண்டு, ஏன் அங்குள்ள சிங்கள மக்கள் எல்லோரும் கெட்டவர்களா? நல்லவர்கள் இல்லையா? அப்படி இருந்தால் ஏன் கெட்ட இனத் துவேஷிகளை அடித்து விரட்ட வேண்டியதுதானே, ஏன்? மௌனி களாக கையாலாகாதவர்களாக ஒளிச்சு ஒளிச்சுத் தமது நண்பர்களை அகதிமுகாமில் ஒப்படைக்க வேண்டும் என்று. எனக்குச் சரியான விடை கிடைக்கவில்லை.

எமது வீட்டில் நடந்த நிகழ்வு எல்லா வற்றுக்கும் பதிலைச் சொல்லி நின்றது. இனத் துவேஷம் என்பது தலைவிரித்தாடும் போது சாமானியர்கள் அதில் கையாலாகாதவர்களாக நிற்கவேண்டியதுதான். ஒரு கொலைகாரக் கூட்டம் வெறி நாய்கள் போல் குலைத்துக் கொண்டு வரும் போது, அதை எதிர்பார்க்காத அப்பாவிகள் எதிர்த்தால், தலைதெறிக்க ஓடிக்கொண்டிருக்கும் குழுவன் கூட்டத்தில் அகப்பட்ட ஆட்டு மந்தைகளாக நசுங்கிப் போக வேண்டியதுதான். புத்திசாலித்தனமாக ஜெயாவை அனுப்பாமல் இருந்திருந்தால், ஜெயாவின் முடிவு நினைக்கவே பயங்கரமாக இருந்தது.

மழைக் காலத்தில் வயல்வெளிகளில் எல்லாம் வெள்ளம் மூடிக்கிடக்கும். வெள்ளம் வடிய மூன்று நாட்களாவது எடுக்கும். மழைவிட்ட நேரத்தில் வேட்டைக்காரர்கள் நாய்களுடன் முயல் வேட்டைக்குப் புறப்பட்டு விடுவார்கள்.

வெள்ளம் ஏறாத பிட்டிகளில் தஞ்சம் அடைந்திருக்கும் முயல்கள் மழை விட்டு வெய்யில் எறிக்கும் போது, துளிர்விட்ட புற்களைக் கடிப்பதற்கு ஒளிந்திருந்த இடங்களிலிருந்து வெளிவந்திருக்கும். அப்போது வேட்டை நாய்கள் விரட்டும். ஓடுவதற்கு தரை இருக்காது. எல்லா இடங்களிலும் வெள்ளம் மூடியிருக்கும். அது முயல்கள் தவிக்கும் தருணம். அப்போது தான் தவிச்ச முயல் அடிப்பார்கள் வேட்டைக்காரர்கள்.

ஜெயா போன்று தனித்துப் போக்கிடம் இன்றி இருப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை தாக்குவோருக்கும் தவிச்ச முயல் அடிக்கும் வேட்டைக்காரர்களுக்கும் ஒரு வித்தியாசமும் இருப்பதாய் எனக்குத் தெரிய வில்லை. இப்போது ஜெயா எமது பாதுகாப்புத்தேடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் தவிச்ச முயல். எமது உயிரைக் கொடுத்தும் அவரைக் காப்பது எமது கடன் என்பதில் எமது குடும்பம் மிக உறுதியாகவே இருக்கிறது. அதை நினைக்கும் போது, மற்றவர்கள் துரோகி காட்டிக் கொடுப்பவன் என்றெல்லலாம் எப்படி அழைத்தாலும் நான் எமது குடும்பத்தின் செயலுக்காக இன்றும் பெருமைப் படுகின்றேன்.

ஒரு மாதத்தின் பின் நிலைமை ஓரளவு வழமைக்கு வந்துவிட்டது. கொழும்பு யாழ்தேவி ஓடுவதாக ஐயா வந்து சொன்னார். ஜெயாவை என்ன செய்வது. ஜெயா ஊருக்குப் போகவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தார்.

ஜெயாவுக்கு வரும் கடிதம் ஆங்கிலத்தில் முகவரி எழுதப்பட்டு ஐயாவின் பெயருக்கே அனுப்பப்படுவதால் யாரும் கடிதத்தின் மீது சந்தேகப்படவில்லை. அதனால் கடிதப் போக்கு வரத்து தொடர்ந்து கொண்டிருந்தது.

ஒரு நாள் மாங்குளம் புகையிரத நிலையத்தில் வைத்து, ஜெயாவை அண்ணா வழியனுப்பினார். பத்திரமாய்ப் போய்ச் சேர்ந்ததாகவும் ஜெயாவின் அம்மாவும் தங்கையும் நன்றி தெரிவித்து, தோட்டத்தில் உள்ள தமிழ் தெரிந்தவர்கள் மூலம் எழுதப்பட்ட கடிதம் அனுப்பி இருந்தார்கள். அப்படி மூன்று நான்கு கடிதங்கள் வந்தன, பின்னர் கடிதங்கள் வருவதே இல்லை.

கால ஓட்டத்தில் நாட்டின் இன உறவுகள் தலைகீழாக மாறிவிட்டன. போராட்டம் உடமை இழப்பு, அநியாயச் சாவென அவலங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஜெயாவுக்கு நாங்கள் உதவியது போல எத்தனையோ பேர் தனித் தனித் தீவாக உதவியிருக்கலாம். இச் செயலால் இன உறவைப் பேணமுடியுமா? அநியா யத்தினை ஒழிக்க முடியுமா? அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. இப்போதுள்ள பிரச்சினை பூனைக்கு மணிகட்டுவது யார் என்பதுவேயாம்.

இத்தனைக்கும் மத்தியில் ஜெயா பற்றிய மனப்பதிவுகள் அப்பப்போ தலைநீட்டி, நாம் செய்யாத செயலுக்காக வரலாற்றுக் கடமையைச் சொல்லிக் கொண்டே இருக்கின்றது.

# ஒழுக்கம்

உடைகளின் வடிவங்கள்
மக்களின்
கண்களின்
மணிகளைக் கரைக்கின்றன.

கடைகளின் வண்ணங்கள்
பூக்களின்
மனங்களில்
போலிகளை விதைக்கின்றன.

திரைகளின் சன்னல்கள்
தேசத்தில்
அணுக்களில்
கறைகளை விதைக்கின்றன

வர்த்தக் கண்டுபிடிப்புகள்
வாழ்க்கையின்
வர்ணத்தை
நிர்வாண மிருகங்களாக்கின்றன.


**- நல்லை அமிழ்தன் -**


## தாயகம்
## ஆக்கங்களை வரவேற்கிறது

தாயகம் சஞ்சிகைக்கான சிறுகதை, கவிதை, கட்டுரை, முன் அட்டை, பின் அட்டைகளுக்கான ஓவியங்கள் ஆகியவற்றைப் படைப்பாளர்களிடமிருந்து வரவேற்கிறோம். ஆசிரியர் குழுவினால் தகுதி கண்டு பிரசுரிக்கப்படும். ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

க. தணிகாசலம்
பிரதம ஆசிரியர்
ஆடியபாதம் வீதி,
கொக்குவில்
தொ.பே. 021 2223629


Editor,
Thayakam
# 152-1/6,
Hulftsdorp Street,
Colombo - 12
T.P. 011 5024358,
011 2381603






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்முகம்



புவன ஈசுவரன்

நான் ஊரில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் எங்கள் அயலில் நாலைந்து வீடுகளுக்குத் துணி வெளுத்துக் கொடுப்பவர் சண்முகம் கட்டாடி. ஊருக்குள்ளேயே அவருடைய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சில அயல்களில் பெரும்பாலும் ஒரே வளவுக்குள் குடியிருப்பார்கள். நாங்கள் வளர்ந்த காலத்தில் ஊரில் இருந்து வந்த அடிமை குடிமை மரபுகள் பெருமளவும் தளர்ந்து விட்டன. என்றாலும் சில வழமைகள் தொடர்ந்து வந்தன. லோண்டரிகள் இன்னமும் ஊரில் நிலை பெறவில்லை. அதற்கு ஒரு காரணம் லோண்டரி வைத்து நடத்து வதற்கான பொருளாதார வசதி சலவைத் தொழிலாளர்கட்கு இல்லாதது, இன்னொன்று லோண்டரியில் போய்த் துணியைக் கொடுத்து வெளுப்பதற்கான செலவு ஊரிற் பெரும்பாலானவர்கட்குக் கட்டாதது. வீடுகளில் ஒழுங்காகத் துணியெடுப்பிக்கக் கூடிய சிறுபான்மையினரின் வீடுகட்குச் சலவைத் தொழிலாளர் போய் வரும் பழக்கம் தொடர்ந்தும் இருந்தது. இவையெல்லாம் ஊரின் வளர்ச்சியோடு மெல்ல மெல்ல மாறினாலும் அந்த மாற்றங்கள் எல்லாம் பழைய சாதிய ஏற்றத் தாழ்வு சார்ந்த சிந்தனைகளைத் தாமாக மாற்றிவிடவில்லை. தாழ் நிலையில் வைக்கப்பட்டிருந்தவர்கள் எல்லாருமே தமது உரிமைக்காகக் குரல் எழுப்ப வேண்டிய தேவையை உணர்ந்தவர்களல்ல. எனினும் நாட்டின் பிற பகுதிகளில் ஏற்பட்டு வந்த மாற்றங்கள் எங்கள் ஊரையும் கொஞ்சம் பாதித்தன.

பிற்படுத்தபட்ட சமூகத்தவர்கள் ஏன் கல்விகற்றுத் தங்கள் வாழ்வை உயர்த்திக் கொள்ள முடியாது என்று கேட்பவர்கள் இருக்கிறார்கள். விலக்காக உயர்ந்தவர்களைச் சுட்டிக்காட்டி, அவர்களைப் போல் மற்றவர்கள் ஏன் முன்னுக்கு வர இயலவில்லை என்றெல்லாம் வாதிப்பார்கள். அப்படி உயர்ந்தவர்கள் தங்களது ஒவ்வொரு சிறிய முன்னேற்றத்துக்கும் எவ்வளவு பாடுபட வேண்டியிருந்தது என்பதையும் அந்த முயற்சிக்கு ஏற்ற பலன் கிடைக்கிறதா என்பதையும் யாரும் கணக்கிட்டுப் பார்ப்பதில்லை. மிக எளிதாகவே ஒரு முழுச் சமூகத்தின் மீதும் சோம்பேறிகள், படிப்பில் அக்கறையற்றவர்கள் என்ற விதமாக முத்திரை குத்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் ஊரில் சலவைத் தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எட்டாம் வகுப்பிற்கு வருவதே அருமை. குடும்பத் தேவைகளும் மேற்படிப்புப் பற்றிய எதிர்ப் பார்பின்மையும் பல புத்திசாலிச் சிறுவர்களைப் பாடசாலையில் இருந்து கீழ் வகுப்புக்களோடேயே நிறுத்தி விட்டன. சண்முகம் ஐந்தாம் வகுப்புக் கூட படித்திருக்க மாட்டார். ஆனால் அவருக்குப் படிப்பில் ஒருவிதமான அக்கறை இருந்து வந்தது.

சண்முகம் இடமறிந்து சூழ்நிலையறிந்து நடந்து கொள்ளுவார். தன்னால் வெல்லக் கூடியதை அறிந்து அதற்காக முயலுவார். அவர் யாரோடும் வாக்குவாதப் படுவது அரிது. சில நேரங்களில் வீடுகளில் தங்களுடைய துணிகள் மாறிப் போய் விட்டன என்று வீட்டுக்காரர் குற்றஞ் சாட்டுவார்கள். நூற்றுக் கணக்கான துணி மணிகளை ஒன்றாகக் கொண்டு போய்க் கழுவுகிற இடத்தில் ஓரிரு தவறுகள் நேரலாம். ஆனால் சண்முகம் தொழிலை மிகவுங் கவனமாகவே செய்து வந்தார். அதைவிட அவருடைய நினைவாற்றலும் குறிப்பிடத்தக்கது.

சில நேரங்களில் வீட்டுக்காரர் துணியின் நிறத்தையோ துணியின் கோலத்தையோ குறிப்பிட்டு அதைக் காணவில்லை வேறு எதையோ மாற்றிக் கொண்டு வந்து விட்டார் என்றால் ''பிள்ளை அது போன வெள்ளையிலை தான் கழுவிக் கொண்டு வந்தன். உள்ளை தேடிப் பாரும் அகப்படும்'' என்பார். அதற்கு மேலும் யாரும் வற்புறுத்துவதில்லை அதைவிட ஒவ்வொரு உடுப்பிலும் ஒரு மூலையில் வீட்டை அடையாளம் படுத்துகிற விதமாகக் கறுப்பாகச் சிறிய ஒரு குறியும் இட்டிருக்கும். புத்தாடை என்றால் கொண்டு போன கையோடு குறிபோட்டுவிட்டுத்தான் கழுவக் கொண்டு போவது அவரது வழக்கம்.

கொழும்பில் தொடங்கிய மாதிரித் துண்டுக்கு இத்தனை சதம் என்றோ லோண்டரி மாதிரி வகைக்கு ஒரு கட்டணமோ கிடையாது. மாதத்துக்கு இத்தனை வெள்ளை என்று ஒரு கணக்கு. வீட்டில் வழமையாக எடுபடுகிற துணிகளுக்கு ஏற்றபடி ஒரு வெள்ளைக்கு இவ்வளவு என்று ஒரு கணக்கு. ஏதாவது தேவை, விசேடம் என்று கழுவுகிற துணிகளின் அளவு கூடி விட்டால், ''இந்த முறை கொஞ்சம் கூடக் கிடக்குது போல'' என்பார். வீட்டுக்காரரும் அதற்கேற்றப்படி காசு கூடக் கொடுபார்கள். வாக்குவாதத்துக்கு இடம் வையாமல் கறாராகக் கதையை வைத்துக் கொள்வார்.

பல இடங்களுக்கும் போய் வருவதால் ஊர்ப் புதினம் எல்லாம் அவருக்குத் தெரியும் என்றாலும் அவர் ஒருவரைப் பற்றி இன்னொரு வருக்குக் குற்றஞ் சொல்லிக் கதைத்தார் என்று சொல்ல இயலாத விதமாகக் கதையை மட்டுப்படுத்திக் கொள்வார். கலியாணம் போன்ற விடயங்களில் தரகர்மாரை விட வீட்டுக்காரர் காட்டாடிமாரைக் கூட நம்புவார்கள். சண்முகம் மறுமொழி சொல்லுகிற முறையிலிருந்து ஒரு விசயம் சரிவருமா வராதா என்று கண்டுபிடித்து விடலாம். அவர் போன்றோர் இப்படிப் கவனமாப் பேசுவதெல்லாம் சில மனிதர் தாங்கள் பரப்புகிற புனைவுகளை மற்றவர்கள் மீது சுமத்திவிட்டுப் போவதைப் பட்டறிவால் உணர்ந்ததன் பயனானது என்று தான் நினைக்கிறேன்.

சாதிப் பேர்கள் ஒடுக்கப்பட்ட சாதியினரை இழிவு படுத்துகிற முறையிலேயே அமைவதால் ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் தம்மைச் சாதிப் பேரால், குறிப்பாக ஒருமையிற், குறிப்பிடுவதை வெறுக்கின்றனர். ஒருமுறை ஒரு சிறுவன் சண்முகம் வருவதைக் கண்வுடன் வீட்டுக்குள் இருந்த தாயிடம் ''அம்மா ... வருது'' என்று கூவியது அவருக்குக் கேட்டுவிட்டது. சிறுவர்கள் பயன்படுத்தும் சொற்கள் பெரியவர்களிடம் இருந்து தானே வருகின்றன. சிறுவர்களைச் சினந்து பயனில்லை என்பதால் அவர் வீட்டுக்குள் வந்து அழுக்குத் துணிகளை மூட்டை கட்டும்போது சிறுவனின் தாயிடம் ''பிள்ளை, சின்னவைக்குக் கட்டாடி இல்லாட்டி டோபி எண்டு சொல்லிக் கொடுங்கோ'' என்று குரலில் எந்த விதமான கோபத்தையும் காட்டாமற் சொல்லி விட்டுப் போனார். அதன் பிறகு கூட அந்தப் பையனைக் காணுகிற போது கனிவாகவே பேசுவார்.

ஒரு நாள் எங்கள் வீட்டுக்குக் எதிர்பாராத விதமாகக் கையில் சிறிதாக ஒரு இனிப்புப் பொதியுடன் வந்தார். ''என்ன மகளுக்குக் கலியாணமோ?'' என்று அம்மா கேட்டார். ''இல்லையம்மா'' அதிலுஞ் சந்தோசமான புதினம். அவள் பி.ஏ. பாஸ்பண்ணி விட்டாள்'' என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன்மார் ஏழாம் எட்டாம் வகுப்புக்கு மேல் போக மறுத்த ஒரு நிலையில் கவனமாகப் படித்த மகள் எஸ்.எஸ்.சி. தேறிய கையோடு அவர் இந்தியாவுக்கு அனுப்பிப் படிப்பித்தார். அதற்கான பணம் முக்கியமாக அவர் சிறுகச் சிறுகச் சேர்ந்ததும் அவருடைய மனைவி சீட்டுப்போட்டு அவற்றைக் கொஞ்சம் பெருப்பித்தும் என்று பிறகு தான் தெரிய வந்தது. அதை விட உறவினர் களுடைய உதவியும் சிறிது இருந்தது.

அடுத்த பிரச்சினை மகளுக்கு எப்படித் தொழில் பெற்றுக் கொடுப்பது என்பது. ஏனென்றால் அக் காலத்தில் இந்தியப் பட்டங்களுக்கான உரிய அங்கீகாரம் இருக் கவில்லை. எனவே ஒரு பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெறுவது எளிதல்ல. வழமையான விண்ணப்பங்களைக் கூடப் பல்வேறு அடிப்படை களில் தட்டிக் கழித்து விடுவார்கள். சொல்லப் படுகிற காரணங்களை விடச் சொல்லப்படாத காரணங்களே முக்கியமானவை.

சண்முகம் தொகுதி எம்.பியிடம் நேரடியாகவே போய்த் தன் நிலைமையை விளங்கப் படுத்தினார். எம்.பி. முற்போக்கு வாதியென்று சொல்ல மாட்டேன். என்றாலும் சாதித் தடிப்பு அதிகம் இல்லாதவர். படித்தவர் களைக் கொஞ்சம் மதிப்பவர். எனவே உதவி செய்வதென்று முடிவெடுத்தார். அந்த முடிவு அரசியல் ரீதியாக அவருக்கு ஏற்படுத்தக் கூடிய லாபம், அதன் விளைவான உயர் சாதி அரசியல் நட்டத்தை ஈடு செய்திருக்கும் என்றே நினைக் கிறேன். அப்போது பண்டாரநாயக்காவின் ஆட்சி வந்திருந்தது. தஹநாயக்க கல்வி அமைச்சராக இருந்தார். எனவே, குறிப்பிட்ட பட்டதாரியின் பிற்படுத்தப்பட்ட சமூகச் சூழ்நிலையைக் கூறி, அந்தப் பின்னணியில் அவர் பெற்ற பட்டத்தின் பெறுமதி உயர்வானது என்று வலியுறுத்தி நேரடியாகவே அமைச்சரிடம் பரிந்துரைத்தார். அமைச்சர் பல வழிகளில் தனது முற்போக்கான சமூகச் சிந்தனையைக் கைவிடாதவராகவே இருந்ததால் பட்டதாரி ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது.

தன்னுடைய வருமனம் குடும்பத்தை ஆதரிக்கப் போதுமானதாக இருந்தது ஒரு புறம் இருக்கத், தகப்பன் வீடுவீடாகப் போய்த் துணி எடுப்பதைச் சக ஆசிரியர்கள் கேவலமாகப் பேசுவதைப் பற்றி மனக் கவலையும் மகளுக்கு இருந்தது. துணி எடுத்தாலும் எடுக்காவிட்டாலும் பரம்பரையில் ஒருவர் எடுத்ததைத் தலைமுறை தலைமுறையாகச் சுட்டிக் காட்டுகிற தமிழ்ச் சமூகத்தில் தகப்பன் என்ன முடிவை எடுத்தாலும் ஒன்று தான் என்பது மகளுக்கு விளங்காமல் இருந்திருக்கலாம். என்றாலும் இவ்வளவு காலமும் தன் படிப்புக்காக முறிந்த தகப்பனைத் தான் கவனிப்பது தான் சரி என்ற வாதத்தையே தகப்பனிடம் முன் வைத்தார். அதைத் தகப்பன் ஏற்கவில்லை. தன்னால் இயலாது போனால் பிள்ளைகள் உதவலாமே ஒழிய அவர்களை எதிர்ப்பார்த்துத் தன்னால் வாழ முடியாது என்று உறுதியாகச் சொல்லி விட்டார்.

மகளுக்கும் தகப்பனுக்கும் ஏற்பட்ட உடன்பாட்டின்படி, அப்போது வெள்ளை எடுத்து வந்த வீடுகளில் உள்ள மூத்தவர்கள் இருக்கும் வரை அந்த வீடுகளில் வெள்ளை எடுப்பது எனவும் மற்றவர்கள் கொண்டு வந்து தருவதையே கழுவுவது என்றும் ஏற்கப் பட்டது. அதன் பிறகு அவருடைய மகன்மாரில் ஒருவர் லோண்டரி நடத்தினாரென்று நினைக்கிறேன். இப்போது வீடுகளில் போய் வெள்ளை எடுப்பது ஏறத்தாழ இல்லாமற் போய் விட்டது. விசேடமான தேவைகட்காக வீடுகளுக்குப் போய் வருவார்கள். என்றாலும் கட்டணங்கள் எல்லாம் வேலைக்கு அளவானவையாக மாறி விட்டன.

சண்முகம் இறுதி வரை தன் தொழிலைப் பற்றியும் தனது திறமையைப் பற்றியும் பெருமையுடனேயே இருந்தார். வீடுகளுக்குப் போய் வெள்ளை எடுப்பது கூட அவருக்கு ஒரு பிரச்சினையில்லை. தன்னுடைய சுயமரியா தைக்குப் பங்கமில்லாமல் நடந்து கொள்ள, மாறி வந்த சமூகச் சூழலும் அவருக்குக் கை கொடுத்தது. தன்னுடைய பிள்ளைகள் படித்து முன்னுக்கு வருவதை விரும்பினார். தன்னுடைய தொழில் பரம்பரை பரம்பரையாக தொடர வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அவரிடம் இருக் கவில்லை. எனினும் தொழிலின் தன்மையே இன்று மாறிவிட்டது. பல ஊர்களில் அது இனி என்றும் தொண்டுழியம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தான் முந்துறும்

சோ. பத்மநாதன்

யாழ்ப்பாணம்-கொழும்புப் பயணம் சுமுகமாக இருந்த காலம்
நாளொன்றுக்கு நாலு ரயில், ஞாயிற்றுக் கிழமை ஐந்து
எல்லா வண்டிகளும் பயணிகளால் பிதுங்கியபடி!

அவசர அலுவலாக கொழும்பு செல்வோர்
இரவு மெயில் வண்டியில் போய்
காலை இறங்கி
பகற் பொழுதில்
சோலிகளை முடித்துக் கொண்டு
மீண்டும் மறுநாள் மெயிலில்
யாழ்ப்பாணம் திரும்புவர்

இந்த ஒருநாள் பயணிகள்
இளைப்பாறிக் கொள்ளும் வகைவாய்த்த
குளிர்தரு கோட்டை ரயில் நிலையத்தைப்
பார்த்தபடி இருந்த ''ஆனந்த பவன்''!
நியாய விலையில் சைவச் சாப்பாடு!
யாழ் ரயில் வரும்வேளை
கடை களை கட்டும்!

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

உத்தரதேவி
1.20 அளவில் கோட்டை வந்து சேர்ந்தது
ஸ்டேஷனிலிருந்து வெளியேறிய
வன்னியசிங்கம் றோட்டைக் கடந்து
ஆனந்தபவனுக்குள் நுழைந்தான்
பயணக்களை, பசி
''சாப்பாடு முடிந்திருக்குமோ?''
நல்ல வேளை, இருந்தது.

ஓடர் கொடுத்த பிறகே முகம் கழுவினான்
ஒதுக்குப்புறமான இருக்கைதேடி அமர்ந்தான்
பரிசாரகன் அமர்க்களமாக வரவேற்றான்
மல்லிகைப் பூப் போல சம்பாச் சோறு
மோர், ரசம், ஊறுகாய்,
அப்பளம், வடை, பாயாசம்!
(கொழும்பு, கொழும்பு தான்)
இலையில் அடுத்து விழுந்தது
மரவள்ளிக் கிழங்குக் கறி!
வன்னியசிங்கம் விவசாயி
சொந்தக் காணி நாலு பரப்பு
மரவள்ளி பயிரிட்டிருக்கிறான்!
தினமும் வீட்டில் கிழங்குக் கறி!
சொன்னான்:
''நான்தான்
கடுகதியிலை வந்து சேர்ந்திட்டன் என்று நினைச்சன்
எனக்கு முன்னாலை நீ வந்திட்டாய்!''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புன்னகை மறைந்த அந்த நாளில்...



இரா. சடகோபன்

அந்தச் சம்பவம் நடந்து மூன்று தசாப்தங்கள் கழிந்து விட்டன. ஆனால் நான் எப்போதெல்லாம் எனது கடந்த காலத்தைப் பற்றி நினைத்துப் பார்க்கிறேனோ அப்போதெல்லாம் முதன் முதலாக என் நினைவுக்கு வருவது அந்தச் சம்பவந்தான். அந்தச் சம்பவம் என் மனதில் அத்தகைய ஆழமான வடுவை ஏற்படுத்தியிருந்தது. அத்தகைய ஒரு துயர சம்பவம் யாருக்கும் நிகழக் கூடாது என்று எனக்குப் பட்டதால் உங்களுக்கும் கூறநினைத்தேன்.

நகரத்தை சற்றே தாண்டி ஒரு மலைக் குன்றின் சாரலில் அந்தப் பாடசாலை அமைந்திருந்தது. அது ஒரு சிறிய குன்றுதான். மலையின் உச்சிக்குச் செல்ல ஒரு நேரான கம்பியை எட்டாக வளைத்து வைத்தது போல் ஒரு பாதை.

நாவலப்பிட்டி என்ற நகரம் மத்திய மலைநாட்டின் எல்லையில் அமைந்திருந்தது. அந்த நகரத்தை நாவல் நகர் என்று செல்லமாக அழைப்பார்கள். அந்த நகரத்தை ஒரு சுற்றுச் சுற்றி விட்டுத்தான் மகாவலி கங்கை கிழக்கு நோக்கித் திரும்புகிறது. மகாவலி கங்கைக்கும் எங்கள் பாடசாலைக்கும் நடுவில் தான் நகரின் பெரிய விளையாட்டு மைதானம் இருந்தது. அந்த விளையாட்டு மைதானத்தில் விளையாடச் சென்ற போதெல்லாம் நாங்கள் மகாவலி கங்கையில் குளிக்கத் தவறுவதில்லை.

அப்போது நாங்கள் கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பில் கல்வி பயின்று கொண்டிருந்தோம். எங்கள் பாடசாலையில் தமிழ் இலக்கிய மன்றம் நீண்ட காலமாக இயங்கி வந்தது.

■■

ஏதோ காரணத்தின் நிமித்தம் அங்கிருந்து விலகி எங்கள் பாடசாலையில் சேர்ந்திருக்கிறான். அவன் கொஞ்சம் பணக்காரப் பையன். பணத்தை அள்ளி வீசிச் செலவழிப்பானாம்.

■■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் எமது இலக்கிய மன்ற வாயிலாகப் பல கலை, இலக்கிய நிகழ்ச்சிகளைத் தயாரித்து மேடையேற்றினோம். தேசிய நாடகப் போட்டிகளில் கலந்து கொண்டு பாடசாலைக்கு பல விருதுகளைப் பெற்றுக் கொடுத்தோம். இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் அமைவது தான் வருடாந்தம் நாங்கள் வெளியிடும் "அருவி" இலக்கிய சஞ்சிகை. இந்த மலரைச் சிறப்பாக அச்சிட்டு வெளியிடவும் அவ் வெளியீட்டு விழாவை பெரு விழாவாகச் செய்யவும் என்னைத் தலைவராகக் கொண்ட கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. அதிபரும் மன்றத்துக்குப் பொறுப்பாசிரியராக இயங்கிய எங்கள் புவியியல் பாட ஆசிரியரும் எமக்கு பெரும் உற்சாகத்தைத் தந்தார்கள்.

மலரை அச்சிடுவதற்கும் விழா ஏற்பாடு செய்வதற்கும் போதுமான நிதியைத் திரட்டுவதே எமக்கு அப்போது மனதைக் கசக்கும் பிரச்சனையாக இருந்தது. மலர் அச்சிடுவதற்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவும் விழா ஏற்பாட்டுக்கு மூவாயிரம் ரூபாவும் செலவாகலாம் என மதிப்பீடு செய்திருந்தோம். நிதி தொடர்பாக அதிபரை அணுகி ஆலோசனை கேட்டபோது பாடசாலை நிதியில் இருந்து பணம் செலவிடு வதை விடுத்துக் கூடுமானவரை பாடசாலையின் பழைய மாணவர் சங்கம், பெற்றோர், நகரத்தின் வர்த்தகப் பிரமுகர்கள் வாயிலாக நிதி திரட்டிக் கெள்ளும்படி அதிபர் ஆலோசனை தெரிவித்து அனுமதி வழங்கினார். விழாவுக்கு ஒன்றரை மாதம் தள்ளி நாட் குறித்தோம். பிரதம விருந்தினராகப் பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்து தமிழ்ப் பேராசிரியரை அழைப்பதற்குத் தான் உதவுவதாக எங்கள் மன்றத்தின் பொறுப் பாசிரியரும் புவியியல் பாட ஆசிரியருமான குலசேகரன் மாஸ்டர் உறுதியளித்தமை எமது உற்சாகத்தைக் கரைபுரளச் செய்தது. குலசேகரன் மாஸ்டர் அப்போது தான் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இருந்து வெளி வந்திருந்த இளம் பட்டதாரி. அவருக்கு இப்போதும் பல்கலைக்கழ கத்துடன் மிகுந்த தொடர்பிருந்தது. அவர் பல விதங்களில் எமக்கு வழிகாட்டியாக இருந்தார். மனித நேயம் என்றால் என்ன என்பதை எமக்கு புரிய வைத்தவர் அவர் தான்.

அடுத்த இரண்டு வாரங்களை நாம் நிதி திரட்டுவதிலேயே செலவிட்டோம். அன்றைய கால கட்டத்தில் நாம் திரட்ட வேண்டியிருந்த தொகை எமது சக்திக்கு அப்பாற்பட்டதாகவே இருந்தது. நாங்கள் நன்கொடை வசூலிப்பதற்கு வசதியாக ரூ. 50/- ரூ. 100/- ரூ. 200/- என்று வேறு வேறான பட்டியல்கள் தயாரித்துக் கொண்டோம். 'அருவி ' சஞ்சிகையை அச்சகத்தில் அச்சிடக் கொடுக்கும் போது அவர்களுக்கு முற்பணம் கொடுக்க வேண்டியிருந்தது.

நாங்கள் இது பற்றி யோசித்துக் கொண்டிருந்த போதுதான் மன்றச் செயலாளராகப் பதவி வகித்த செல்வா என்ற செல்வகுமாரன், சிங்கார் என்ற சிங்காரவேலன் என்ற மாணவனை அழைத்து வந்தான்.

சிங்கார் அண்மையில்தான் எமது பாட சாலையின் உயர்வகுப்பில் விஞ்ஞான பிரிவில் சேர்ந்திருந்தான். இதற்கு முன் கண்டி நகரில் பெரிய பாடசாலையில் படித்தானாம். ஏதோ காரணத்தின் நிமித்தம் அங்கிருந்து விலகி எங்கள் பாடசாலையில் சேர்ந்திருக்கிறான். அவன் கொஞ்சம் பணக்காரப் பையன். பணத்தை அள்ளி வீசிச் செலவழிப்பானாம். இவை நாம் கேள்விப்பட்ட விடயங்கள். அவனுடன் பழகும் வாய்ப்பு எனக்கு இன்னமும் கிடைக்க வில்லை.

''சிங்கார் தன் அப்பாவிடம் சொல்லி நமக்கு கொஞ்சம் டொனேசன் வாங்கித் தருகிறேன்'' என சொல்கிறான் என்று செல்வா எனக்குக் கூறினான்.

''அப்படியானால் அவனிடமும் ஒரு நன்கொடைப் பட்டியலைக் கொடுப்போமே. அவனால் முடிந்தளவு பணம் தரலாம் தானே'' நான் கூறினேன்.

''அப்படி அவனால் முடியாதாம். நாம் வீட்டுக்கு வந்தால் அப்பாவிடம் கூறி ரூ. 2500ஐத் தன்னால் பெற்று தர முடியும் என்கிறான்''

''அது பெரிய தொகை. ஒரேடியாக கிடைக்குமென்றால் பெரிய காரியம். நாளையே போகலாம்'' நான் ஆமோதித்தேன்.

''ஆனால் அவன் வீடு துாரத்தில் இருக்கிறது''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எங்கே''

''நுவரெலியா நகருக்கு அப்பால் இரும்புப் பாலம் என்ற இடத்துக்கு அருகில்''

''அங்கே போவது சாத்தியப்படுமா செல்வா. ஒருநாளில் போய் வருவது முடிகிற காரியமில்ல''. நான் தயங்கிய படியே கூறினேன்.

''இல்லை, நாம் சனிக்கிழமை பகல் கோச்சியில் போனால் அன்றிரவு அவர்கள் வீட்டில் தங்கியிருந்து விட்டு அடுத்த நாள் காலையே புறப்பட்டு வந்து விடலாமாம்'' செல்வா சொன்னதை சிங்கார் உறுதிப்படுத்தினான்.

நாங்கள் இது நாள்வரை அறிமுகமில்லாத மூன்றாவது நபர் வீட்டில் தனியாகச் சென்று இரவு தங்கியது கிடையாது. எனினும் அருகில் உள்ள அருவியுடன் கூடிய காட்டுக்குள் சென்று பாசறையமைத்து மூன்று நான்கு நாட்கள் தங்கியிருந்திருக்கிறோம். அதனால் கொஞ்சம் கூச்சமாக இருந்தது.

இருந்தாலும் சிங்கார் வாங்கித் தருவதாகச் சொன்ன தொகை பெரிதாக இருந்ததால் ஒத்துக் கொண்டேன். நானும் செல்வாவும் மலராசிரியர் றொபர்ட் அந்தனியும் செல்வதென்று ஏற்பாடாயிற்று. சிங்கார் வெள்ளிக்கிழமை பின்னேரமே சென்று வீட்டில் கூறித் தயார்ப்படுத்தி வைத்திருப்பதாகக் கூறினான்.

ஏனோ தெரியவில்லை எனக்கு படிப்பை விட இத்தகைய கலை, இலக்கியம் மற்றும் பொது வேலைகள் என்றால் அன்னந்தாகம் பசியின்றி உழைப்பேன். என் தங்கை தம்பிகள் படிப்பு என்று படிப்பில் மூழ்கிப் போயிருப்பார்கள். நான் எப்போதுமே வீட்டில் பகல் தங்கியது கிடையாது. பகலெல்லாம் நண்பர்களுடன் இத்தகைய வேலைகளில் கழித்துவிட்டு இரவு வெகு நேரம் சென்றதும் தான் வீடு திரும்புவேன். இதனால் வீட்டில் ''தறுதலை'' என்று பட்டம் சூட்டியிருந்தார்கள்.

அந்த சனிக்கிழமை நாங்கள் அதி காலையிலேயே பாடசாலையில் கூடினோம். அன்றிரவு நுவரெலியா போகிறோம் என்பதால் இரவுக்கு வீட்டுக்கு வரமாட்டோம் என்று முன் கூட்டியே தெரிவித்து விட்டோம்.

## எல்லார்க்கும் எல்லாமாய் அமைந்தார் புகழ் மாலை

யாதுமாகி நின்றாய் - ஐயா
எங்கும் நீ நுழைந்தாய் - உலகில்
தீது நன்மை எல்லாம் - காசு
பதவி முன்பு பெறுமோ

இடது சாரி என்பாய் - முன்னம்
இருந்த கதைகள் சொல்வாய் - கொள்கை
நடுவில் மாறினாலும் - பழியில்
நழுவும் பாதை கண்டாய்

கூட்டணிக்குப் பின்னால் - இன்று
பாட்டுப் பாடும் போதும் - அரசு
ஆட்சியாளரோடும் - அளவாய்
உறவு பேணுகின்றாய்

அறிவிலாத துறைகள் - தமிலும்
பதவி தேட வல்லாய் - யாரும்
பரிசு நிதியமென்றால் - பகைமை
பார்த்திடாது கொள்வாய்

சொன்ன வார்த்தை தன்னை - யாரும்
என்னவென்று தெளிவாய் - பொருளைக்
கண்டு கொண்டிடாத - வண்ணம்
கதைகள் சொல்ல வல்லாய்

சாதி சமயம் ஊர் உன் - பழைய
பாடசாலை என்றும் - ஒவ்வோர்
பேதம் சொல்லி வாழ்வாய் - வேண்டின்
பேதமில்லை என்பாய்

ஆளுக்கேற்ற வண்ணம் - சூழல்
இடத்துக் கேற்ற வண்ணம் - அவ்வவ்
வேளைக்கேற்ற வண்ணம் - கதைகள்
வேறு வேறு சொல்வாய்

முன்னை நாட் பகைவர் - உன்னை
மெச்ச வேண்டி நீயும் - முன்னர்
சொன்ன சொற்கள் மாற்றி - சொல்லிற்
சித்து வேலை செய்வாய்

எத்தி வாழும் காக்கை - நரியை
எவரும் மெச்சினாலும் - நல்ல
புத்தியுள் பேர்கள் - உன்னைப்
புகழ ஞாய முண்டோ?

- பரதேசிப் பாவாணர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகல் முழுவதும் எங்களுக்கு மலர் தொடர்பானதும் விழா தொடர்பானதுமான வேலைகள் நிறைய இருந்தன. அவற்றையெல்லாம் முடித்து விட்டு மத்தியானத்துக்கு மேலேயே நானு ஓயா நோக்கிச் செல்லும் கோச்சியைப் பிடித்தோம். நேரடியாக நுவரெலியா நகருக்கு ரயில் போகாது. நானு ஓயாவில் இருந்து நுவரெலியாவுக்குச் சென்று அதன் பின் இரும்புப் பாலத்திற்கு செல்ல வேண்டும்.

சிங்காரின் தந்தை தொழில் பார்க்கும் தோட்டம் ஒரு பிரசித்தமான தோட்டமாக இருந்ததால் அதனைக் கண்டு பிடிப்பது கடினமானதாக இருக்காதென நான் நினைத்தேன். நாங்கள் மூவரும் ஒருவாறு காத்திருந்து பஸ்ஸைப் பிடித்து அந்த தோட்டத்தைச் சென்றடைந்தோம்.

சிங்காரின் தந்தை தோட்டத் துரையாதலால், சுப்பபிரிண்டன் பங்களாவைக் கண்டு பிடிப்பது இலகுவாக இருந்தது. ஆனால் பிரதான பாதையில் இருந்து குறுக்குப் பாதையூடாக சுமார் ஒன்றரை கிலோமீட்டர் தேயிலை மலைமேல் நடக்க வேண்டியிருந்து.

மாலை மறைந்து இருள் சூழ ஆரம்பித்தது. அதற்கேற்றாற் போல் பனி மூட்டம், நுவரெலியாக் குளிரை விட இங்கு குளிர் அதிகமாக இருந்தது. எங்கள் கரங்கள் சில்லிட்டுப் போகவே நாங்கள் கைகளை காற்சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டோம்.

சுப்ரின்டன் பங்களா பெக்டரியைத் தாண்டித் தோட்டத்தின் நடு நாயகமாக விளங்கியது. சுற்றிவரக் கனத்த வேலியும் வாயிலில் பெரிய கேட்டும் போட்டிருந்தது. அத்தகைய ஒரு பங்களாவுக்குள் எங்கள் வாழ்வில் நுழைந்தது கிடையாது. இன்று சிங்காரின் தயவால் ஒருநாள் அங்கு தங்கப் போகிறோம் என்ற நினைப்பு மகிழ்ச்சியைத் தந்தாலும் அது அந்நியமாகவும் ஒரு கூச்ச உணர்வையும் தந்தது.

நாங்கள் கதவைத் தட்டினோம். எங்களை எதிர்பார்த்திருந்தவன் போல் சிங்கார் வீட்டிக்குள்ளிலிருந்து ஓடி வந்தான். அவன் கேட்டைத் திறந்து எங்களை உள்ளே அழைத்துச் சென்றான். அங்கே கூடத்தில் எங்களை அமரச் செய்தான்.

''என்ன சிங்கார் எல்லாம் சரியா'' நான் தான் மௌனத்தைக் கலைத்தேன்.

அவன் பதில் பேசவில்லை. எங்கள் முகத்தை நேருக்கு நேர் பார்க்கத் தயங்கினான். நான் வந்த உடனேயே அவன் முகத்தைப் பார்த்தேன். அதில் சந்தோசமில்லை. நண்பர்களை சந்தித்த பூரிப்பு இல்லை. புன்னகை இல்லை.

என்ன நடந்திருக்கும்? என் மனதில் முதன் முறையாக ஒரு பய உணர்வு தோன்றியது. இவ்வளவு தூரம் வந்திருக்கிறோம். வந்த காரியம் கை கூடுமா என்ற சந்தேகமும் கூடவே எழுந்தது. சிங்கார் என் கேள்விக்கு ஒன்றுமே பதில் பேசாமல் தலையாட்டினான். அவன் சிரமப்பட்டு புன்னகைக்க முயன்றான். எங்களுக்கு குடிக்க ஏதாவது கொண்டு வருவதாகச் சொல்லி உள்ளே சென்றான்.

நாங்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டோம். செல்வாவுக்கும் றொபர்ட்டுக்கும் கூட சந்தேகம் ஏற்பட்டிருக்க வேண்டும். அவர்களின் கண்களில் கேள்விக் குறிகள் தெரிந்தன. நான் சுற்று முற்றும் பார்த்தேன். சுவர்களில் பல புகைப்படங்கள் பிரேம் போட்டு மாட்டப்பட்டிருந்தன. அநேகமான படங்களில் கொடுக்கு மீசையுடனான ஒரு வாட்டசாட்டமான உயரமான மனிதர் பல கோணங்களில் காட்சியளித்தார். அவர் வேட்டைப் பிரியர் போலும். வேட்டைக்காரன் போல் உடையணிந்து தோளில் ஏந்திய வேட்டைத் துப்பாக்கியுடன் நண்பர்களுடன் காட்சிளித்தார். ஏனைய படங்கள் குடும்பப் படங்கள்.

சுவர்களை மான் கொம்புகள், புலித் தலை என்பன அலங்கரித்திருந்தன. பழைய வேட்டைத் துப்பாக்கி ஒன்று சுவரில் அலங்காரமாக மாட்டப்பட்டிருந்தது. வீட்டுக்குள் சென்ற சிங்காரைச் சில நிமிடங்களாகியும் காணவில்லை. வீட்டுக்குள்ளிருந்து யாரோ சில பேர் பேசிக் கொள்ளும் சத்தம் கேட்டது. வரவரச் சத்தத்தின் வேகம் அதிகரித்தது. அதிகாரம் மிக்க கடுமையான ஆண் குரல் ஒன்றும் கேட்டது. தோட்டத் துரைக்கேயுரியது. அது சிங்காரின் தந்தையுடையதாக இருக்க வேண்டும். அடுத்தது நடுத்தர வயதுடைய ஒரு பெண் குரல். அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காரின் அம்மாவுடையதாக இருக்க வேண்டும். மூன்றாவது எங்களுக்குப் பரிச்சயமானது. சிங்காருடையது.

சற்று உயர உயர எழுந்த பேச்சுச் சத்தங்கள் ஒரு விவாதமாக மாறின. அவர்கள் பேசுவது இப்போது எங்களுக்கு நன்றாகவே கேட்டது. ஏதோ தவறு நடந்திருக்கிறது என்பது மட்டும் எங்களுக்கு புரிந்தது. நாங்கள் அவர்களின் பேச்சுக்குச் செவிமடுத்தோம்.

''நாசமாய்ப்போன சனியன்''

''உன் பாட்டன் சொத்தையா வீணாக்குகிறாய்?''

''இதுவரை எவ்வளவு பணம் செலவழித்தாகி விட்டது''

''எல்லாவற்றுக்கும் காரணம் உன் கெட்ட நண்பர்களின் சகவாசம் தான். அவர்களை உடனே போகச் சொல். இல்லாவிட்டால் நான் என்ன செய்வேன் என்று தெரியாது''

அவர்கள் ஏதோதோ கடுமையாக பேசிக் கொண்டார்கள்.

விடயம் பிழைத்தவிட்டதென எங்களுக்குப் புரிந்தாலும் என்ன செய்வதெனத் தெரியவில்லை. கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை என்பார்களே அப்படி ஒரு நிலை.

ஆனால் ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது. சிங்கார் தன் நண்பர்களுடன் சேர்ந்து நிறைய பணம் செலவழித்திருக்கிறான். அவ்விதம் அவனைக் கெடுக்கும் நண்பர்கள் நாங்கள் தான் என்று எங்களைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார் அவனது அப்பா.

அடுத்து என்ன நடக்கப் போகிறது? அந்த கடுமையான குளிரிலும் எங்களுக்கு வியர்க்க ஆரம்பித்தது. சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப் போய்விடலாமா? இந்த இரவில் எங்கே போவது? ஆப்பு இழுத்த குரங்கின் நிலை. எனது நண்பர்கள் இருவரும் பேயறைந்தது போலானார்கள்.

சில கணங்கள் எந்த முடிவும் எடுக்க முடியாமல் கழிந்தன. அடுத்த கணம் அந்த கொடுக்கு மீசைக்காரரர் மிகுந்த கோபா வேசத்துடன் வந்தார். அவர் கையில் ஒரு வேட்டைத்துப்பாக்கி மின்னிக் கொண்டிருந்தது. அவரைத் தொடர்ந்து ஒரு பெண்ணும் சிங்காரும் ஓடி வந்தார்கள்.

''வம்பில் பிறந்தவர்களே! இன்னும் ஒரு நிமிடம் இங்கிருந்தால் உங்களைச் சுட்டுப் பொசுக்கி விடுவேன். ஓடுங்கள்'' இதனை அவர் ஆங்கிலத்திலேயே கூறினார்.

அவருக்கு பதில் சொல்வதற்கான திராணியோ எதிர்ப்பதற்கான துணிவோ எங்களுக்கில்லை. தாமதித்தால் சுட்டு விடுவார் என்பது மாத்திரம் புரிந்தது. ஏற்கனவே செல்வாவும் றொபேர்ட்டும் வெளியில் பாய்ந்து விட்டனர்.

நாங்கள் பயணப் பைகள் ஒன்றும் கொண்டு வந்திருக்கவில்லை. சிங்கார் எல்லா வசதியும் செய்து தருவான் என்று நம்பினோம். என்னிடம் நன்கொடை லிஸ்டுகள் அடங்கிய ஃபைல் ஒன்று மட்டுமே காணப்பட்டது. அதனையும் சுருட்டிக் கொண்டு நானும் பாய்ந்து வெளியேறினேன்.

அங்கு பிடித்த ஓட்டம் நாங்கள் இரும்புப் பாலம் பஸ் ஸ்டான்டில் வந்து தான் திரும்பிப் பார்த்தோம். யாரும் தொடர்ந்து வரவில்லை. உடனடியாகவே நுவரெலியா போக அடுத்த பஸ் எப்போது என்று அங்கிருந்த ஒருவரிடம் கேட்டோம்.

மணி ஏழாகிவிட்டதென்றும் இனிமேல் அந்த பாதையில் பஸ் வராதென்றும் அவர் கூறினார். இனி என்ன செய்வது? நேரம் கடந்து சென்றது. அவ்விடத்தில் இருந்த ஒரு சில கடைகளையும் மூடத் தொடங்கினார்கள். பசியும் தாகமும் அதனுடன் சேர்த்து துக்கம், பயம் இப்படி எல்லா உணர்வுகளும் வந்து தொண்டையை வரளச் செய்துவிட்டது.

சாப்பிட்டால் இருந்த காசும் தீர்த்தும் விடும். திரும்பிச் செல்லப் பயணச் செலவுக்கு காசை மிச்சம் பிடிக்க வேண்டும். அருகில் இருந்த பெட்டிக் கடை சாத்துவதற்கு முன் ஆளுக்கு இரண்டு ஆனை வாழப் பழங்களை வாங்கி முழுங்கி விட்டு பிளேன் டீ குடித்தோம். கொஞ்சம் தெம்பு வந்தது போலிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



நேரம் செல்லச் செல்ல குளிர் அதிகமாகியது. உடல் மட்டுமல்ல. ஈரக் கொலையும் சேர்ந்தே நடுங்கியது. எட்டு மணியைத் தாண்டிய போது யாரோ எங்களை நோக்கி வருவது தெரிந்தது.

சிங்கார் தான் வந்தான். அவன் முகமும் கண்களும் அழுது சிவந்து வீங்கிப் போயிருந்தது. அவன் வந்து எங்களை கட்டிப் பிடித்து அழுதான். பின் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். அப்பா தவறாக விளங்கிக் கொண்டார் என்றும் நாங்கள் தனது பழைய நண்பர்கள் அல்லவென விளங்கப் படுத்தியதாகவும் கூறினான். பின் எங்களை காலையில் நுவரெலியாவுக்குச் சென்று விக்டோரியா பார்க்கில் காத்திருக்கு மாறும் பத்து மணிக்கு முன் தான் பணத்துடன் திரும்பி வருவதாகவும் கூறிச் சென்றான்.

அன்றைய இரவு எங்களுக்கு நரகமாக இருந்தது. குளிர் மிக அரக்கத்தனமாக கூரான ஈட்டிகளால் குத்தித் துன்புறுத்தியது. பஸ் ஸ்டான்டில் யாரோ ஒரு புண்ணியவான் மழைக்கு நனையாமல் இருக்க சீமெண்டு கூடாரம் ஒன்று கட்டிப் போட்டிருந்தான். நாங்கள் மூவரும் ஒருவரை ஒருவர் இறுக்கமாக அணைத்துக் கொண்டு ஒரு மூலையில் சுருண்டு கொண்டோம். எங்கள் சூடு மட்டுமே எங்களுக்கு இதமளிமத்தது. அது எங்களுக்கு மிக நீண்ட இரவாக இருந்தது. இரவு முழுவதும் தூங்கவேயில்லை. காலை வந்ததும் ஒட்டிக் கொண்டிருந்த கொஞ்சத் தெம்புடன் அருகிலிருந்த குழாயில் முகம் கழுவினோம். தண்ணீரா அது. ஈயத்தைக் காய்ச்சி முகத்தில் வார்த்தது போலிருந்தது. உடனே அங்கிருந்து ஓடிவிட வேண்டும் போல் தோன்றியது. நாங்கள் முதல் பஸ்ஸில் ஏறி நுவரெலியாவுக்கு வந்தோம்.

‘சிங்காருக்காகக் காத்திருப்பதா, போவதா?’ என்று ஆலோசித்தோம். மூன்று பேரிடம் இருந்த சில்லறையை எல்லாம் பொறுக்கி பிரயாணச் செலவுக்கு வைத்துக் கொண்டு பெட்டிக் கடையில் கோதுமை ரொட்டியும் பிளேண்டியும் குடித்தோம். சரியாகப் பத்து மணி வரை சிங்காருக்காக காத்திருப் பதென்று தீர்மானித்தோம். விக்டோரியா பூங்காவுக்குச் சென்று வேடிக்கை பார்த்தவாறே காத்திருந்தோம். பத்து மணியும் வந்தது. சிங்கார் வரவில்லை. மேலும் சிறிது நேரம் பார்த்தோம். சிங்கார் வரவேயில்லை.

# வீதியோரச் சிறுமியர்

வீதியோரமாய் நான்கு சிறுமியர்
மலர்களைக் கொய்து மாலைகளாக்குவர்.
மாலையும் இரவும் நான்கு சிறுமியர்
பருவ மழையை எதிர்த்து நிற்பர்.
அவர்தம் மலர்களை விரும்புவோர்க்காய்
பல நிற மலர்களை ஒன்று சேர்த்து
நீண்ட நூல்களில் மாலை கோத்து
மலர்களைக் காட்சிக்காக அடுக்குவர்.
அவர்களின் சிரிப்பு குங்குமமாய் ஒளிரும்
தங்கள் சோற்றையும் ஆடைகள் தமையும்
தங்கள் முதுகில் நான்கு சிறுமியர்
இவ்வாறே தான் சம்பாதிப்பர்.

இவ்வாறே அவர் வயது கூடிட
தமது உடல்களை மலர்கள் போற் காட்டுவர்
வீதியோரமாய் நான்கு சிறுமியர்
யதார்த்தமென்னும் வெய்யிலில் வேகுவர்
வருடம் முழுதும் பட்டினி கிடந்து -
அவர் கன்னிமைப் பருவம் மிதந்து விலகும்
ஓ, அனைத்தையுமே தின்னும் பசி:
வீடோ அடுப்படியோ இல்லா நான்கு
சிறுமியர்
துன்பமெனும் முட்புதருள்
இரவின் இருளில் ஒவ்வொருத்தியும் தனியே
தனது உடலின் விளிம்பில் மரணத்தைத்
தேடுகிறாள்.

- டிலாரா ஹ.்.பிஸ் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கார் தாய், தந்தையருக்கு ஒரே பிள்ளை, அவன் தாய் அவன் சிறு பிள்ளையாக இருக்கும் போதே இறந்து விட்டார். இப்போதிருப்பது அவனது சித்தி. சிறு வயது முதலே சித்தியின் கொடுமைக்கு உட்பட்டு வளர்ந்தவன். பின்னர் அவனின் ஊதாரித்தனம் வளர்ந்து விட்டது. அவன் மேல் ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாவே முன்பு படித்த பாடசாலையில் இருந்து நீக்கி விட்டார்கள்.

நாங்கள் எங்கள் சோகக் கதையை மனதுக்குள் போட்டுப் புதைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தோம்.

அன்று மாலை செல்வாவும் றொபேர்ட்டும் என்னைத் தேடி ஓடி வந்தார்கள்.

தேசிய வானொலியில் மாலைச் செய்தியில் வாசிக்கப்பட்ட மரண அறிவித்தலில் சிங்காரவேலனின் பெயரும் இருந்ததாகக் கூறினார்கள்.

எனக்குச் சப்த நாடிகளும் ஒடுங்கிப் போய்விட்டன.

(யாவும் கற்பனையல்ல)

---

# திருவிழா

எங்கும் ஒளிவிழா, எங்கும் திருவிழாவின் களை
குழந்தைகள் சாரை சாரையாக புத்தாடை அணிந்து...
நானும் புத்தாடை அணிந்து தான்
எனக்கு என் ஆடையைப் பற்றிய கவலை
இந்த ஆடை ஏல்லோரினதும் ஆடையிலும்
தரமானதா? அழகானதா?
எண்ணி எண்ணிக் குமைந்தேன்
குழந்தைகள் வண்ணத்துப் பூச்சிகளாகத் தென்பட்டனர்
ஒவ்வொரு குழந்தைக்கும்
தன் ஆடை ''புத்தம் புதிது என்ற பெருமை''
எனக்கு என் ஆடை
எல்லோரிலும் விட மேன்மையானதா என்ற கவலை
சந்திக்கும் நபர்கள்
சந்திக்கும் நபர்கள் என் ஆடையை குறித்து
ஒன்றும் சொல்லா விட்டால்
என் மனம் குமைகிறது
திருவிழா என்றால்
மனிதர்களுக்கு ஆடையை பற்றி, உணவைக் குறித்து
கவலை, ஆதங்கம், அங்கலாய்ப்பு...
தனக்குள் உள்ளிருக்கும் மனிதனைப் பற்றி
யாருக்குத் தான் கவலை.

வனஜா நடராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தேகத் துளி

சிந்தும் ஜா

அசைவற்று ஆழ்ந்து உறங்கும் மனிதனைப்போல்
உறைந்து கிடக்கிறது இருட்டு
சரிந்து விழும் குவளை நீர் போலப் பரவும் குளிர்
நிஷ்டை முனிவரின் புன்னகையாய்
முகையவிழும் மௌனம்
எத் தூண்டல் உணர்வுக்கும் துலங்காச் சிலைகளென
நிற்கும் மரங்கள்
நிசப்த இருட்புதருள் ஒளிப்பாய்ச்ச மின்னும்
பூனைகளின் கண்களாய்
தொலைவில்
துடித்துக் கிடந்துளன விண்மீன்கள்.
நிலபாவாடை போல நிலத்திற் படும் நிலவின் ஒளி;
அசையா மலைகளென வீழும் பலநிழல்கள்,
விண்கல்லாய் எதிரே விழுந்தடங்கும் நாயூளை,
இடைக்கிடை சுழன்று வருங்காற்றாய்க்
காதுகளில்
வட்டம் அடிக்கும் நுளம்பினிசை என்று
இச் சூழல் தன்பாட்டில் இருளிற் தொலைகிறது!
நாளையொரு மாற்றம்
புதிய விடிவு வரும் வேளை
இப்போது துயின்றுழலும் மானுடரால் தோன்றிடுமோ
என்ற சந்தேகத் துளி
எந்தன் கண்ணீராய்
எண்ணற்று கஷ்டப்பட்டெழ முயலும்
இந்த நிலமீது
இவ்விரவில்
விழுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளவும்
நடந்த பின்னுமா
முடிகளின் கனவுகள்
இன்னும் முடியவில்லை!

மன்னராக எண்ணி
முடி சூடி
மந்திரி மனையில்
சபை கூடி
காட்டுத் தர்ப்பார்
அரசயலுக்கா
மீண்டும்
களமிறங்குகிறார்கள்?

மக்களாட்சி
ஜனநாயகம்
என்பதெல்லாம்
அர்த்தமழிந்து
வரட்டு வேதாந்தமாக
வாழ்த்துகள்
பஜனைகளுடன்
ஆதிக்கங்களுக்கு
துதிபாடும் அரசியலே
மீண்டும்
அரங்கேறுகிறது

காலங் காலமாய்
இவ்வாதிக்கங்களுக்கு
குனிந்து வளைந்த
அறிவுக் கூனை
தட்டி நிமிர்த்தாது
தம் குடிகளிடம்
தொடர்ந்தும்

தக்கவைப்பதற்கே
முடிகளின் கனவுகள்
இன்னும்
முனைப்படுத்தப் படுகிறது

அறுபது ஆண்டுகள்
மாற்றமில்லா
இனவாத சேற்றுக்குள்
மக்களின்
சிந்தனையை
மாறி மாறி
அமிழ்த்தி வைத்தீர்
மக்களை
மந்தைகளாய்
ஏய்த்தலைத்தீர்
புதைகுழிக்குள்
ஓர் சந்ததியை
போட்டுப் புதைத்தீர்
இனிப் போதும்

மாற்றங்கள் வேண்டும்
மாறாத அரசிலல்ல
மக்களின் சிந்தனையில்
அரசியலில்
அதுவே வேண்டும்

சங்கிலி முடியைக் காக்க
சாதாரணராக நொந்து
போராடி மாண்ட
அந்த சரித்திரம்
மறந்து போன
குடிகளின் வழியில் நின்று
உரிமைக்காய் எழுவோம்
கெமுனுவின்

குடி விழிக்கும்
கைகோர்த்து நிற்கும்
எதிரிகள்
தனித்து வீழ்வர்
எவர்க்குமே
காயமின்றி
உரிமைகள் மலரும்

அதிகாரங்களுக்கு
சாமரை வீசி வீசி
தூசு படிந்த
அறிவு ஜீவிகளின்
கண்களுக்கு
இவ் விடுதலையின்
விரிசுடர்கள்
சிறு பொறியாகாம்

ஒடுக்கு முறைக்கு
உள்ளாவோர்
தேடுவர் தெளிவர்
பேதங்கள் யாவுமற்று
திரளுவர் காட்டுத் தீயாய்
மானுடம்
உயர்த்த எண்ணி
நிமிருவர் ஓயார்
மீண்டும் மீண்டும்
வரலாற்றின்
நீள் பயணம்
நிற்காமல்
தொடர்வர்

இவளவும் நடந்த
பின்னும்..


- பாமரன் -

# இவ்வளவும் நடந்த பின்னுமா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றோ ஒரு நாள்



சீரிய சிந்தையில்
கூரிய கவிவடித்தே
பூரிய அதிர்வை
என்னுள் எழுப்பி
வீரியம் செய்தீர்
இன்றோ
சரீரம் விட்டே
சரித்திரம் ஆனீர்
விரிந்த உலகிடை
பரந்த மானிடர் மனதினில்
பாவினால் வாழ்ந்திடுவீர்

மூத்தகவியே முதல்வனே
நீர் யாத்தகவியால் என்னுள்
பூத்த புதுப்பூவாய்
நித்தம் நிலைத்து நிற்பீர்
சாத்துவேன் பாப்பூமாலை
ஏத்துவேன் புகழ்மாலை

பொதுமை நெறியில்
புதுமை வழியில்
ஒருமை கண்டீர்
அருமைத் தமிழிற்கு
பெருமை சேர்த்தீர்
உருவில் சிறியராய்
அறிவில் பெரியராய்
அகிலத்தை நிறைத்தீர்

கடுழியம் செய்தே
அடிமை நிலைவாழ்வார்
மிடிமை போக்கும்
விடிவினை வேண்டியே
இலக்குக் கொண்டு
இலக்கியம் படைத்தீர்
இலக்கியம் ஆனீர்
ஆளை ஆள் மேவுமுலகில்
ஆளுமையால் நிறைந்தீர்

பழையது கழிய
புதியது வரும்
நியதியை அறிந்தே
மீட்சியை நோக்கி
ஆக்கினீர் பாதை
ஊக்கினாய் ஆனீர்
யாத்தஉம் கவியால்!
பாக்கியமே நாம்
பாவழி பெற்றமே!

இல்லை என்பதை
இல்லை செய்குவோம்
எனும் உன்கவி
வல்லமை கண்டோம்
இன்று கவி முருகையன்
இல்லை என்பதை
இல்லை ஆக்கோமோ
சொல்லால் கவிபற்பல
நல்லாய் ஆக்கமுற
எல்லார்க்கும் ஈந்தே
எல்லாம் சரிவருமெனச்
சொன்ன
பொல்லாப்பின்றிப் போகுமந்த
பொதுமை வாழ்வை காண்பமோ!

ஐய முருகைய
எழுவீர் நீரென
எவ்வாறு இயம்புவேன்
வியனுலகில் நிறையுன் பாவால்
எழுச்சியுறு ஒருவன்
என்றோ ஒருநாள்
எழுந்து பாடுவான்
நாங்கள் மனிதரென
வேற்றுமைகள் ஒழித்து
நாளைய மனிதர்
எழுவர்
மனிதம் காக்க!

தந்தேன் அஞ்சலி
எந்தை நீரே!

- அ. பகீரதன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு நல்ல நாடகங்

இவ்வாண்டின் முற்பகுதியில் குறுகிய இடைவெளியில், கொழும்பில், இரண்டு நாடகங்கள், அதே இரண்டு அரங்குகளில் மேடையேறின. ஒன்று 'செக்குவ' எனும் சிங்கள நாடகம். அது லயனல் வென்ட்ற் உள் அரங்கிலும் அதன் தமிழ் வடிவம் தேசிய கலை இலக்கியப் பேரவையின் திறந்த வெளி அரங்கிலும் மற்றது 'இராவணேசன்' என்ற வடமோடிக் கூத்து அடிப்படையில் அமைந்த தமிழ் நாடகம். இரண்டு நாடகங்களும் நன்கறியப்பட்டவையும் நாடக விரும்பிகளின் பெரு வரவேற்பைப் பெற்றவையுமான நாடகங்களின் மறு தயாரிப்புக்கள். முதலாவதன் மூலம் முப்பது ஆண்டுகளிற்கும் முந்தியது. இரண்டாவதன் மூலம் நாற்பத்தைந்து ஆண்டுகளிற்கும் முந்தியது. இரண்டுமே பல வகைகளிலும் செம்மைப்படுத்தப்பட்ட சுவைக்கத்தக்க அரங்க அளிக்கைகளாம். இக்





குறிப்பின் நோக்கம் அரங்க அளிக்கைகள் என்ற வகையில் அவற்றின் குறை நிறைகளைச் சீர்தூக்கி மதிப்பிடுவதல்ல. அவற்றை எவ்வகையிலும் ஒப்பிடுவதும் அல்ல. இந்த நாடகச் சுவடிகள் ஒவ்வொன்றும் கூற முற்படும் செய்திகள் பற்றிய சில அவதானிப்புகளே இக் குறிப்பில் முதன்மை பெறுகின்றன.

செக்குவ (தமிழில் செக்கு) என்பது இலங்கையில் கொலனிய ஆட்சிக் காலத்தில் உருப்பெற்ற பொருளியல் - உற்பத்தி முறையை 'இந்திரலோகத்திலிருந்து வந்திறங்கிய' ஒரு செக்கு உருவகப்படுத்துகிறது. செக்கு, முதலில் காணியில்லாத ஒரு ஏழை விவசாயியால் இழுக்கப்படுகிறது. அச் செக்கின் மூலம் கிடைக்கும் எண்ணெயை விற்றுத் தனக்கென ஒரு காணி நிலத்தைப் பெறலாம் என்ற எதிர்பார்ப்பு நிறைவேறாமல் அவ் எண்ணெய் சூறையாடப் படுகிறது. அந்த ஏழை சோர்கிறான். பின்னர் மாடு கட்டிச் செக்கிழுத்தால் கூடிய எண்ணெய் கிடைக்கும் என்று அவனுக்குக் கூறப்படுகிறது. அவனுடைய மாடுகளாற் கிடைத்த கூடிய பயனும் முன்பு போற் சூறையாடப்படுகிறது. அவன் கடனாளியாகிறான். அவனுடைய செக்கை இழுக்கும் மாடுகளின் கொம்புகளுக்குத் தீட்டப்பட்ட பச்சை, நீல நிறங்கள் மூலம் ஆட்சி மாற்றங்களும். அவனை உழைப்பில் ஈடுபடுத்துவோரான சுரண்டும் அதிகார வர்க்கமும் அதன் எடுபிடிகளும் ஒரு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ங்கள் கூறும் செய்திகள்

சி. சிவசேகரம்

துரையாகவும் அவருடைய கையாளாகவும் உருவகிக்கப்படுகின்றனர். மோட்டார் வாகன இலக்கத் தகடுகளின் ஆங்கில எழுத்து, 1 ஸ்ரீ முதலான தகடுகள் மூலம் வெவ்வேறு காலகட்டங்கள் சுட்டப்படுகின்றன. இறுதியில் உலக மயமாக்கலின் மூலம் இலங்கை தனது தேசிய உற்பத்திப் பொருளாதாரத்தை இழந்து நுகர்வுப் பண்பாட்டுக்குள் புகுந்து சீரழிவதை மேடையில் தோன்றும் பலவேறு பாத்திரங்களின் நடையுடை பாவனைகள் மூலம் நாடகம் சித்தரிக்கிறது.





இச் சித்தரிப்பில் ஒரு முக்கியமான முரண்பாடு உள்ளது. தோட்ட உற்பத்தியை முதன்மையாகக் கொண்ட ஒரு பொருளாதாரம் ஒரு நுகர்வுப் பண்பாட்டுக்குட் போவதன் மூலம் உழைப்பை உறிஞ்சி மனிதரைச் சுரண்டும் உற்பத்தி முறையான ''செக்கு'' ஒழிக்கப்படுகிறதா என்ற கேள்விக்கு நாடகத்தின் இறுதிப் பகுதி கூறும் பதில் என்ன? உலக மயமாக்கலின் பயனான நுகர்வுப் பண்பாடு உழைப்பைச் சுரண்டும் செக்கிலிருந்து ஏழைத் தொழிலாளியை விடுவித்து விட்டதா? நாடகத்தைப் பார்ப்போர் மனதில் அவ்வாறான எண்ணம் எழுவது இயல்பானது.

நமது பொருளாதாரத்தின் உண்மை நிலை என்ன? நமது உழைப்பாளிகள் மத்திய கிழக்கிலும் வேறு நாடுகளிலும் புதிய செக்குக்களை இழுக்கிறார்கள். ஆடைத் தொழிலாலைகள் எனப்படும் செக்கை இழுக்கிறார்கள். தாம் வசதியாக வாழ்வதாக நினைக்கும் நடுத்தர வர்க்கம் சேவைத் தொழில்கள் எனும் செக்கிழுக்கிறது. நவீன வடிவமான ஒரு செக்காகத் தகவல், தொடர்பாடல், தொழில் நுட்பங்கள் அமைகின்றன. நாடகத்தின் இறுதிக் காட்சியை முன்னைய காட்சிகளைப் போல எல்லாரும் மேடையில் வளைய வளைய வருகிற விதமாக மாற்றியமைத்திருந்தால், செக்கின் வடிவம் மாறியுள்ளதே ஒழியச் செயற்பாடு மாறவில்லை என்ற செய்தியும் தெளிவாகப் பார்வையாளர்களைச் சென்றடைந்திருக்கும்.

இராவணேசனின் முதலாவது மேடை வடிவம் மட்டக்களப்புக் கூத்து வழக்கில் இருந்து வந்த கதை கூறும் வரம்புகட்குட்பட்டே அமைந்தது அறியப்பட்ட இராமாயணக் கதையின் செய்திக்கு வெளியே ஒரு புதிய செய்தியையும் கூற அது முற்படவில்லை. எனினும் இராவணனைக் கொடியவனாகக் காட்டுகிற ஒரு சிந்தையினின்று விடுபட்டு ஒரு மன்னனின் தன்மானம் என்பது சுவடியின் மையப் பொருளாக அமைந்தது. தற்போதைய பிரதியில் ஒரு குறிப்பிடத்தக்க விலகல் மூலம் ஆணாதிக்கத்திற்கும் போருக்கும் எதிரான ஒரு செய்தி நாடகத்தின் மூலம் வெளிப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதையை விடுவிக்குமாறு அங்கதன் ராமனின் தூதுவனாகப் போர் தொடங்கு முன் வந்து கேட்பதிலிருந்து கதை தொடங்கிக் கும்பகர்ணனதும் இந்திரசித்தனதும் இறுதியில் இராவணனதும் சாவு வரையிலுமான கதை கூறப்படுகிறது. மரபு கூறும் மண்டோதரி போலன்றி இந்த நாடகப் பிரதியின் மண்டோதரி தனது உரிமைகளை வலியுறுத்திப் பேசவல்ல ஒரு ஆளுமை மிக்க பெண்ணாகக் காட்டப்படுவது நாடகத்தின் சிறப்பு. நாடகத்தின் ஒரே பெண் பாத்திரமான மண்டோதரி, வழமையான பணிவடக்கமான பெண்ணாகவன்றி பெண்மை என்று பலரும் கருதப் பழகி விட்ட நடை நடத்தைகளைக் கணிசமான அளவிற் புறந்தள்ளி ஆணுக்குச் சமதையாக நின்று வாதாடக் கூடியவராக அமைவதன் மூலம் அவர் வாயிலாக எழும் கேள்விகள் வலுப் பெறுகின்றன.

மண்டோதரி இராவணனிடம் போரை எதிர்த்து வாதிடும் போது 'ஆண்கள் தான் போரை முன்னெடுக்கிறார்கள், பெண்களே போரால் பாதிக்கப்படுகின்றார்கள்' என்ற வாதம் மிகவும் காத்திரமாக முறையில் முன் வைக்கப்படுகிறது. தன் மகன் இந்திரஜித்தை இராவணன் போருக்கு அனுப்புவதை எதிர்த்து எவ்வாறு தன் மகனை இராவணன் போருக்கு அனுப்பலாம் என்ற கேள்வி குடும்பத்தை ஒரு ஆண் தனதுடைமையாகக் கொள்ளும் ஆணாதிக்க முறைக்கு எதிரான வலுவான ஒரு சவாலாகும். இவ்வாறான கேள்விகள் பெண்ணுரிமை தன்னை நிலைநிறுத்திக் கொள்ளாத ஒரு சமூகச் சூழலிருந்தும் எழுந் திருக்கக் கூடியவை. ஆயினும் கம்பராமாணயம் ஆக்கப்பட்ட ஆணாதிக்கச் சிந்தனைச் சூழலில் அக் கேள்விகள் எழுப்பப்படவில்லை. இக் கேள்விகள் தொடர்பான விவாதங்களே தனித்தனி நாடகப் பொருட்களாக விரித்தெடுக்கக் கூடியன. அவை இந்த நாடகத்தில் முனைப்பாக எழுப்பப் பட்டமை நாடகத்திற்கு ஒரு வலிய சமூகப் பரி மாணத்தை வழங்கியுள்ளது.

நாடகக் கதையின் எல்லைகட்குள் எழுப்பப்படாத ஒரு கேள்வி என்னுள் எழுந்தது. போர் தொடுத்து வந்தவன் இராமன். ஆனால் அமைதி பற்றிய போதனைகள் இராவணனை நோக்கியே வழங்கப்படுகின்றன. அது இராவணனின் நிலைப்பாடு தவறானது என்பதை



இராமயணக் கதை வலியுறுத்துவதன் விளை வானது. அந்த வழக்கு முழுமையாக விசாரிக் கப்படாத ஒரு வழக்கென்பதோ அது இரண்டு வேறு உலக நோக்குக்கட்குரிய அற, நீதி முறை களின் முரண்பாடுகளைக் கருத்திற் கொள்ளாது ஒரு வகையான அற விழுமியங் களையே வலியுறுத்துகிறது என்பதோ நாம் அறிந்த இராமா யணக் கதைகளின் ஒரு குறைபாடென்றே கூற வேண்டும். அவை தொடர்பான வினாக்களை எழுப்ப இராமாயணக் கதை மரபிற்குச் சற்று வெளியே செல்லும் தேடல் முயற்சிகள் அவசியமாகலாம். அவ்வாறான தேடல் முன்பு நிகழாததுமல்ல, இயலாததுமல்ல. அவற்றைப் புதிய நாடக முயற்சிகட்கு விட்டு விடுவோம்.

இரண்டு நாடகங்களும் அரங்க அளிக்கைகள் என்ற வகையில் தாம் சார்ந்த நாடக வடிவங்களின் அமைப்புக்களை செழுமைப் படுத்துகிற விதமான தற்புதுமையான மேடை உத்திகளைக் கொண்டவை. அத்துடன் உள்ளடக் கத்திலும் முற்போக்கான சமூகச் சார்பான பண்பை அவை கொண்டிருக்கின்றமை இலங்கைத் தமிழ் நாடக வளர்ச்சியில் அக்கறையுடை யோருக்கு நல்லதொரு திசை காட்டலுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவுஸ்திரேலிய ஆதிவாசி எழுத்து

# ரோஸ்



மரத்திலுள்ள இலைகளை இளந்தென்றல் வருடியது. மிஷன் பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருக்கையில், கனத்த கோடைக் காற்றினூடாகச் சிள் வண்டுகளின் சத்தம் மிதந்து வந்தது. பாடசாலையில் எனக்கு அது கடைசி வாரம். நான் ஓர் இளம் பெண்ணாக மாறுகிற பருவம். நான் விடுமுறைக்காகக் காத்திருந்தேன் அடுத்த வருடம் உயர்தரப் பாடசாலைக்குப் போவேன்.

அம்மா என்னைச் சந்திக்க வந்திருந்தாள். நடுங்கும் ஒரு கையில் ஒரு கடிதம், மற்றதில் ஒரு கைக்குட்டை

கைகளை நீட்டியபடி "மகளே." என்றாள். நான் அவள் கைக்குள் சிறைப்பட்டேன். அவள் உடல், காயப்பட்ட பறவை போல் நடுங்கியது

"என்னம்மா பிரச்சனை?" ஆற்றங்கரையை நோக்கி இருவரும் நடக்கும் போது கேட்டேன். அம்மாவின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது.

அம்மாவுக்குச் சுகமில்லை. பல தடவை நோய்வாய்ப்பட்டிருந்தாள். ஒற்றைத் தலைவலி. காய்ச்சல், உயர் குருதியமுக்கம். அவளுடைய நோயைக் கண்டு பிடிக்க முடியாத டொக்ரர் ஒரே மாத்திரைகளைத் திரும்பத்திரும்பக் கொடுத்தார். அவை அவள் நிலைமையை மோசமாக்கின.

பிள்ளைகளாகிய எங்களைப் பராமரிப்பது நானி என்றழைக்கப்படும மூதாட்டி. எங்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது எப்படி என்று

■■
**பொன்வண்ணச் சூரியனையும் என் அன்னையின் அழகிய முகத்தையும் கொள்ளை கொண்டு, என்னைக் குளிரில் கிடந்து நடுங்க விட்டது யார்? மாரிகாலப் புயலாலே தான் இத்தகைய கொடுமையைப் புரிய முடியும்!**
■■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்குத் தெரியும். சமைப்பதிலும், வீடு சுத்தமாக்குவதிலும், இரண்டு தம்பிமாரைக் கவனிப்பதிலும் நான் உதவி புரிவேன். அம்மாவால் படுக்கை விட்டெழ முடியாத வேளைகளில் நான் அவள் உணவை எடுத்துச் செல்வேன். அவள் அருகில் இருப்பேன். எப்படி இவள் ஒன்பது பிள்ளைகளைச் சமாளித்தாள் என்று வியப்பேன்.

நாங்கள் ஒன்றும் மோசமான பிள்ளைகள் அல்ல. எங்களிடையே வயது வித்தியாசம் அதிகம் இல்லை. யார் கழுவுவது, யார் துடைப்பது, யார் கூட்டுவது, யார் "மொப்" செய்வது என்பது போன்ற சிறுசிறு விஷயங்களுக்கெல்லாம் சண்டையிடுவோம். வுழமையாகச் சாந்தமான அம்மா இதனால் கலவரமடைவாள். சச்சரவு உச்சத்துக்குப் போனால், அம்மா பொறுமை இழப்பாள். பிள்ளைகள் திக்குத்திக்காகச் சிதறி ஓடுவார்கள். யாரோ ஒருவர் அக்படுவார். வீடு அமைதியடையும்– அடுத்த போர் மூளும் வரை.

அம்மாவுக்கு ஓர் அறை. மற்றைய மூன்று அறைகளும் எங்களுக்கு. மாரி காலத்தில் சகோதரிகள் நாங்கள் நெருக்கமாக இருப்போம், கதகதப்பாய் இருக்கும். சின்னப் பிள்ளைகள் மிஷனிலிருந்து அதிக தூரம் போகமலிருக்கப் பெரியவர்கள் சொல்லும் பேய்க் கதைகளைச் சொல்லி ஆளை ஆள் பயமுறுத்துவோம். ஒரே கும்மாளம். நான் கடைசியிலிருந்து மூன்றாவது, பெண்களுள் 'குட்டி'. மூத்தவர்கள் எங்களைச் சீண்டுவார்கள், 'செல்லம்' கொடுப்பார்கள். நாங்கள் எல்லோரும் ஒருவரையொருவர் கவனித்துக் கொள்ளுவோம், ஒன்றாய் நிற்போம். நாங்கள் ஒரு குடும்பம் என்பது எங்களுக்கு அழுத்திச் சொல்லப்பட்டது.

என் குழந்தைப் பருவத்து மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சிகள் பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம். எனக்குப் பன்னிரண்டு வயதாயிற்று. கருவேல மரத்துக்குக் கீழே பச்சைப்புல்லில் இருந்தபடி தெளிந்த ஆற்று நீரைப் பார்த்துக்கொண்டிருந்தோம். அம்மா என்னை அணைத்துக்கொண்டாள்.

"கடந்த வாரம் பாடசாலையில் நீ ஒரு பரீட்சை சித்தி அடைந்தது நினைவிருக்கிறதா?"

"ஓம், அதற்கென்ன அம்மா?" "கூற்ற முந்த்றா உயர்நிலைப் பள்ளியில் படிப் பதற்கு உனக்கு உதவித்தொகை கிடைத் திருக்கிறது. அங்கே விடுதியில் வாழும் கன்னியாஸ்திரிகள் இரண்டொரு நாளில் வந்து சேரும்படி உன்னை அழைத்திருக்கிறார்கள். அடுத்து வரும் ஆறு ஆண்டுகள் நீ அங்கே தங்குவாய்... ஓ, றோஸி," அம்மா விம்மி அழுதாள்.

மனம் கலங்குவது அவளுக்கு நல்லதல்ல. நான் அவளைத் தேற்றினேன். எல்லாம் சரிவரும். விடுமுறைக்கு நான் வீடு வருவேன். அழாதே அம்மா!."

"நான் உன்மேல் உயிரையே வைத்திருக்கிறேன், றோஸி. மறந்துவிடாதே!" அம்மா என்னை இறுகப் பற்றியபடி அழுதாள்

"மறக்க மாட்டேன், அம்மா! நானும் உன்னை நேசிக்கிறேன்."

அடுத்த இரு நாட்களும் தெளிவில்லை. அம்மாவை விட்டுப்போவதன் பொருள் எனக்கு விளங்கவில்லை. அப் பிரிவின் தாக்கத்தை அப்பொழுது நான் உணரவில்லை. அக் கடைசி நாட்களை இன்று நினைவு கூர்ந்தாலும். வலிக்கிறது. நாம் ஒருவரை ஒருவர் இனிக் காணப் போவதில்லை என்று அம்மாவுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

அம்மாவின் நினைவுகளை என்றும் நான் போற்றி வருவேன். அன்று மிஷன் வாசலில் அந்தப் பாரிய கார் வந்து நின்றபோது கோடை மறைந்து போனது. பொன்வண்ணச் சூரியனையும் என் அன்னையின் அழகிய முகத்தையும் கொள்ளை கொண்டு, என்னைக் குளிரில் கிடந்து நடுங்க விட்டது யார்? மாரிகாலப் புயலாலே தான் இத்தகைய கொடுமையைப் புரிய முடியும்! கருமுகிலும் இரக்கமற்ற காற்றும் என் நெஞ்சை நொறுக்கின. இன்றும் அந்தக் காட்சி என் கண்ணுக்குள் நிற்கிறது. நானி அம்மாவைப் பிடித்துக் கொண்டிருந்தாள். "றோஸி, என் அன்பு மகளே!" என்று அம்மா குழறிக்கொண்டிருந்தாள்.

அந்த இரும்பு விலங்கின் பின் இருக்கையில் அமர்ந்தபடி நெடுநேரம் அழுது குழறினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நெஞ்சு அம்மாவுக்காக வலித்தது. அவளை – என் குடும்பத்தை விட்டுப்போக – எனக்கு மனமில்லை. மோசமான அந்த வினாத்தாள் என்னை இந்த நிலைக்குக் கொண்டு வருமானால். நான் அதைப் பார்க்காமலே, பாஸ் பண்ணாமலே இருந்திருப்பேன். குடும்பத்தோடு மகிழ்ச்சியாக இருக்கும் எனக்கு ஏன் இதையெல்லாம் செய்கிறார்கள், ஏன், ஏன், ஏன்?

உடலும் உணர்வுகளும், ஓய்ந்து நான் உறங்கி விட்டேன். கார் நின்றபோது தான் கண் விழித்தேன். வெளியே காரிருள். சாரதி பேசினான். "இறங்கி உள்ளே போ!"

மனமில்லாமலேயே இறங்கினேன். வாசலில் விளக்கைப் பிடித்தபடி ஒரு கன்னியாஸ்திரி.

"வா, றோஸ்!"

அவள் பின்னே, மண்டபத்தின் மறுகோடியில் இருந்த குளிர்ந்த, இருண்ட, ஒடுங்கிய மாடிப்படியில் ஏறினேன். இடப் புறமிருந்த கதவைத் திறந்து, யன்னல் ஓரம் இருந்த படுக்கையை அவள் சுட்டிக் காட்டினாள். மரண அமைதி, கடுங்குளிர். உடைமாற்றிவிட்டு வெள்ளை நிற விரிப்புக்கும் சாம்பல்நிறக் கம்பளிக்குமிடையே நுழைந்து கொண்டேன். கன்னியாஸ்திரி வாசலில் நின்று என்னைப் பார்த்தாள், ஓர் ஒளிக்கீற்றை உள்ளே வர விட்டபடி. பிறகு கதவைச் சாத்தினாள்.

கூட்டிலடைபட்ட விலங்கின் உணர்வு எனக்கு. அந்தப் பயங்கரமான கறுப்புக் காருக்குள் நான் கண்விழிக்காதிருந்திருந்தால், நடந்ததைத் திகிலூட்டும் கனவாக எண்ணியிருப்பேன். யன்னலை மூடி ஒரு மெல்லிய திரை. அதனூடு இளம்பிறை தெரிந்தது. அம்மாவை அணைத்தபடி நான் படுத்திருந்தேன். அம்மாவோடும் அக்காமாரோடும் வீட்டில் படுத்திருப்பதாக நினைத்தபடி எப்படி உறங்கினேனோ அறியேன். கனவிலும் அம்மா வந்தாள்.

வீட்டில் அம்மா தனியே இருந்தாள். வீடு தீப்பிடித்துவிட்டது. அவளைப் பார்க்க முடியாது. நெருங்க முடியவில்லை. அவளுக்கு உதவ

## கடவுளுக்குக் கண்ணுண்டு

கடவுளுக்குக் கண்ணுண்டு
கண்ணோ நெருப்பு வைக்க
தலையில் பிறையுண்டு
தனல் கையில் உண்டுண்டு!
கங்கை முகில் சூடி
கால் தூக்கி ஆடுவதா
அங்கை மழுவை
ஆரும் மறப்பாரோ?
பேய்க்கணங்கள் சூழப்
பித்தாடும் வேடமிட்டால்
வாய்க்கும் சுடலையிலே
வளரும் பொருள் எதுவோ?
கரிக்காலன் பாதம்
கைலாசம் காட்டிற்றாம்
நரிக்கால் நடமிட்ட
நான் மாடக் கூடலிலே!
நீடு பொருள் கண்டு
நிமலன் அருள் கண்டு
வீடு பெற நின்ற
வித்தகர்கள் கண்டாராம்!
பாம்புக்குப் பல்லில்
பரமனுக்குக் கண்டத்தில்
தாங்கும் விஷம் தரணி
தங்கும் விஷமம்மா!
பூத்திருக்கும் பொட்டுப் போல்
பொறி கனலும் நெற்றிக் கண்
காத்திருக்கும் பூத
கணங்களுக்கே கைலாசம்

- புதுமைப் பித்தன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பினேன். ஆனால் ஏதோ என்னைத் தடுத்தது. அவளைக் காப்பாற்றச் சக்தியற்ற வளாய், அவள் தீயில் மூழ்குவதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். நான் கத்தினேன், விழிப்பு ஏற்பட்டது வேர்த்துக் கொட்டியது. பயத்தால் நடுங்கினேன். எங்கே இருக்கிறேன் என்று தெரியவில்லை. நினைவு வந்தது. கண்டது கனவு. உதட்டைக் கடித்துக்கொண்டேன். அழுகையை அடக்கிக் கொண்டேன். கண்டதைப் பற்றி நினைக்காமலிருக்க முயன்றேன்.

நாலு மாதம் செல்ல, பாடசாலை தொடங்கியது. வீடு போய் அம்மாவைப் பார்க்க, முதலாந் தவணை விடுமுறையை எதிர்பார்த் திருந்தேன். இடையே அம்மா இரு முறை கடிதம் எழுதியிருந்தாள். நான் இல்லாமல், தான் படும் தவிப்பைப் பற்றி. "நீயில்லாமல் ஆற்றங்கரையில் உரையாட யாருமில்லை, நீ போனபிறகு நான் ஆற்றுக்கே போகவில்லை!"

"நீ இல்லாமல் எனக்கும் எல்லாம் வெறுமையாய் இருக்கு, விடுமுறையின் போது வீட்டுக்கு வருவேன். இருவரும் ஆற்றுக்குப் போவோம், அம்மா!" நான் எழுதினேன்.

ஒரு மாலைப் பொழுது. நான் லோன்ட்றியில் வேலை செய்து கொண்டிருந்தேன். விடுதி மேற்பார்வையாளர் என்னைத் தன் பணிமனைக்கு அழைத்தாள். படிப்பில் நான் போதிய முன்னேற்றம் காண்பிக்கவில்லை என்று சொல்லப்போகிறாள் என நினைத்தேன். அவளுடைய அவலட்சணமான பெரிய மேசைக்கு எதிரேயிருந்த சிறிய கதிரையில் என்னை இருக்கச் சொன்னாள். எங்கும் காகிதங்கள் சிந்திக் கிடந்தன. அவள் தன் அரியாசனத்தில் இருந்தாள்.

"இரண்டு மாதத்துக்கு முன் உன் அம்மா இறந்து போனாள். நீ படிப்பில் முன்னேறிக் கொண்டிருந்தாய், செய்தியைச் சொல்லி உன்னைக் கலவரமடையச் செய்ய நாங்கள் விரும்பவில்லை."

யன்னலை வெறித்துப்பார்த்தபடி நான் அமைதியாய் இருந்தேன். சலனமின்றி அவள் உதிர்ந்த வார்த்தைகளை நான் கிரகிக்க முயன்றேன்.

அந்தக் கணத்திலிருந்து என்னிடம் எந்த எதிர்பார்ப்புமில்லை. அந்தச் சிறையிலிருந்து வெளியேறும் வரை என் உடன் பிறந்தோரிடம் இருந்து செய்தியேதும் இல்லை. என் குடும்பத்தினர் எனக்கு அந்நியமாகி விட்டனர். முன்பு இருந்தது போல் வாழ்க்கை எளிமையானதாக, இனிமையானதாக இருக்கப் போவதில்லை. எல்லாவற்றுக்கும் அந்த இடு காடும் அங்கு வேலை செய்வோருந்தான் காரணம். வீட்டுக்கு ஓடிப்போகலாமா என யோசித்தேன், ஆனால் இப்போ வீடு எங்கே? அம்மா இல்லாத வீடும் வீடா?

பாடசாலைப் படிப்பையும் என்னிடம் எதிர் பார்க்கப்பட்ட பணிகளையும் நாள் தோறும் வருடந் தோறும் நிறைவேற்றி வந்தேன். சமைக்கிறது, கழுவுவது, சுத்தம் செய்வது 'அயன்' செய்வது என எப்போதும் வேலை இருந்து கொண்டே இருந்தது. வாழ்க்கைக்கு அர்த்தமில்லாது போயிற்று. காலம் அசையாது நின்றது. என் உயிர்வாழ்க்கை நின்றது. நான் நடைப் பிணமானேன்.

அந்தச் சிறைக் கூட்டினுள் என் கடைசி நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. — எதிர்காலம் குறித்த என் அச்சங்களும் என்னை அச்சுறுத்தின. மிஷனுக்குத் திரும்பிப் போய், விட்ட இடத்திலிருந்து தொடர என்னால் முடியவில்லை. விட்ட இடம் இருந்தால் தானே? சொந்த நாட்டிலேயே அந்நியப் பட்டு விட்டேன். என் மக்கள் என் மக்களாய் இல்லை. யாருக்கும் நான் பிள்ளையில்லை. ஆனால் நான் திரும்ப வேண்டியிருந்தது. என் இடம் எது, இந்தப் பயணம் என்னை எங்கு கொண்டு போகும் என்று அறிய வேண்டியிருந்தது. என் குடும்பம், என் வீடு, என்மீது எனக்குள்ள நம்பிக்கை, என் அடையாளம் எல்லாம் அழிந்து போயின. வேறு யாரோ ஆட்டுவிக்க ஆடிய பம்பரம் இப்போ வீசப்பட்டுக் கிடக்கிறது. என்னிடமிருந்து ஏதோ ஒன்று எடுக்கப்பட்டுவிட்டது. என்ற வதைக்கும் யதார்த்ததுக்கும் நான் முகம் கொடுக்க வேண்டும்.

விறைத்துப்போனது போல் ஓர் உணர்வு. அம்மாவைப் பல தடவை கனவு கண்டேன், விழிக்கும் போது தனிமையும் கசப்புணர்வும் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக் கூட்டை எதனாலும் பின் நோக்கித் தள்ள முடியவில்லை, நாங்கள் ஒன்றாய்க் கழித்த பெறுமதிமிக்க கணங்களைத் திரும்பத் தர முடியவில்லை. தாயின் மார்பிலிருந்த வலிந்து பிரிக்கப்பட்டுத் தனித்து விடப் பட்ட குழந்தை போல நான் உணர்ந்தேன். இந்தக் கொடிய உலகத்திலிருந்து என்னைக் காக்க– அணைக்க –அன்புக்கரங்கள் ஏதும் இல்லை. என் ஆத்மா திடீரெனக் கொடூரமாகச் சாகடிக்கப்பட்டு விட்டது. நான் பட்ட பாட்டை எப்படி மற்றவர்களால் புரிந்து கொள்ள முடியும்? என் செயலென்று யாதும் இருக்கவில்லை. இது விதி, எல்லாம் அறிந்த பரமாத்மாவுக்கே ஏன் இது நடந்தது என்று தெரியும். என் இதயத்தில் பொத்தி வைக்கப்பட்ட புதிர் அது. அது விடுவிக்கப்படுமென்று நான் காத்திருந்தேன். என் கடைசி நாளும் வந்தது. மூட்டை முடிச்சுக் களைக் கட்டிவிட்டு கெம்ப்ஸிக்கு – அதாவது 'வீட்டுக்குப்' போக ஆயத்தமானேன்.

கெம்ப்ஸி நோக்கிய அசௌகரியமான இரவு ரயில் பயணம் நீண்ட நேரம் பிடித்தது. நித்திரை வரவில்லை. என்னை எதிர்நோக்கும் மோசமான நிலைமையை எண்ணிப் பதற்றமடைந்தேன். நான் ஒரு புறத்தியாளாக– அச்சுறுத்தலாகத் –கருதப்படுவேன். வேற்று மனிதரால் வளர்க்கப்பட்ட நான், என் இன சனங்களை விட வித்தியாசமானவளாக– விலக் கப்பட்டவளாக –இருப்பேன்.

காலை 8.25க்கு ரயில் வந்து சேர்ந்தது. மூட்டை முடிச்சுக்களைக் காவிக்கொண்டு மிஷன் நோக்கி ஒரு மணி நேர நடையைக் கட்டினேன். மார்கழி மாதத்துப் பொழுது வெப்ப மாகிக் கொண்டிருந்தது.

நடந்து கொண்டே சிந்தனையை ஒருமுகப்படுத்த முயன்றேன். இங்கே சரிவராவிட்டால், நான் மேலே நகரவேண்டும். என் கடந்த காலத்திலிருந்து விலகியோட முடியவில்லை. அதை எதிர்கொள், மீளத் தொடங்கு. நீ யார்? எங்கு போகப் போகிறாய்? என்ன செய்யப்போகிறாய்? யாராகப் போகிறாய்?

நான் யாராயிருந்தாலும். நான் நானாக இருக்க விரும்பியவாறு போக வரச் சுதந்திரம் வேண்டும். நான் நெடுங்காலம் அடைபட்டுக் கிடந்து விட்டேன்.

# காதல் பாட்டு

நிலவு வர வேண்டும்
நீல மணிக் குயிலோசை
காதில் விழ வேண்டும்
தென்னங் கீற்றும் சற்றே
சலசலக்கும் பாவனையில்
தென்றலுமாங்கே சற்று
திரிந்திடவும் வேண்டும்
நிச்சயமாய்க் காதல் வரும்
நீர் இருந்து பாரும்
நிச்சயமாய்க் காதல் வரும்
நீர் இருந்து பாரும்

**புதுமைப் பித்தன்**

# நாம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

மனங்களின் சமத்துவம்
மறுதலிக்கும் - மூட
மனங்களின் மகத்துவம்

ஆதிக்க முருக்குகளின்
ஓசைகளில் - பூமியின்
அகதியம் அலையும்

வேறுபடும் உறவுகள்
நினைவுகளில் - நாளைய
தேடல் விழுதுகள்

இயற்கையின் பிடிவாதம்
முழுக்கத்தில் - ஒற்றை
முகத்தை மாற்றும்

நெருடல்களின் தத்துவம்
நெருப்பிலும் - நிலத்திலும்
தண்ணீர் தேடும்.

**- புலேந்தி திலீப்காந் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பூப்போல என் முகத்தில் சூரிய ஒளி படுவதை நான் உணரவேண்டும். குளிர்ந்த, புத்துணர்ச்சி தரும் மழை என் ஆத்மாவை வளர்க்க வேண்டும். புதிய காற்று என் ஆத்மாவின் ஊடு வீசி எனக்குள் புதிய உயிரை ஊத வேண்டும்.

நெடிய புல்வயலுக்கூடாக ஓடிப், பிள்ளைப் பருவத்தில் எப்படிக் காற்று மேனியில் பட்டதோ, அது போல் படுவதை உணரவேண்டும். காற்றின் முகட்டில் சவாரி செய்யும் பறவையின் சுதந்திரத்தை உணரவேண்டும். முன் காணாத வற்றைக் காணவேண்டும். தெரியாத விஷயங்கள் பற்றி எனக்கிருந்த பயத்தை நான் வெல்ல வேண்டும்.

கரடு முரடான நாட்டுப்புறத்திலே நடந்து திரிந்த காட்டு மனிதனான என் தந்தையைப் பற்றி நினைத்தேன். அடிக்கடி அவர் வேட்டைக்கும் வேலைக்கும் போவார். அவர் இறந்த பொழுது எனக்கு மூன்று வயது. நல்ல மனிதர் அவர். "உன் அப்பா அற்புதமான மனிதர். அவர் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது." என்பாள் அம்மா.

அவருக்குக் காட்டின் மீது தீராத காதல். "இயற்கை அன்னை தன்சைச் சூழ்ந்திருப் பதையே அவர் விரும்புவாள்" என்பாள் அம்மா, இரவில் கேட்கும் விசித்திர ஒலிகளின் கலவை. சடசட என்று எரியும் நெருப்பு. இருட்டில் பறக்கும் தீப்பொறிகள். அருவி கொட்டும்போது உண்டாகும் லயம், மாலை நேரத்துப் பறவைகளின் நெஞ்சையள்ளும் கீதம். வெப்பமான பூமி தன்னைத் தாலாட்ட, கம்பீரமான சந்திரன் தெளிந்த வானமாகிய அங்கியை அணிந்து கொண்டு வீற்றிருக்க, நட்சத்திரங்கள் மின்னிமின்னி நடனமாடுவது அவருக்குப் பிடிக்கும்.

ஒரு நாள் மரம் தறிக்கும் போது. அவர் ஒரு பாம்புப் புற்றை மிதித்து விட்டார். வளர்ந்த புல்லினூடாக விஷப் பாம்பு ஊர்ந்து வந்ததை அவர் கவனிக்கவில்லை. கை, கால்களின் மேல் அதன் நச்சுப்பல் பாய, மருத்துவ உதவி இரண்டு நாள் தொலைவில் இருந்ததால் அவர் மரண மடைந்தார்.

இரண்டு வாரம் கழிந்த பின் தான் அவர் உடல் கண்டு பிக்கப்பட்டது. "நான் காட்டிலே சாவேன்" என்று சொல்லிக் கொண்டிருந்தவர் அவர். "உங்கள் மேல் அவருக்குக் கொள்ளை அன்பு, குழந்தைகளே!" என்பாள் அம்மா. "பாவம் மனுஷன், காட்டை விட்டால், எங்களிடம் தான் அவர் நிம்மதியைக் கண்டிருக்க வேண்டும்!" என்று நான் அவளைச் சீண்டுவேன்.

"இருக்கலாம்!" என்பாள் அம்மா. நேற்றுப் போல இருக்கிறது, அம்மாவும் நானும் — திரும்பத் திரும்ப நினைவுகளை அசை போட்டது. அவள் இறந்து ஆறு வருடமான போதும் அந்தப் பிரிவு கொடியதாக இருந்தது. ஏற்க முடியாததாய் இருந்தது. அம்மாதான் எனக்கு வாழ்க்கையோடுள்ள ஒரே இணைப்பு.

நடந்து கொண்டிருந்தேன். ஓர் இளங் குடும்பம் பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்தது. குழந்தைப் பருவத்தில் நான் எதையெல்லாம் இழந்திருந்தேன் என்றெண்ணிப் பொறாமைப் பட்டேன். என் குடும்பம் எனக்கு வேண்டும். ஒரு நாள் என் பிள்ளைகள் தமக்குக் கிடைக்கும் அமைதியையும் மகிழ்ச்சியையும் தொலைக்காமல் இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

மூலம்: கிறிஸ்ரீன் உவார்ட்

**தமிழில்: சோ.பத்மநாதன்.**

# ஓடாதீர்

சற்றுப் பொறுமையாக
சங்கதியைச் சொல்லுகிறேன்
இன்றைக்குக் காசு
இருக்கிறது இனிமேலே
என்றைக்கோ எப்போதோ
எதிரில் எனைக் கண்டால்
ஓடி ஒளியாதீர்
உம்மிடம் நாம் கேட்கவில்லை

**புதுமைப் பித்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கின் வசந்தம்
வடக்கின் வசந்தம்
வாய்பாடாய்ச் சொல்லுகிறது அரசு
பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதால்
பாராட்டுரைகள் பல.
இந்தியா தட்டிக்கொடுத்து
உச்சி முகர்கிறது.

மனித நேயத்தை மீட்டுவிட்டார்
ஒரு கொடி, ஒரு தேசம்
போர் முடிந்து விட்டது
இன்னுமேன் முகாம்களில்
மக்கள் சாகிறார்கள்,
முடமாகிறார்கள்?

மெனிக்ஃபார்மை மயானஃபார்ம்
என மாற்றிவிடலாம்
அவலங்களைச் சுமந்துகொண்டு
நலன்புரி முகாம்கள்
"அங்கேயே செத்திருக்கலாம்"
அங்கலாய்கின்றனர் மக்கள்.

"முகாம்களில் எல்லாம்
ஒழுங்காக நடக்கிறதாம்"
சொல்லித் திரிகின்றன சில.

தட்டுகளுடன் தமிழர்கள்
உணவு வரிசை
தண்ணீர் வரிசை
மலம்சலம் கழிக்க வரிசை
மருந்துக்கும் வரிசை
சாவதும் முடமாவதும்
கூட வரிசையாகத்தான்
எல்லாம் கிரமமாய் நடக்கின்றன.
கோயபல்சு பொய்கள்
கொடூரமாய் தொடர்கையில்
மானுடத்தின் குரல் மரித்துவிட்டதென்று
நினைத்தீர்களா?

அவலங்கள் தொடரும் வரை
அதற்கெதிராய் அடக்கப்பட்டக் குரல்கள்
ஒலித்துக் கொண்டேயிருக்கும்
நினைவிருக்கட்டும்!

சி. கிருஷ்ணா






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலேயனின் பரிசு - 14

## இயக்கங்காண் படலம்

### முன்வரலாற்றுச் சுருக்கம்

*தமிழர் உலகாள்வதைப் பற்றியும் கண்ணனைப் பற்றியும் உங்களுக்கு இப்போது நன்றாகத் தெரிய வேண்டும். எனவேமுன் வரலாற்றின் பிற்பகுதியை மட்டும் சுருக்கமாகத் தருகிறேன். ஆங்கில ஆராய்ச்சி மாநாட்டுக்குப் போன கண்ணன் எதிர்பாராத விதமாக ஒரு ஆங்கில தீவிரவாத இயக்கத்தினராற் கடத்தப்பட்டு விசாரணைக்கு உட்படுவதற்குக் கொண்டு செல்லப்படும் போது இன்னொரு இயக்கத்தைச் சேர்ந்தவர்களால் விடுவிக்கப்படுகிறான். அவனை விடுத்தவர்களுள் ஒருவன் கண்ணனின் பழைய கால நண்பன். அந்த நட்பின் விளைவாகக் கண்ணனுக்கும் அவன் மேற்படிப்புக்காக வவுனியாவுக்கு அருகாக உள்ள எருதுக்கடவைக்குப் போகும் முன்பு தொடர்பு வைத்திருந்த ஆங்கில விடுதலைச் சிங்கங்களுடனான உறவு புதுப்பிக்கப்பட இருந்த நிலையில், எதிர்பாராத விதமாக முன்பின் தெரியாத இருவர் அவனைத் தேடி வருகின்றனர். வீட்டுப் படலைக்கு வெளியே நின்றவர்களைக் கண்ட அவனுடைய தங்கை மேகலை அவைன எச்சரிக்கிறாள்.*

மேகலை எதிர்பார்த்ததை விட மோசமான ஒரு சூழலே படலைக்கு வெளியே தன்னைக் காத்திருந்ததாகக் கண்ணனுக்குத் தெரிந்தது. வந்த இருவரையும் கண்ணனுக்கு முன்பின் தெரியாது என்றாலும் ஒருவனின் கரகரப்பான தடித்த குரல் எங்கோ கேட்டது போல இருந்தது. அவன் தான் யோவானுடன் சேர்ந்து தன்னைக் காப்பாற்றியவன் என்பது நினைவுக்கு வர முன்னமே, மற்றவன் ''உனக்காக எவ்வளவு நேரம் காத்திருக்கிறது? யார் அந்தப் பொடிச்சி? தேவையில்லாத குறுக்கு விசாரணையெல்லாம் பண்ணி எங்களை மினக்கெடுத்தி விட்டாள்'' என்று கொச்சையான ஆங்கிலத்தில் கண்ணனை அதட்டினான்.

''என்னுடைய தங்கை தான். உங்களை உள்ளே வரச் சொன்னாள் என்று....''

''அவள் யார் எங்களை வரச் சொல்லுகிறதுக்கு. நாங்கள் விரும்பினால் யாருங் கேளாமலே வருவோம், போவோம். ஆம்பிளையள் ஆம்பிளையளைக் கூப்பிட்டால் பெம்பிளையள் போய்ச் சொல்லிறதை விட்டுப் போட்டு என்ன விழற் கதை?'' என்று கொச்சை ஆங்கிலத்தில் தொடர்ந்தான்.

கண்ணன் அதற்கு மறுமொழிச் சொல்ல வாயெடுத்த போது மற்றவன் முதலாமவனுக்குத் தெரியாமல் கண்ணனின் கையைக் கிள்ளிப் ''பதில் சொல்லாதே'' என்ற விதத்தில் சாடை காட்டினான். அப்போது தான் கண்ணனுக்கு அவன் தன்னை மீட்க யோவானுடன் வந்தவன் என்று நினைவுக்கு வந்தது. நான் அப்போதே சொன்னதைப் போல கண்ணனுக்கு அவனுடைய பேர் சூசை தச்சர் என்று தெரியாது.

சிறிது நேரம் மௌனம் தொடர்ந்தது. அதன் பிறகு கண்ணன் ''உங்களுக்கு நான் கிறித்தி எத்துவாத்து சிமித்து என்று தெரியும். கண்ணன் என்று தான் பலரும் அழைப்பார்கள்'' என்றான். அதன் மூலம் மற்றவர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்வார்கள் என்று நினைத் தான். அவர்கள் அதைப் பொருட் படுத்தாமலே தங்களுக்குள் உரையாடிக் கொண்டார்கள். சூசை தன்னுடன் வந்த லிங்கனின் பேரைச் சொல்லாமலே உரையாடிக் கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட வந்த லிங்கனும் அப்படியே நடந்து கொண்டதால் இது நட்புக்கான ஒரு வருகையல்ல என்று கண்ணன் உறுதிப்படுத்திக் கொண்டான். லிங்கன் கண்ணனிடம் ''இனி நடப்பம்'' என்று கொஞ்சம் அதட்டலான குரலில் சொன்னான். ''வீட்டில் சொல்லி விட்டு வருகிறேன்'' என்று கண்ணன் சொன்னதும் லிங்கன் ''தேவையெண்டா நாங்கள் சொல்லிக் கொள்ளிறம் என்று தனது கொச்சை ஆங்கிலத்தில் மேலும் அதட்டலாகச் சொன்னான். இவர்களிடம் இருந்து எப்படியாவது கழன்று விடலாம் என்பதிலேயே கண்ணனின் புலன் போனாலும் கால்கள் அவர்கள் போன வழியிலேயே போயின. வீட்டில் இருந்து சற்றுத் தொலைவில், பழைய இரும்புக் கடையில் இருந்து மீட்டெடுத்தது போலத் தோற்றமுடைய ஒரு மின் மகிழுந்து (மின்சார மோட்டார் கார்) நின்றது. கண்ணனையும் ஏற்றிக் கொண்டு அந்த வண்டி சந்துகள் வழியாக எங்கெல்லாமோ சென்றது. இரண்டு நாழிகைகட்குப் பின்பு பாவனையற்றுக் கிடந்த வான வீதிப் பின்னல் ஒன்றின் கீழே இருந்த ஒரு சிறிய அடைப்பிற்குள் மூவரும் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே யோவான் அவனுக்காகக் காத்திருந்தான். யோவானுடன் கூட வேறு இருவரும் இருந்தார்கள். கண்ணனைத் தரையில் இருந்த பழைய கம்பளம் ஒன்றில் அமரும் படி யோவான் சொன்னான். யோவானும் லிங்கனும் முக்காலிகள் இரண்டில் அமர்ந்தனர். சூசையும் பேதுருவும் (ஆங்கில பேர் பீற்றர்) மத்தேயுவும் கண்ணனுடன் கம்பளத்தில் அமர்ந்தனர். அறிமுகங்கள் நடந்தன. உரையாடல்கள் சுமுகமாகவே இடம் பெற்றன.

கண்ணனுக்கு அப்போது தமிழரின் முக்கனிகளும் மனிதர் பண்பும் பற்றிய உவமை நினைவுக்கு வந்தது. வாழை வெளித் தோற்றத்திற்கு அமையவே சுவையுடையதாய் இருக்கும். மா வெளியில் அழகாய் இருந்தாலும் உள்ளே புளிக்கவும் கூடும். பலா வெளியே முரட்டுத்தன்மையாய் தெரிந்தாலும் எப்போதும் இனிப்பாகவே இருக்கும் என்பதை இப்போது லிங்கனின் நடத்தையில் இருந்து விளங்கிக் கொண்டான். வவுனியாவுக்கு போக முதல் கண்ணன் பலாச் சுளைகளைத் தின்றிருந்தாலும் முதற் தடவையாக முழுதாக ஒரு பலாப் பழத்தை அதுவரை அவன் கண்டதில்லை இப்போது பலாப்பழம் போன்ற ஆங்கில நண்பர்களைக் கண்ட அவனுடைய மனம் நெகிழ்ந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சந்திப்பின் நோக்கம் கண்ணன் ஆ.வி.போ.சி. அமைப்பில் மீண்டும் இணைய விரும்புகிறானா என்று அறிவதுடன் அவனுக்கான பணிகளைத் தீர்மானிப்பதாக இருந்தது. எனினும் அதற்கு முதல் அவனுடைய தமிழ்த் தொடர்புகளைப் பற்றிய குறுக்கு விசாரணை களும் நடந்தன.

கண்ணனைத் தேடி வந்த தமிழ்ப் பெண்ணான அங்கி என்கின்ற அங்கயற்கண்ணி, எருதனாற்றில் விழுந்த கண்ணனின் உயிரைக் காப்பாற்றிய நீச்சலுடைப் பெண்கள், அவனுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தவர்கள், பேராசிரியர் பெருமுடிக்கோ, மருத்துவர் கோதைநாச்சி அம்மையார் என்று எல்லாரைப் பற்றியுமான கேள்விகள் கேட்கப்பட்டன. பேராசிரியர் பெருமுடிக்கோவைத் தவிர்ந்த மற்றவர்கள் யாரென்று அறிய வேண்டுமானால் பழைய தாயகம் இதழ்களைத் தேடி வாசிக்க வேண்டும். அல்லது ஒரு நல்ல தமிழ் உளவள மருத்து வரிடம் உங்கள் நினைவாற்றலை வலுப்படுத்த உதவி தேட வேண்டும்.

இந்த நுணுக்கங்களெல்லாம் இவர் களுக்கு எப்படித் தெரியும் என்று கண்ணனுக்கு வியப்பாக இருந்தது. ஏனெனில் தமிழரிடம் மட்டுமே வலிமை மிக்க ஒரு உளவு அமைப்பு இருந்ததாக அவன் நினைத்திருந்தான். ஆங்கில விடுதலைப் போராளிச் சிங்கங்கள் அவர்கட்கு ஈடுகொடுக்க கூடியவர்களாக இருப்பதை நினைக்க அவனுக்கு பெருமையாகவும் அதே நேரம் சிறிது பயமாகவும் இருந்தது. தன்னைப் பற்றிய தகவல்களை யார் கூறியிருக்கக் கூடும் என்று அவனுக்குள் யோசனைகள் சிதறிப் பாய்ந்தன. நிச்சயமாக அதை அவனால் விசாரித்து அறிய இயலாது. தன்னுடைய நிழல் கூட தமிழருக்கும் சிங்கங்களுக்கும் தன்னைப் பற்றித் தகவல் அனுப்பிக் கொண்டிருக்குமா என்ற எண்ணத்தில் ஆழ்ந்திருந்தவனை நோக்கி யோவான் ''இனி நீ போகலாம்'' என்றான். கண்ணன் கம்பளத்திலிருந்து எழுந்ததும் ''இயக்கத்தில் சத்தியபிரமாணம் செய்வதற்கான நாள் நியமிக்கப்பட்டவுடன் தெரிவிப்போம்'' என்று யோவான் தொடர்ந்தான்.

கண்ணனை வீட்டுக்கு கொண்டு செல்லுகின்ற பேருந்தில் அவனை ஏற்றிவிட அவனுடன் பேதுரு மட்டுமே சென்றான்.

கண்ணன் ஆங்கில மொழியாராய்ச்சி வேலைகள் தொடர்பாக வெளியே சென்று வருவதால் கண்ணன் எங்கே போனான் என்ற கேள்வி எதுவுமே எழவில்லை. சிவா கண்ணனிடம் மிகவும் குறைவாகவே பேசுவார். மகன் தன்னுடைய எதிர்காலத்தைப் பாழாக்கிவிட்டான் என்ற அவருடைய எண்ணத்தை யாரும் மாற்ற இயலவில்லை. இப்போதெல்லாம் மனைவியிடம் கண்ணனைப்பற்றிப் பேசும் போது ''உம்முடைய மகன்'' என்று தான் குறிப்பிடுவார். ஆனாலும் அது கண்ணனைப் பாதிக்கவில்லை. சிவா அவனுடன் பேசுவதைக் குறைத்துக் கொண்டதில் சிறிது மனவருத்தம் இருந்தாலும் என்ன பேசுவார் என்பதை நினைத்த போது அது ஆறுதலாகவே இருந்தது.

படித்த ஆங்கிலேயப் பெற்றோரிடையே ''ஆட்டுப்பட்டி உத்தியோகம் என்றாலும் அரசாங்க உத்தியோகமாக இருக்க வேண்டும்'' என்ற வாக்கியம் கிட்டத் தட்ட ஒரு பழமொழிப் போலாகி விட்டது. எனவே சிவாவைப் பிழை சொல்லிப் பயனில்லை. ஆனால் மகன் அடியெடுத்து வைக்கப் போகிற புதிய பாதையை அறிந்தால் வீட்டில் என்ன நடக்கும் என்றே கற்பனை செய்ய இயலாது.

எனவே கண்ணன் வீட்டைவிட்டு விலகிச் செல்வதற்கான திட்டமொன்றைத் தனது மனதிற் குள் வகுக்கத் தொடங்கினான். மேகலையின் உதவியில்லாமல் அது நடக்காது என்பதும் அவனுக்குத் தெரியும். எனவே மேகலையிடம் எதைச் சொல்வது எதைச் சொல் லாமல் விடுவது என்று மனதிற்குள் கணக்கிட்ட படியே பேருந்தில் இருந்து இறங்கிய கண்ணன் வீட்டை நோக்கி நடந்தான்.

கண்ணன் இணைய இருக்கிற இயக் கத்தைப் பற்றி உங்களுக்குச் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் அடுத்து நடக்க உள்ளவற்றின் காரண காரியங்களை விளங்கிக் கொள்வது எளிதாக இராது. என்றாலும், தமிழீழ விடுதலை இயக்கங்கள் ஒன்றிரண்டின் வரலாறு தெரிந்த எவருக்கும் அடுத்து வரும் பந்திகளை வாசிப்பது அலுப்புத் தட்டக் கூடும் என்று எச்சரிக்க வேண்டிய கடமையும் எனக்குள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலப் பேரரசு இருபதாம் திருவள்ளுவர் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சரிந்ததைப் பற்றியும் அது அமெரிக்காவின் 51வது மாநிலமாவதா ஐரோப்பாவில் அடையாளமிழந்து கரைந்து போவதா என்று தடுமாறிக் கொண்டிருந்த போது நடந்த முதலாம் உலகப் போர் (முன்பு உலகப் போர் எனப்பட்டவை உலகப் போர்களல்ல என்று அறிவீர்கள்) மூண்டது பற்றியும் அறிவீர்கள். அதன் பின் பிரித்தானியாவில் இருந்து உவேல்சு, இசுக்கொத்துலாந்து, அல்சுத்தர் எனப்பட்ட வட அயர்லாந்து கோண்வோள் என்ற பிரதேசங்கள் தனி நாடுகளாகியதும் போதாமல் ஆங்கில நாட்டின் நிலப்பரப்பிலும் தமக்கு உரிமை கொண்டாடிக் கொண்டன. இங்கிலாந்து ஐரோப்பியக் கூட்டாட்சி அமைப்பின் சிறிய நாடாகச் சுருங்கியதுடன் ஐரோப்பாவின் அரச நிருவாக மொழியாகப் பிரெஞ்சு மொழியும் கல்வித் தொழிநுட்பத்துக்கான மொழியாகச் செருமானிய மொழியும் இலக்கியத்திற்கான மொழியாக இத்தாலிய மொழியும் என்று ஆங்கிலமும் உருசிய மொழியுந் தவிர்ந்த அத்தனை மொழிகட்கும் ஒரு தகைமை வழங்கப்பட்டது. அதற்கான ஆலோசனையை வழங்கியவர் அயர்லாந்தைச் சேர்ந்த கண்ணொளி (ப.பெ. கொனலி) என்னும் அரசியல் ஆய்வாளராவார். எனவே அயர்லாந்துக்காரருக்கு எதிரான ஒரு இயக்கம் ஆங்கிலேயரால் முன்னெடுக்கப்பட்டது. அயர்லாந்து ஆங்கிலப் பிரித்தானியவின் பகுதியாக வேண்டும் என்று ஆங்கிலக் காங்கிரசு முன்வைத்த வேண்டுகோள் பலவேறு குழறுபடிகளால் தோல்வியடைந்து இங்கிலாந்து மிகவும் வலுவிழந்து போன நிலையில், இங்கிலாந்துக்குச் சுயாட்சி வேண்டும் என்று உருவாக்கப்பட்ட ஆங்கில அரசுக் கட்சி அதை வெல்ல இயலாத சூழ்நிலையில் ஆங்கில ஐக்கிய விடுதலைக் கூட்டணி என்ற அமைப்பு உருவானது. ஆங்கிலக் கூட்டணியினர் தீவிரமான பிரெஞ்சு, செருமானிய, அயர் விரோதப் பிரசாங்களை முன்னெடுத்தாலும் முடிவில் ஆங்கிலேயர் மேலும் மேலும் தனிமைப்பட்டுப் போனதால் ஆங்கிலக் கூட்டணி சிதறியது. நாட்டில் குழப்பம் மூண்டது. அதனைப் பயன்படுத்திப் பிரஞ்சு நிருவாகிகள் இங்கிலாந்திற்கு சட்டமும் ஒழுங்கும் பேணும் ஐரோப்பியப் படையொன்றை அனுப்பி வைத்தனர். அதன் பின்னணியிலேயே ஆங்கில விடுதலைப் போராளி அமைப்புக்கள் தோன்றின.

# ஆராரோ பாரும்

ஆராயும் நீர் பாரும் ஆராரோ தேடும்
ஆராரோ ஆரிவரோ அவர் எவரோ பாரும்
- அண்ணா
அவர் எவரோ பாரும்
அவர் உடலோ இவர் உடலோ
எவர் உடலோ கூறும்
வாரும் பாரும் காணும்
பாரும் காணும் தேடும்
மாலை நேரம் வந்ததம்மா சண்டையில்லா
ஓய்வு காலம் காணும்
போரின் வேகம் குன்றியபின்
சண்டையில்லா
ஓய்வு நேரம் காணும்
அங்கது யார்? தம்பியனா?
மைந்தனிவன் மாமன் எங்கே?
உங்களவன் தான் இவனும் காணும்
எங்களவன் பிய்ந்த குடல்
செங்குருதி வந்த துணை
சந்திரனை வென்ற முகம்
சாய்ந்த தலை சாந்தன் இவன் - தாரும்
வாரும் பாரும் காணும்
பாரும் காணும் தேடும்
பிய்த்துருவ விட்ட சரம்
வைத்த குறி பட்ட கணை
மற்புயனை வெட்டியது காணும்
சித்திரன் புதைத்த விழி
தைத்த கணை தொட்ட துணை
தெக்கணவன் கைக்குறைகள் பாரும்
சண்டையிலே வென்றவர் ஆர்?
வென்று நிலை நின்றவர் ஆர்?
ஒம் சனமா? உம் சனமா பேசும்
தந்த பிணம் எந்த இனம் காணும்
பாரும் காணும் தேடும்
ஆராரோ ஆரிவரோ பாரும்

**ஆர்கொலோ சதுரர் நாடகப் பாடல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா இயக்கங்களும் ஆங்கிலமும் ஐரோப்பாவின் அரசகரும மொழியாக்கப் படாவிட்டால் இங்கிலாந்தைத் தனி நாடாக்கி இங்கிலாந்திலிருந்து பறித்தெடுக்கப்பட்ட நிலப் பரப்புகளை மீட்பது என்பதையே கொள்கையாகக் கொண்டவை. என்றாலும் சுதந்திர இங்கிலாந்தின் எல்லை எது, ஆங்கிலேயர் என்போர் யார் என்பது பற்றி எந்த இரண்டு இயக்கங்களிடையிலும் ஒற்றுமை இருக்கவில்லை.

அதைவிட ஆங்கிலத் துரோகிகள் யார் என்பதைப் பற்றியும் அவர்களிடையே வலுவான முரண்பாடுகள் இருந்தன. துரோகிகளை ஆங்கில மரபுப்படி தூக்கு மேடையேற்றுவதா தமிழர் மரபிற்கமையக் கழுமரத்தில் ஏற்றுவதா என்பதிலும் கருத்து வேறுபாடு இருந்தது. எந்த மரபுடனும் அடையாளங்காண முடியாத தண்டனை முறைகளும் இருந்து வந்ததையும் குறிப்பிட வேண்டும்.

எல்லா முரண்பாடுகளிலும் முக்கிய மானதாக ஒரு இயக்கத்திற்கு யார் தலைவர் என்பது இருந்து வந்தது என்பதைத் தமிழரால் விளக்கிக் கொள்ள இயலவில்லை. தலைமைப் போட்டியில் ஒவ்வோர் இயக்கத்திற்குள்ளே நடந்த அழிப்புக்களும் இயக்கங்களிடையே நடந்த அழிப்புக்களும் தமிழருக்கு வேடிக்கை யானவையாக இருந்தன. அவர்கள் இவ்வாறான மோதல்களில் யார் தரப்பிலும் ஈடுபடாமல் இருந்த தால் ஆங்கிலப் போராளி இயக்கங்களின் கடும் முயற்சிகளிற் பெரும் பகுதி, போட்டி இயக்கத்தின் குடலை உருவுவதிலும் 'உப்புக்கண்டம் போடுவதிலுமே' செலவானது.

இப்படிப்பட்ட ஒரு சூழலில் ஆ.வி.போ.சி. போட்டி இயக்கங்களையெல்லாம் மேவி ஒரு வலுவான இயக்கமாக உருவாகி விட்டது. ஆனாலும் சிங்கங்களிடையே அதிகார மோதல் களும் அதன் விளைவான பிளவுகளும் எதிர்பாராத விதமான சாவுகளும் காணாமற் போதல்களும் தொடர்ந்தும் நடந்து வந்தன. எவ்வாறாயினும் ஆ.வி.போ.சி. அமைப்பை விட்டு விலகி வேறு அமைப்புக்களை உருவாக்கியவர்களாலும் வேறு அமைப்புகளில் சேர்ந்தவர்களாலும் ஆங்கில விடுதலைப் போராட்ட அரசியலில் நிலைக்க இயலவில்லை. அவற்றுக்கெல்லாம் ஆ.வி.போ.சி. உளவாளிகள் தான் காரணமென்று சிலர் கருதினார்கள். ஆ.வி.போ.சிக்கும் தமிழ் ஏகாதிபத்திவாதிக்கு மிடையே இரகசிய உறவு இருந்ததால் ஆ.வி.போ.சி.யால் போட்டி அமைப்புகளை நசுக்க முடிந்தது என்றுஞ் சொல்லப்பட்டது.

ஆ.வி.போ.சி. என்றுமே தமிழராட்சிக்கு எதிராகப் போராடவில்லை. தமிழ் மொழியின் ஆதிக்கத்தை எதிர்த்துப் பேசிய போதும் தமிழர் நிர்வாகம் நடுநிலையானது என்றும் தமிழர் நீதி செம்மையானது என்றும் ஆங்கிலேயர் நடுவே பரவலாக இருந்து வந்த கருத்துக்கள் சிங்கங் களிடையேயும் செல்வாக்குப் பெற்றிருந்தன. ஐரோப்பிய ஏகாதிபத்தியம், பிரெஞ்சு ஏகாதி பத்தியம் என்ற கருத்துக்களை ஆங்கிலத் தேசிய வாதிகள் பரப்பி வந்தனர். அக் கருத்துக்களை ஏற்காதோர் ஐரோப்பிய அடிவருடிகள், ஆங்கிலத் துரோகிகள், எயிற்டாட் (இது தமிழச் சொல்லொன்றின் ஆங்கில வடிவமென்றே நினைக்கிறேன்) போன்ற பேர்களால் கவுரவிக்கப் பட்டனர். அவர்களைச் சிவபதம் எய்தச் செய் வதற்கான திட்டங்களும் சிங்கங்களிடம் இருந்தன. இதுவரை லோர்ட்ஃபாதர் எனப்பட்ட ஒரு உள்ளூராட்சித் தலைவர் மட்டுமே கழுவேற்றப்பட்டாலும் மற்றவர்கட்குரிய கழு மரங்களில் அவர்களுடைய பேர்கள் பொறிக்கப் பட்டு விட்டன.

கண்ணனுக்கு இவை பற்றித் தெரியும் என்றாலும் அவனுடைய சைவ நற்சிந்தனை துரோகிகளை இவ்வாறு தீர்த்துக் கட்டுவதை எதிர்த்து நின்றது. சிங்கங்களை வெளியில் இருந்து விமர்சிப்பதை விட உள்ளே போய்த் திருத்தலாம் என்று நம்பிச் சேர்ந்தவர்கள் பலர் இருந்தனர். கண்ணனும் அந்த வரிசையில் ஒருவனாக இருந்தான். தமிழ் ஏகாதிபதியமே பெரிய எதிரி என்ற கண்ணனின் கருத்துக்குச் சிங்கங்களிடையே இப்போது செல்வாக்கு இல்லை என்பதும் கண்ணனுக்குத் தெரியாது. அதை விட ஐரோப்பிய நிருவாகக் கெடுபிடிகளின் நடுவே கடுமையான அரசியல் விவாதங்கட்கு இடமில்லை என்பதால் முக்கியமான முடிவுகளெல்லாம் தலைவர்களாலேயே எடுக்கப்பட்டன. என்றாலும் உறுப்பினர்கட்குத் தம்மைச் சுயவிமர்சனம் செய்யும் உரிமை முழுமையாகவே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் வந்த பந்திகளை நீங்கள் வாசித்து முடிப்பதற்குள் கண்ணன் தனது எதிர்காலம் பற்றிய திட்டங்களை வீட்டில் எப்படி விளக்குவது என்று ஒரு முடிவுக்கு வந்து விட்டான். மேகலை அவனுடைய திட்டங்களுக்கு உடன்பாடாகவே இருப்பாள் என்பதை அவன் எதிர்பார்த்திருக் கவில்லை.

மேகலை இளம் பெண் சிங்கங்கள் என்ற அமைப்பில் இணைந்திருப்பது கண்ணனுக்கத் தெரியாது. வீட்டில் அம்பை ஆச்சியிடம் மட்டுமே மேகலை தன் அரசியல் கருத்துக்கள சாடை மாடையாகச் சொல்லியிருக்கிறாள். அவ்வைப் பாட்டிக்கு இந்த ஐரோப்பிய விரோத ஆங்கிலத் தேசியவாதம் பிடிக்கவில்லை. தமிழரே உலக மக்களின் எதிரிகள் என்பது அவ்வைப் பாட்டியின் கருத்து. எனவே மேகலை பாட்டியுடன் அரசியல் பேசுவதைத் தவிர்த்து விடுவாள். பாட்டியை அடிக்கடி காண வாய்ப்பில்லாததால் பாட்டியின் தமிழர் விரோதக் கருத்துக்களைக் கேட்கும் வாய்ப்புகளும் குறைவு. கண்ணன் மீது பாட்டியின் செல்வாக்கு அதிகம்.

கண்ணன் தனது ஆங்கில மொழி ஆராய்ச்சிக்காக உள்ளுவராமிட்டனுக்கு வெளியே அடிக்கடி போய்வர வேண்டும் என்று சொன்னதை அவனுடைய தந்தை விரும்பா விட்டாலும் அதில் அவருக்கு ஐயமிருக்கவில்லை. மேகலைக்குக் கண்ணன் சிங்கங்ளுக்கு ஆதரவானவனா இல்லையா என்று அறிவதற்கு மேலாக அவன் விடயத்தில் எந்த விதமான கவலையுமில்லை. கண்ணனும் தனது ஆராய்ச்சி வேலைகளைப் புறக்கணியாமல் செய்து வந்ததால் வெளியிலிருந்து யாருமே அவன் மீது ஐயப்பட வாய்ப்பிருக்கவில்லை.

இரண்டு வாரங்கள் கழித்து அவனுக்கு மின்னோலை ஒன்று அனுப்பட்டிருந்தது. அது ஆங்கில ஆராய்ச்சி மாநாட்டு ஏற்பாட்டாளர் களின் பணிமனையிலிருந்து வந்திருந்தது. அது வந்த வேளை, கண்ணன் அவ்வைப் பாட்டியைப் பார்க்கச் சென்றிருந்ததால் மேகலை அதைப் பார்க்க நேரிட்டது.

தேஞ்சுபூம்பட்டினத்தில் (இலண்டன்) வாழும் ஆங்கில அறிஞர் ஒருவரைச் சந்திப்பதற்குச் செல்லுமாறு கண்ணனைக் கேட்டிருந்தனர். ஆங்கில ஆராய்ச்சி நிறுவனம்

# நிலா... நிலா...

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

நிலா... நிலா
நீ ஏன்..
அலைகின்றாய்
அழுகின்றாய்.

நிலா... நிலா
நீ... ஏன்
வளர் கின்றாய்
தேய்கின்றாய்

நிலா... நிலா
நீ ஏன்..
குளிர்கின்றாய்
ஓளிர்கின்றாய்

நிலா... நிலா
நீ ஏன்
மறைக்கின்றாய்
ஒழிக்கின்றாய்

நிலா... நிலா
நானும் உன்னோடு
நாளும்
அலைகின் றேன்
அழுகின்றேன்...

யாழினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் கண்ணனைத் தேஞ்சுபூம்பட்டினத்திற்கு அழைக்க வேண்டும் என்று அவளுக்கு விளங்கவில்லை. அவளுக்கு ஆங்கில ஆராய்ச்சியில் அதிகம் ஈடுபாடில்லாததால் அவள் அதை அதிகம் விசாரிக்க முற்படவில்லை.

அவ்வைப் பாட்டியைச் சந்தித்துவிட்டுத் திரும்பிய கண்ணனிடம் மேகலை அவனுக்கு வந்த அழைப்பைப் பற்றித் தெரிவித்தாள். கண்ணன் அதை எதிர்பார்த்தவன் போலவே நடந்து கொண்டான். மேகலை துருவித் துருவி விசாரிக்காவிட்டாலும் அந்த அழைப்பு வெறுமனே மொழியாராய்ச்சி பற்றியது மட்டுமல்ல என்று அவள் மனம் சொன்னது.

கண்ணன் தேஞ்சுப்பூம்பட்டினத்துச் சந்திப்பைப் பற்றி மிகுந்த உற்சாகத்துடன் இருந்தான். அம்பை ஆச்சிக்கும் தன் பேரனை ஆங்கில அறிஞர்கள் மதித்து அழைத்ததைப் பற்றிப் பெருமையாகவே இருந்தது. சிவாவுக்கு மகனைப் பற்றிச் சிறிது பெருமை இருந்தாலும் படிப்பைக் குழப்பிவிட்டு ஆங்கில ஆராச்சி செய்வதைப் பற்றிய கோபத்தைத் தணிக்க அது போதுமானதாக இருக்க வில்லை. எனினும் கண்ணன் அடுத்த நாள் மேற்கொண்ட பயணத்துக்கு வீட்டில் ஒரு தடையும் சொல்லப்படவில்லை.

கண்ணனின் மனதில் சில ஐயங்கள் தோன்றியிருப்பதைப் போல மேகலைக்கத் தென்பட்டது. எனினும் அதைத் தீவிரமாக விசாரிக்க முற்படவில்லை. கண்ணன் புறப்படும்போது அவனுடைய காதோடு ''அண்ணா ஒன்றைப் பற்றியும் கவலைப படாதே, எல்லாஞ் சரிவரும்'' என்று சொன்னாள்.


**ஜெகதலப்பிரதாபன்**

*கண்ணனுடைய மனச் சஞ்சலத்திற்குக் காரணம் என்னவாயிருக்கும் என்று அறிய நீங்கள் ஆவலாயிருப்பீர்கள். அவ்வைப் பாட்டி விடுதலைப் போராளிச் சிங்க விரோதக் கருத்துக்களைக் கூறி அவனுடைய மனத்தைக் கலைத்திருப்பாரா? விடுதலைச் சிங்கங்களின் நடைமுறைகள் பற்றிக் கண்ணன் மனத்தில் இருந்த கருத்து வேறுபாடுகள் அவனைக் குழப்பினவா? அவனுடைய ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டு தொடர இயலாமற் போய்விமோ என்று அவன் கவலைப்பட்டானா? இவையெல்லாமே நியாயமான கேள்விகள். ஆனாலும் உண்மை வேறெங்கேயும் இருக்கலாமல்லவா. என்னால் உங்களுக்கு அதிகம் உதவ இயலாது. ஆனாலும் அடுத்த படலத்தைப் படித்தால் உங்கள் கேள்விகளுக்கு உரிய விடைகள் கிடைக்கும் என்று உறுதி கூற இயலும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ''நச்சுப் பாம்பின் வாக்கு மூலம்''



பொழுதுகளின் மனத்திரையில்
கனவின் ஓவியப்படங்கள் பயணிக்கும்
எதிர் வாழ்வின் ஜீவனை
உசுப்பிப் பார்க்கும்
நம்பிக்கையின் ஆறாவது விரல்.

தடைகளைகத் தாண்டி
தூரச் செல்லும் காற்றின் வழியில்
மௌனத்தின் நிழல்
மிருதுவான சக்கரங்களில்
பயணிக்க எத்தனிக்கிறது.

நீர்ப்பரப்பின் ஈரப்பகை
உடலின் அவையங்களை நனைத்தது
இடப் பெயர்வின் பிரக்ஞை அணிந்த
திராணியை
இருப்புக் கொள்ள முடியாமல்
முடக்குகிறது.

பணத்தின் மயக்கத்தில்
தோல்வியின் அமர்வுகளின் வியாபகங்களை
ஆடைகின்ற முகங்கள்
ஆதிகாரம் புரிகின்ற ஆதனங்களை
ஆறியாமையின் புள்ளிகளில்
உறுதி செய்கின்றன.

முதலாளித்துவம், ஜனநாயகம் மற்றும்
கொமுயுனிசம் என்பன பற்றிய
எந்தத் தொழிலும்
பாசிசத்திலிருந்து மனிதங்களை
விடுவிப்பதாய் இல்லை.

பட்ட மரம் ஒன்றில்
கூடுகட்ட முயலும் பறவையின்
துனிமையை எதிர்பார்த்தபடி
நச்சுப் பாம்பு காத்திருக்கும் காலத்தை
''வாக்கு மூலம்'' ஈர்க்கிறது.

எல்.வஸீம் அக்ரம்

# பதவி

பதவி ஒரு எட்டாக்கனி
அதற்காகக் கொட்டாவி விடுகின்ற
ஒருவன் நான்.

கொட்டாவி விட்டு விட்டே
என் கொடுப்புகள்
கிழிந்து விட்டன...

ஓடி ஓடியே
என் உள்ளங்கால்கள்
தேய்ந்து விட்டன...

தம்பி கையைப்
பிடித்தும் என்ன?
எம்பி காலைப்
பிடித்தும் என்ன?

எல்லோரும் சொல்கின்ற
ஒரே வார்த்தை
'வேக்கன்சி நோ' என்பது தான்
வேறொன்றும் இல்லை.




பாடு பட்டுப் படித்தேன்
பட்டத்தைத் தந்தார்கள்
பதவியை யார் தருவது?

தள்ளினால்க் காசு
தருவார்களாம் வேலை
ஏழை நான் இங்கே
எதைத்தள்ள...?

ஓ... ஏழை என்பதனால்
அரசியல் செல்வாக்குமில்லை
அஞ்சு சல்லிக் காசுமில்லை

படைத்தவனுக்காவது
இந்தப் பரிதாப நிலை
தேரியாதா என்ன?

ஆம்...
பட்ட மரமாய் நிற்கிறேன்
பதவி ஒன்றுக்காகக்
கொட்டாவி
விட்டபடி நிற்கிறேன்.

கன்னிமுத்து வெல்லபதியான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுநிலை எண்டா எப்பிடியிருக்கும்?

வழக்குத் தீர்க்கிறதுக்கு நீதவான் மாதிரிப் பள்ளிகூடத்திலை பேச்சுப்போட்டி மாதிரி போட்டியளுக்கு நீதிபதியள் எண்டு வைப்பினம். பிறகு பிறகு நடுவர்மார் எண்டு தான் சொல்லுகினை. வழக்குப் பேசினா, சட்டம் நீதி எண்டு புத்தகம் பாத்தா முடிவு செய்யிறவை? ஆர் வடிவாக் கதைச்சவை எண்டு தானே முடிவு செய்யிறவை எண்டதாலை, நீதிபதி எண்டு சொல்கிறதை விட நடுவர் எண்டு சொல்லிறது சரி போல தான் தெரிஞ்சுது. அப்ப நடுவர் எண்டிறவர் தனக்கு எது சரி எண்டு தெரியுது எண்டு யோசியாமல் யார் கெட்டித்தனமாக் கதைச்சினம் எண்டு பார்த்து தீர்ப்பு வழங்குவார். நீதவான் அப்பிடி செய்வார் எண்டால் வழக்கு பேசுகிறவைன்டை வழக்கென்ன நீதிஞாயமென்ன எண்டு பாராமை ஆர் வடிவா இங்கிலிஸ் கதைக்கினை எண்டு பாத்து அந்தப் பிறக்கிறாசி அப்புகாத்துமார் கதைக்கிற பக்கத்துக்குத்தான் வழக்குத் தீர்பினை எண்டாக், கதையிலை கெட்டிக்காரர் நல்லாக் காசு சேர்ப்பினை. காசில்லாமை வழக்குப் பேசுகிறவை பாடு கயிட்டந்தான்.

எண்டாலும் எங்கடை ஆக்கள் எப்பவும் பேரும் புகழும் இருக்கிற பிறக்கிறாசி அப்புக்காத்து எண்டு தானே போவினை. அவையும் வெல்லக் கூடிய வழக்கெண்டா விருப்பமா எடுப்பினை. இல்லாட்டி நேரமில்லை வசதியில்லை எண்டு யாரிட்டையும் கழட்டியும் விடேலும். அதோடை சாட்சியளையும் பலமாதிரி வளைக்கேலும். சாட்சி சிலது கோட்டுக்குள்ளை உருட்டி வெருட்டினா வளையும். சிலதை வெளியில்லையும் வளைப்பினை. இப்ப இப்ப சாட்சியளை வளைக்கிறதைக் காட்டிலும் பொலிசையும் நீதவான்மாரையும் வளைக்கிறது லேசான வேலை எண்டு சொல்லுகினம். எனக்கொண்டும் விளங்காது. ஏலுமெண்டளவு பொலிஸ் ஸ்ரேசன் கோட்டு வீடு எண்டு போகாமல் தப்பி விடுவன். ஒருதரம் வீட்டிலை என்னவோ நகை களவு போனதைப் பொலிசிலை சொல்லப் போய் ஓவைசீ வரும் வரைக்கும் காக்கப்பண்ணி என்னட்டைக் கேட்டளவு குறுக்குக் கேள்வியளைக் கள்ளனை பிடிச்சிருந்தாலும் கேட்டிராயினை. கடைசிலாக் கள்ளனும் அம்பிடேல்லை, நகையும் அம்பிடேல்லை. பிறகு பிறகு ஆக்களிலிலை வழக்கு சோடிக்கிறதைப் பற்றியும் கேள்விபட்ட தோடை இந்தப் பொலிசும் வேணாம் கோட்டும் வீடும் வேணாம் எண்டு விட்டுவிட்டன்.

எண்டாலும் நடுநிலை ஞாயம் எண்டு ஆக்கள் கதைப்பினமெல்லோ. அதுகளிலிலை எனக்கு எப்பவும் கொஞ்சம் நம்பிக்கை இருந்துது. அப்பதான் எங்கையோ கண்ட ஒரு புத்தகத்தின்டை உறையிலை “நடுநிலை எண்டு கதைக்கிறவன் கடைஞ்செடுத்த கள்ளனாய் இருப்பான் இல்லாவிட்டால் ஒண்டும் விளங்காத உலக்கையனா இருப்பான்” எண்டு சொல்லி இருந்துது. எனக்கு இங்கிலிஸ் அவ்வளவு ஓடாது எண்டு உங்களுக்குத் தெரியுந் தானே. இங்கிலிசிலை கிடந்ததிண்டை கருத்து அது தான் எண்டு புத்தகத்தை வைச்சிருந்த ஆள் சொன்னவர். அவர் ஒரு கொம்யூனிஸ் தரவழி எண்டு தெரியும். அதாலை நான் அவ்வளவுக்கு அதை நம்பேல்லை.


கடைசிக் கொஞ்ச வருசமா நான் கண்டு அனுபவிச்சதை யோசிச்சுப் பாத்தா அந்தப் புத்தகத்திலை சொன்னதிலை உண்மை இருக்குமாப்போலை தான் தெரியுது. சில பேர் தாங்கள் நடுநிலைக்காரர் எண்டு சொல்லிப் போட்டு, சில மாதிரியான கதையள் கதைக் கிறவையை ஒருபக்கச் சார்பெண்டும் தீவிரக் காறரெண்டும் கண்டிப்பினை. அதுக்கு மாறாக் கதைக்கிறவையைப் பற்றி ஒரு சொல்லும் கதையாயினை.

போன இலக்சனிலை சனாதிபதிக்கு 22 பேர் கேட்டவை. அதிலை நடுநிலை எண்டு எதை எடுக்கிறது. ரண்டு பேருக்கை ஒரு ஆள் தான் வருமெண்டு சொல்லிப் போட்டு எங்கடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ச்சிமணி ஆதவா அ. சிந்தாமணி



நடுநிலைக்காறர் ஆருக்குப் போடுகிறது எண்டு வெளியாச் சொல்லாமை ஒரு சைகை காட்டிச்சினம். அதே நேரம், போட்டுப் பிரயோசனமில்லை எண்டதாலை, சிலபேர் தேர்தலிலை பங்கெடுக்காதை எண்டும் வேறை சில பேர் வாக்குச் சீட்டைப் பழுதாக்கி எதிர்ப்பைக் காட்டு எண்டும் சொன்ன நேரம் எங்கடை நடுநிலைக்காறர் என்ன செய்தினம்? போடாதை எண்டு சிலபேர் சொல்லுகினை. இதுதான் அவையின்ரை ஞாயம். இன்னாருக்குப் போடு எண்டு சிலபேர் சொல்லுகினை. இதுதான் அவையிண்ட ஞாயம் எண்டும் சொல்லி, விரும்பினபடி செய்யுங்கோ எண்டு சொல்லுகிறதெல்லோ மெய்யான நடுநிலை. தங்களாலை வெளிப்படையாக் கதைக்க ஏலாத நேரத்திலை இவை வாழைப் பழத்திலை ஊசி ஏத்துகிற மாதிரிக் கதைச்சுப் போட்டுத் தாங்கள் எப்பவுமே நடுநிலை எண்டு சொல்லுவினம்.

இத்தினை சனம் தேவையில்லாமை அழிஞ்சு போயிருக்குது. அதை அழிச்சவை ரண்டு பேருக்குள்ளை ஆரைத் தெரிவு செய்கிறது எண்டதிலை தான் எங்கடை நடுநிலைக் காறரின்டை நடுநிலை போய் நிக்குது.

சரிக்கும் பிழைக்கும் நல்லதுக்கும் கெட்டதுக்கும் நடுவிலை நடுநிலை கதைக்கிறவன் கள்ளனா இருப்பானே ஒழிய உலக்கையனா இருக்க மாட்டான் எண்டுதான் நினைக்கிறன். அதையும் அந்தக் கொம்யூனிஸ் புத்தகக்காரர் வடிவாச் சொல்லியிருக்க வேணும். சொல்லியிருப்பர். எண்டாலும் எனக்கு இங்கிலிஸ் அவ்வளவு ஓடாது தானே.

இப்ப நினைச்சுப் பாத்தா நடுநிலை எண்டிறதுக்கு மதில் மேல் பூனை எண்டும் மீனுக்குத் தலையும் பாம்புக்கு வாலும் காட்டிற சாமான், அதுகென்ன பேர்? அது மாதிரி எண்டும் தான் தெரியுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்

நான் யார்?
'சுதர்சன்' எனும் சுட்டுப் பொருளா?
உயிரும் மெய்யுமா நான்?
மெய் என்பதே பெரும் பொய் அல்லவா?
நான் என்பது திரவமா? திண்மமா? வாயுவா?
எதுதான் 'நான்' எனும் பொருள்!

'நானென்று ஓர்பொருளே இல்லை
ஏது நிகழினும் நமக்கென்று இரு' என்றாயே
எட்டயபுரத்து சிட்டுக்குருவியே – சிறியோனின்
சிந்தனைக்கு எட்டவில்லையே உம்கருத்து!!

'நானென்று சொன்னாலே நானல்ல நீதான்'
காதலின் போதையில் காதலன் உளறுகிறான்
யாரேனும் சொல்லுங்கள்
யோசித்துக் பார்த்தேன், தெரியவில்லை
யாசிக்கிறேன்
நான் யார்?

தெருவில் வரும் வைக்கோல் ஏற்றிய மாட்டு வண்டியை காண்கிறேன்
அதன் அச்சுப் பற்றி சுழல்வது போல், நாண்டுகொண்டு நிற்கிறது
நான் எனும் சிந்தனை!
வைக்கோல்கள் மரக்கிளைகளில் தொங்குவது போல்
என் ஆத்மாவும் மானுட உறவு எனும் கிளைஞரோடு தங்கி
போமிடத்தை தவறிடுமோ?
காட்டு மூங்கிலாய் நிற்கின்றேனே, கனன்று எரியும் ஞானத்தீ
என் அகம் எனும் காட்டை எரித்து
புல்லாங்குழலாய் ஆக்கிவிடாதா?

மானுட சமுத்திரத்தில் ஓர்துளிதானா நான்?
எனது நதிமூலம் எது?
'நான்' செத்த பிறகுதான் அறியமுடியுமா?
பிரபஞ்சமெனும் பெருவெளியின் ஒருபுள்ளியா நான்?
தெய்வீகப் பெருநெருப்பின் ஒரு பொறியா நான்?
நான்யார்? நான்யார்? நான்யார்?

க. சுதர்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலோலியூர் வேல் நந்தன் கவிதைகள்

## சென்றொழிந்த காலம்

சென்றொழிந்த காலம்
திரும்பிவர மாட்டாது
அன்று சொன்ன முருகையனும்
அவனியிலே இன்று இல்லை
நன்று சொன்னார் அன்று அவர்
இன்றதனைப் புரிந்து கொண்டோம்
நேற்றுவரை எம் வீட்டு
முற்றமதில் வீற்றிருந்து
ஆட்சி செய்த விளங்காத யுத்தமது
இன்று இங்கு இல்லைத்தான்
ஆனாலும் சென்றொழிந்த காலமென
ஒழித்துவிடல் தகுமோ சொல்
காலமது திரும்பாது என்றாலும்
காலத்தின் நினைவுகள்
மீண்டு வரும்
நேற்றைய வாழ்வது தந்துவிட்ட
சில மகிழ்வு இன்றில்லையேயெ
மனம் ஏங்கும் போதினிலே
சென்றொழிந்த காலம்
நெடுமூச்சாய் நினைவில் எழும்.

## யதார்த்தம் / கிடையா நிவாரணம்

பொருட்கள் நிறைந்துள்ள
எமது வீதியின்
வாகனப் புழுதிக்குள்
எம் வலிகள் மறந்துபோய்
கூட்டம் நிறைந்து
குதூகலித்தபடி மீண்டும்
வாழ்விங்கு புதிய திசைகாட்டிக்
கூவி அழைக்கிறது
ஆனாலும் இன்னமும்
இருக்க இடமின்றி
உடுக்க உடையின்றி
உண்ண உணவின்றி
ஊனமாய்ப் போனபடி
ஒரு கூட்டம் நிவாரணம் தேடி
மீண்டும் அலைகிறது
எத்தனை நிவாரணங்கள் பெற்றிடினும்
எம் நிம்மதி வாழ்விற்கான
நிவாரணம் மட்டும்
இன்னும் கிடைக்காமலே
தொடரும் எம் பயணங்கள்
எப்போது முடியும்?

## கூத்து

கூத்தாடிகளே விரைவாயாடுங்கள்
பொழுதும் புலரப் போகுது பாரீர்
புலர்ந்தால் ஜிகினாப் பொட்டுகள் அந்தோ
வெளுக்கப் போகுது சாயம்! கண்டால்
விரையப் போகுது சனங்கள் வீடு

கூத்தாடிகளே விரைவாயாடுங்கள்

இருட்டு மடியும் முன்னே, கூத்தை
எப்படியும் நடத்திப் போடுக!
மருட்டு வேஷம் குலைந்து போனால்
மக்கள் கூட்டம் கலைந்து போகும்

கூத்தாடிகளே விரைவாயாடுங்கள்

போக்கிரிப் பொன்னன் தருமனுக்கென்றும்
பொண்டுகச் சின்னான் அருச்சுணனென்றும்
மோக்கான் முருகன் திரௌபதி என்றும்
முழுவதும் காரிய பாகங்கள் விளங்கும்

கூத்தாடிகளே விரைவாயாடுங்கள்

கூத்தாடிகளே விரைவாயாடுங்கள்
குதித்துச் சதங்கை திமித்துத் தா! தெய்
குலுங்கக் குலுங்கக் குலுங்கச் சிலம்பிக்
கூத்தாடிகளே விரைவாயாடுங்கள்

நீலவாணன் பாடற் பகுதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை வாங்கு

- தி.சி.ஜெகேந்திரன் -

குணசேகரவை எனக்குப் பல்கலைக் கழகக் காலத்திற் பழக்கம். நாங்கள் வெவ்வேறு பீடங்களில் படித்தாலும் மெய்வல்லுநர் போட்டிகளில் பங்கு பற்றுவதற்காக ஒரே விளையாட்டுத் திடலுக்குத் தான் போவோம். மூன்று வருடப் பழக்கத்திற்குப் பிறகு குணசேகரவை இப்போது நாற்பது வருடங்கள் கழித்துச் சந்திக்கிறேன். இரண்டு பேரும் புஞ்சி பொரளையில் உள்ள கடவுச்சீட்டு அலுவல கத்துக்குப் போயிருந்தோம். என்னுடைய விண்ணப் பத்தைக் கொடுத்து விட்டுப் பேரை அழைப்பதற்குக் காத்திருந்தேன். என்னுடைய பேரை அழைத் தார்கள். படிவத்தைச் சரிபார்க்கிற போது ஒரு தகவலைத் தெளிவாக எழுதத் தவறி விட்டேன். அதைத் திருத்திவிட்டு மீண்டும் நாற்காலியில் அமர்ந்த போது, என் அருகில் அமர்ந்திருந்த ஒருவர் என்னிடம் ஆங்கிலத்தில் ''நீங்கள் ஜே தானே?'' என்று கேட்டார். இளமைக் காலத்தில் என்னுடைய பேரின் சுருக்கிய வடிவம் அது. இப்போது யாரும் அப்படிக் கூப்பிடுவதில்லை. ஒரு நிமிடத் தயக்கத்திற்குப் பிறகு, ''ஓம்... நீங்கள்...'' என்று .ழுத்தேன். ''குணே. நினை வில்லையா? கொழும்பு... வளாகம்...'' என்று முறுவலுடன் கேட்டார். தலைமயிர் கொஞ்சம் நரைத்துப் போயிருந்ததால் அது குணசேகர என்று மட்டுக்கட்டக் கொஞ்சம் நேரமெடுத்தது. பின்பு கொஞ்ச நேரம் பழைய கதைகளை எல்லாம் இரை மீட்டோம். பேச்சு, தயக்கங்களை எல்லாம் உடைத்துக் கொண்டு போரைப் பற்றியும் அகதி முகாங்களைப் பற்றியும் நகர்ந்தது.

அகதி முகாங்களில் உள்ள நிலைமை களைப் பற்றி நாள் அறிந்ததை விடக் கொஞ்சம் விவரமாகவே குணசேகரவுக்குத் தெரியும். எனவே புதிதாக நான் எதையும் சொல்ல வேண்டியிருக் கவில்லை. பிறகு கதை மீண்டும் பழைய படி கடந்த காலத்தை நோக்கிப் போனது. ''எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் கோயிலுக்குள் போகிறதற்காகச் சண்டை நடந்த காலம். இப்போது சாதிச் சண்டை எல்லாம் முடிந்து விட்டதா?'' என்று குணசேகர கேட்டார். சாதிச் சண்டையில்லை சாதி ஒடுக்குமுறை என்று சொல்ல நினைத்தேன். சொல்லவில்லை. ''அதையேன் கேட்கிறீர்கள் அகதி முகாங் களுக்குள்ளும் சாதி சொல்லி ஒதுக்குகிறார்கள்'' என்றேன். குணசேகரவால் நம்ப முடியவில்லை. ''இந்த இருபத்தோராவது நூற்றாண்டிலுமா?'' என்று கேட்டார். ''எங்களுடைய சனம் இப்படியே இருந்தால் முப்பத்தோராவது நூற்றாண்டிலும் அதே கதையாகத் தான் இருக்கும்'' என்றேன். குணசேகர ஒன்றுமே சொல்லவில்லை. ''சிங்களவரிடையே இந்தத் தீண்டாமைப் பிரச்சனை ஒன்றும் இல்லை. நீங்கள் கொடுத்து வைத்தவர்கள்' என்றேன்.

''அப்படிச் சொல்ல வேண்டாம். இருந்தது. இப்போது தீண்டாமையாக எதுவும் இல்லாவிட்டாலும் சாதிச் சிந்தனை பலரிடமும் இருக்கிறது. ஆனாலும் உலகம் மாறி வருகிறது. இதெல்லாம் மெல்ல மெல்லப் போய் விடும்'' என்றார். ''என்கென்னவோ நம்பிக்கை இல்லை'' என்றேன்.

கொஞ்சம் யோசித்து விட்டு ஒரு கதை சொல்கிறேன் என்றார். அது அவருடைய பாடசாலை நாட்களில் நடந்த கதை. 1950களில் அவர் முதலாம் வகுப்பில் படித்த காலத்தில்அது நடந்தது. மாத்தறை மாவட்டத்தில் அவர் களுடைய ஊரில் அது தான் நல்ல பாடசாலை.

பாடசாலை தொடங்கி ஒரு வாரத்திற்குள் குணசேகரவின் வகுப்பறை நோக்கிக் கனவான் மாதிரித் தோற்றமுள்ள ஒருவர் வந்து அறைக்குள் எட்டிப் பார்த்தார். பிறகு பாடமெடுத்துக் கொண்டிருந்த ஆசிரியரிடம் ''மன்னிக்க வேண்டும்'' என்று சொல்லி அவரை வெளியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்தார். அவர்களிடையில் ஏதோ உரையாடல் நடந்தது. வந்தவர் விருட்டென்று திரும்பி நேராகப் பாடசாலை அதிபரிடம் போனார். பாடசாலையில் தன்னுடைய மகன் படிப்பதாகவும் மகன் அமர்ந்திருக்கும் வாங்கிலிருந்து இன்னொரு வாங்கிற்கு மாற்றி அமர்த்த முடியுமத என்றும் அதிபரைக் கேட்டார். அப்படி மாற்றுவதனால் வகுப்பாசிரியர் செய்யலாம் என்றார். வகுப்பாசிரியர் மறுத்து விட்டாரென்று வந்தவர் சொன்னார்.

அப்போது தான் நினைவு வந்தவர் போல ''கீழ் வகுப்புக்கட்குப் பொறுப்பானவர் துணை அதிபர். அவரிடம் சொல்லாமல் எதையுமே ஆசிரியர்கள் மாற்ற மாட்டார்கள்'' என்று அதிபர் சொன்னார். வந்தவர் துணை அதிபரைத் தேடிப் போனார். துணை அதிபர் ஒரு வகுப்பில் பாடமெடுத்துக் கொண்டிருந்தார். வந்தவர் அவரிடம் பேச முயன்ற போது, ''இன்று முழுவதும் எனக்கு வகுப்புக்கள் இருக்கின்றன பாடசாலை முடிந்த பிறகு பேசுவோம்'' என்று கண்டிப்பாய்ச் சொல்லி விட்டார். வந்தவருக்கு அவ்வளவு நேரம் காத்திருக்க இயலாது என்பதால், துணை அதிபரை வீட்டிற் போய்ச் சந்திக்கலாமா என்று கேட்டார். துணை அதிபர் மறுக்கவில்லை.

துணை அதிபரின் பேர், முகவரி எல்லாம் விசாரித்து, அவர் அன்று மாலை ஒரு கையில் வாழைப்பழம் வெற்றிலை எல்லாம் சுமந்து கொண்டு துணை அதிபரின் வீட்டுக்குப் போனார். வழக்கமான உபசாரங்கட்குப் பிறகு என்ன பிரச்சனை என்று துணை அதிபரைக் கேட்டார்.

''என்னுடைய மகனை அமர்த்தியிருக்கிற இடம் சரியில்லை'' என்றார்.

''உங்களுடைய மகனுடைய பேர் என்ன?'' என்று துணை அதிபர் கேட்டார்.

''நான் குணதிலக ஆராய்ச்சிலாகே சோமரத்ன பாலித குணதிலக. மகன் குணதிலக ஆராய்ச்சிலாகே சோமரத்ன பியால் குணதிலக என்றார். துணை அதிபர், ''அப்படியானால் உங்கள் மகன் அனேகமாக வகுப்பில் இரண்டாவது வரிசையில் தானே இருப்பான். அதிலென்ன பிரச்சனை?'' என்று கேட்டார்.

''வரிசையில் ஒன்றும் பிரச்சனை இல்லை. வாங்கில் தான் பிரச்சனை'' என்று பதில் வந்தது.

''குணதிலக அவர்களே, வாங்கு வசதியீனமாயிருந்தால் யாராவது எனக்குத் தகவல் தந்திருப்பார்கள். சரி. விசாரித்து விட்டு வாங்கை மாற்றிப் போடுகிறேன்'' என்றார்.

''வாங்கில் ஒன்றும் பழுதில்லை ஆசிரியர் ஐயா, என் பையனுக்கு அருகில் அமர்த்தியிருக்கிறீர்களே அந்தப் பையனால் தான் பிரச்சனை''

''அவனுடைய பேரென்ன?''

''குணபால'' என்று அருவருப்போடு சொன்னார்.

''குணபால. குணபால. அவனைப் பற்றி ஒரு முறைப்பாடும் எனக்கு வரவில்லையே''

''அவனில்லை,அவனுடைய தகப்பன்...''

''குடும்பச் சண்டையா?''

''சீச்சீச்சீ... இதென்ன கதை. அவனென்ன சாதி? நாங்களென்ன சாதி? குடும் பமென்று சொல்லி என்னைக் கேவலப்படுத்து கிறீர்கள்!''

''அவனென்ன சாதி?''

குணதிலக, சொல்லக் கூடாத சொல்லொன்றைச் சொல்லுவது போல ''ரதா'' என்றார்.

''ஓ! அந்த குணபாலாவா? எங்களுடைய துணியெல்லாம் வெளுக்கிற ஆள். மகனையும் தெரியும். நல்ல பிள்ளை''

''இல்லை. என்னுடைய மகன் எளிய சாதிப் பையன் ஒருவனுக்குப் பக்கத்தில் இருந்து படிப்பதில் எனக்கு விருப்பமில்லை, வேறு வாங்குக்கு மாற்ற முடியுமா?''

''அதெப்படி?''

''சரி அந்த ரதாப் பெடியனை வேறு வாங்குக்கு மாற்ற முடியுமா?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எப்படி மாற்றுவது? சிங்கள எழுத்து முறைப்படி குணதிலக, குணபால, குணசேகர என்று தான் வரும்''.

''உங்களுடைய மகனை இப்படி ஒருவனுக்கு அருகில் வாங்கில் அமர விடுவீர்களா?'' என்று பதைப்புடன் குணதிலக கேட்டார்.

''விடுவேன்''.

''சொல்லுவீர்கள். ஆனால் எப்படியாவது இடம்மாற்றி அமர்த்தி விடுவீர்கள்''.

''குணதிலக அவர்களே. இனிப் போதும். நீர் போகலாம்'' என்று கண்டிப்புடன் சொன்னார் துணை அதிபர்.

குணதிலக அதிர்ந்து போனார். துணை அதிபர் தொடர்ந்தார். ''உங்களுக்கு ஒரு தகவல். என்னுடைய மகன் குணபாலவுக்கு மற்றப் பக்கத்தில் அதே வாங்கிலிருந்து தான் படிக்கிறான்''

குணதிலக தலையைக் குனிந்தபடியே வாசலை நோக்கி நடந்தார்.

''இதை மறந்து விட்டீர்கள்'' என்று அவர் கொண்டு வந்த பழச் சீப்பையும் வெற்றிலையையும் துணை அதிபர் குணதிலகவின் கைகளில் திணித்தார்.

இதெல்லாம் குணசேகரவுக்கு எப்படித் தெரியும் என்று கேட்டேன். தன்னுடைய தகப்பனார் தான் அந்தத் துரண அதிபர் என்று என்னிடம் பெருமையுடன் சொன்னார்.

என்னுடைய பேரை அழைத்தார்கள். குணசேகர கையசைத்து விடை கூறினார்.

*(கதை உண்மையின் அடிப்படையிலானது. பேர்கள் மாற்றப்பட்டுள்ளன)*

---

## இரவல் புருசன்

தாசி :

சின்னச் சின்ன றோட்டிலே
சீப்புச் சீப்பா வாழைப்பழம்
இன்பமாக ரோட்டிலே
இருவருமாய்த் தின்னலாம்

அவன் :

ஆத்தோரம் கொட்டாயம்
அத்தை மகள் குப்பாயி
குப்பாவி பட்ட பாடு
கொமரிப் பொண்ணேக் கேட்டுப்பாரு
ஆத்தோரம் தோட்டக் காலம்
அணியணியா வெத்திலையாம்
போட்டாச் செவக்கலியே
பொண்ணாளே உன் மயக்கம்
அஞ்சாறு வீட்டுக்காரி
அதிலே ஒரு பாட்டுக்காரி
பாட்டையும் பாடுவாளாம்
பசங்களையும் தேடுவாளாம்

குப்பாயி :
(காதலி)

சுத்தி பகிளிக் காரி
சுத்தாலை வீட்டுக்காரி
எட்டி எட்டிப் பார்த்தாலும்
இரவல் தாண்டி உன் புருசன்

**(சேலம் மாவட்டம்)**
**நாட்டார் பாடல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லாங்ஸ்ற்றன் ஹ்யூஸ் கவிதைகள்

## நீதி

நீதி என்பது ஒரு குருட்டு இறைவி எனக்
கறுப்பர்கள் நாங்கள் அறிந்திருக்கிறோம்
கட்டப்பட்டுள்ள துணி ஒருகாலத்தில்
கண்களாயிருந்திருக்கக் கூடிய
இரண்டு அழுகும் புண்களை மறைக்கிறது

## ஒரு தற்கொலைக் குறிப்பு

ஆற்றின்
அமைதியான குளிர்மையான முகம்
என்னிடம் ஒரு முகத்தைக் கோரியது

---

வனங்களின் முரசுகள் என் குருதியில் அதிர்கின்றன !
வனங்களின் வெம்மையான காட்டு நிலவுகள்
என் ஆன்மாவில் மின்னுகின்றன.
இந்த நாகரீகத்தை அஞ்சுகிறேன் -
இத்துணை கடியது,
இத்துணை வலியது,
இத்துணை இரக்கமற்றது.

## சில புத்திஜீவிகட்கு

நீ என் நண்பனல்ல
ஏனெனில் நான் ஏழை
கறுப்பன்,
அறிவிலி, மந்தமானவன் -
உன் மாதிரியல்ல
நீயாகவே
எனக்குச் சொல்லியிருக்கிறாய், எனவே —
என் நண்பனல்ல.

## இடப் பெயர்வு

தெற்கின் கருநிறச் சிறான் ஒருவன்
வடக்கின் பள்ளிக்கு வருகின்றான்
வெள்ளைச் சிறாருடன் விளையாட
அவனும் அஞ்சி இருக்கின்றான்.

முதலில் அனைவரும் இனிதாக
அவனுடன் பழகி வருகின்றார்
முடிவில் அவனை வருத்துகிறார்
''கறுப்பன்'' என்று அழைக்கின்றார்

கருநிறச் சிறுவரும் அவ்வாறே
காலஞ்சிறிது போனதன் பின்
அவனை வெறுக்கத் தொடங்குகிறார்

கரிய வட்ட முகமொன்றும்
பூக்கள் பின்னிய வெள்ளை நிற
கொலரும் அணிந்த அப் பையன்
சிறிய கரிய ஒரு சிறுவன்

அஞ்சிக்கிடக்கும் இச் சின்னச்
சிறானைப் பற்றி எவரேனும்
நாளை பற்றித் திசை காட்டும்
ஒருகதை புனையக் கூடிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடோனிஸ் கவிதைகள்

## நீ யார்?

என் கண்கள் ஒரு வண்ணத்துப் பூச்சிமேல்
அச்சம் என் பாடல்களைக் கசையாலடிக்கிறது

- நீ யார்?
- ஒரு முயற்சியில் உள்ளதொரு ஈட்டி
வழிபாடில்லாமல் வாழும் ஒரு தெய்வம்.

## ஆக்கிரமிப்பு

பறவைகள் எரிகின்றன:
குதிரைகள், பெண்கள், நடைபாதைகள்:
தமர்லேனின்* கைகளில் ரொட்டித் துணிக்கைகள்.

* தமர்லேன் (*Thamarlane*) திமுர் எனவும்
அறியப்பட்டவர். ஜெங்கிஸ்கானின் வம்சத்தவர்.

## பறவை

ஸினின் குன்றின் மீது
சமாதானத்திற்காக ஒரு பறவை
அழைத்திடக் கேட்டேன்.

அதன் பாடல்கள்
நகரின் கடுங்குளிரை
ஷவர அலகுகள் போல்
வெட்டிச் சென்றன.

## கோபுரம்

ஒரு அயலவன் வந்தான்
கோபுரம் அழுதது;
அவன் அதை வாங்கி உச்சியிலே
ஓரு புகைபோக்கியை வைத்தான்.

## ஏழு தினங்கள்

என் காதலையும் வெறுப்பையும்
அம்மா, ஏளனஞ் செய்யாதே
ஏழு நாட்களில் நீ ஆக்கப்பட்டாய்.
அலைகளையும் அடிவானையும்
பாடலின் கீர்த்தியையும் நீ ஆக்கினாய்

என் ஏழு நாட்களோ காயமும் காகமும்
ஏனிந்தப் புதிர்கள்
நானும் நின்போலக் காற்றும் மண்ணுமே.

## அக்கினி விருட்சம்

கசங்கிய இலைகளின் குடும்பமொன்று
ஒரு சுனையருகே விழுந்தது
அவை கண்ணீர்த்தேசத்தை வாட்டின
நீரிடம்
அக்கினி ஏட்டை வாசித்தன
என் குடும்பம் எனக்காகக் காத்திருக்கவில்லை.
அவர்கள்
நெருப்பையோ அடையாளத்தையோ
விட்டுச் செல்லவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## படிக்கட்டு *

சுகந்த பட்டாச்சார்யா (1926 -1947)

நாங்கள் படிக்கட்டின் படிகள்.
மேலும் பெரிய உச்சங்களை எட்டுவதற்காக
நீங்கள் அன்றாடம் எங்களை மிதிப்பீர்கள்,
அதன்பின் திரும்பியும் பார்க்க நினைக்க மாட்டீர்கள்.
உங்கள் பாதத்திலிருந்து உதிரும் தூசை மட்டுமா,
அவை மேலும் மேலும் விரைகையில்
அவை உதைத்து எழும் அதைப்புக்களையும் தழும்புகளையும்
நம் மார்போடு அணைத்துக் கொள்ளுமளவுக்கு
நம் மார்போடு அணைத்துக் கொள்ளுமளவுக்கு
நாம் குப்புறக் கிடந்து நாம் ஆசீர்வதிக்கப்பட்டோரென நினைக்கிறோம்.

எங்களுடைய நிலைமை
உங்களுக்குத் தெரியாது என்றில்லை.
அதனாலேதான் உங்கள் கொடுமைகளின் சுவடுகளை மூட
எங்கள் காயங்களை ஒரு கம்பளச் சுருளால்
மூடப் பார்க்கிறீர்கள்.
உங்கள் திமிர்பிடித்த பாதங்களின் மிதிப்பின்
நொருங்கல் ஓசையை உலகம் கேளா வண்ணம்
நீங்கள் அந்த ஓசையை அடக்குவீர்கள்.

என்றாலும், இந்த உண்மைகளை
நெடுங்காலம் உலகறியாமல் வைத்திருக்க
உங்களால் இயலாது என நிச்சயமாய் அறிவோம்.
எங்களை நீங்கள் எவ்வாறு மிதித்துக் கொண்டே போனீர்கள்
என்று உலகம் அறிய வரும்.
ஒரு நாள், ஒரு வேளை
நீங்கள் உங்கள் அடி தவறி, யாரறிவார்,
மொகலாய மா மன்னன் ஹுமாயூனைப் போல,
தடுக்கி விழக் கூடும்.




வங்காளியிலிருந்து ஆங்கிலத்துக்கு:-
க்ஷிதிஷ் ராய்
ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு:-
மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org